வரலாறும் வாழ்வும்

முனைவர் க.த.திருநாவுக்கரசு

வெளியீடு :
மணியகம்
3/30 இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம்,
கோட்டூர்புரம், சென்னை 600 085.
செல்பேசி : 94444 53737

வரலாறும் வாழ்வும்

முனைவர் **க.த.திருநாவுக்கரசு**
M.A., (Tamil), M.A., (History),
M.Lit., Dip.Ing., Ph.D.,

வெளியீடு
மணியகம்
3/30 இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்
சென்னை - 600 085.
செல்பேசி : 94444 53737

நூற் குறிப்பு

பெயர்	:	வரலாறும் வாழ்வும்
ஆசிரியர்	:	முனைவர் க.த.திருநாவுக்கரசு
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	1960, மீனாட்சி பதிப்பகம், கீழ இராச வீதி, புதுக்கோட்டை
மறு பதிப்பு	:	அக்டோபர் 2025
நூல் அளவு	:	டெம்மி 1/8
படிகள்	:	25 பிரதிகள்
எழுத்துரு	:	டாம்.இளங்கோ, எழுத்தளவு 10.5
பக்கங்கள்	:	IV + 140
ஒளிஅச்சு	:	ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், மதுரை. 9842293915
வெளியீடு	:	**மணியகம்** 3/30, இரண்டாவது பிரதான சாலை கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம், சென்னை – 600 085. செல்: 94444 53737
அச்சகம்	:	அரசு ஆர்ட்ஸ் 78, ஸ்ரீனிவாச பெருமாள் சன்னதி, முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை–14.

இலவச வெளியீடு

ISBN : 978-93-48345-97-4

முதற்பதிப்பின் முன்னுரை

உலகில் பல்வேறு காலங்களில் பல்வேறு நாடுகளில் தோன்றிய சான்றோர்கள், மக்களின் வாழ்வில் உண்டாகும் சிக்கல்களையும் நெருக்கடிகளையும் தவிர்ப்பதற்கும், தீர்ப்பதற்கும் உரிய வழிவகைகளைப் பற்றிக் கருதிய கருத்துக்களின் தொகுப்பே மக்களின் வரலாறாகும். மக்களினம் வாழும் நாட்டாலும், பேசும் மொழியாலும் பல இனங்களாகப் பிரிந்து வாழ்கின்றது. ஒரு நாட்டு மக்களுடைய வாழ்வு, காலத்திற்கேற்ப மாறுவதோடு அவர்கள் கொண்டிருந்த கருத்துக்களும் மாற்றமுறுவது இயல்பு. ஆனால், அம் மக்களிடையே சிறப்புமிக்கதாக விளங்கும் தனிப் பண்பு அவர்கள் வாழ்வில் இடையறாது என்றும் ஊடுருவிச் செல்வதைக் காணலாம்.

தமிழ் மக்களுடைய வாழ்வினைக் கூர்ந்து நோக்குவார்க்குக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக அவர்களுடைய நாகரிகப் பண்பாட்டில் ஊடுருவிச் செல்லும் ஓர் ஒப்பற்ற பண்பு எளிதில் புலனாகும். ஆனால், அப்பண்பு தமிழர் வாழ்வில் வீறுபெற்று விளங்கிய காலமும், நலிந்து மெலிந்து சீர்குன்றிய காலமும் உண்டு. அப் பண்பு தமிழரிடமிருந்து அடியோடு அழிந்து விடாத காரணத்தினால்தான் இன்றும் தமிழன் வாழ்கிறான்; தமிழர் நாகரிகம் 'மங்கியதோர் நிலவாக'வேனும் காட்சி தருகிறது. உயிராற்றல் வாய்ந்த 'அப்பண்பு' என்ன என்பதை ஆராய்ந்தறிய முயல்வதே இந்நூல்.

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் நான் தமிழாசிரியனாகப் பணியாற்றியபொழுது இந்நூலினை எழுதினேன். இந்நூலுள் காணப்படும் கருத்துக்களுக்கு யானே பொறுப்பு. அவை எவ்வகையிலும் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தா. இந்நூல் அரசாங்கத்தின் பணித்துறைச் சார்பான வெளியீடன்று. இதனைப் பதிப்பிக்க அன்புகூர்ந்து இசைவு தந்தருளிய தமிழகத்தின் மாநிலக் கல்வி இயக்குநருக்கு எனது உளங்கனிந்த நன்றி என்றும் உரியதாகும்.

எனது முயற்சிக்கு ஊக்கம் தரும் வகையில் இந்நூலினை வெளியிட முன்வந்த புதுக்கோட்டை மீனாட்சி பதிப்பகத்தாருக்கு என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

ஆசிரியன்.

உள்ளுறை

I. அறம்

1. வரலாறும் வாழ்வும் 2
2. வாழ்வில் மலர்ந்த வரலாறு 15
3. கடமை உள்ளம் 30
4. அறத்தின் ஆற்றல் 39
5. தமிழன் கண்ட கனவு 52

II. அன்பு

1. அறத்தின் வீழ்ச்சி 61
2. அன்பின் ஒளி 74
3. பல்லவர் காலத் தமிழகம் 81
4. சோழர் காலத் தமிழகம் 90
5. கம்பன் கண்ட கனவு 101

III. அருள்

1. அடிமை விலங்கு 105
2. உலைக் கூடம் 112
3. வாடிய பயிர் 114
4. மனிதம் 117

I. அறம்

1. வரலாறும் வாழ்வும்

வரலாறும் இலக்கியமும்:

வரலாறு கடந்த காலத்தின் கன்னிகை; நிகழ்காலத்தின் மனைவி; வருங்காலத்தின் தாய். அவளுடைய கன்னிப்பருவத்தின் இன்பக் கனவுகளை, எழில்மிகு கற்பனைகளை எடுத்தியம்புவதே இலக்கியம்.

மக்களினத்தின் கதையைக் கற்பனை கலவாது எடுத்துரைப்பதே வரலாறு. போர்வெறி கொண்ட சிலர் வீரத்தின் பெயரால் போர்க்களத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலியிடும் துன்பக் கதையினைக் கூறுவதே வரலாறு என்று கருதிய காலம் மாறிவிட்டது. அரசர்களின் அந்தப்புரங்களில் இருந்த ஆயிரக்கணக்கான ஆரணங்குகள் கற்பழிக்கப்பட்ட தொடர்கதையே வரலாறு என்று போற்றிய காலம் போய்விட்டது.

இன்று வரலாற்றிற்குத் தரப்படும் விளக்கம் புதுமையானது; சிந்திக்கத்தூண்டுவது; சிறந்த குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு விளங்குவது. ஆரவாரமில்லாது நிலைத்த வளர்ச்சியுற்ற மக்கள் சமுதாயத்தின் சமூக வாழ்வியல் வளர்ச்சியைப் பற்றியும், மக்கள் கொண்ட கடவுள் நம்பிக்கையின் பயனாய்த் தோன்றிய சமயத்தின் வளர்ச்சியைப் பற்றியும், அன்றாட வாழ்வில் அவர்கள் உண்ட உணவு, உடுத்திய உடை, தங்கி வாழ்ந்த உறையுள் பற்றியும், அவற்றைப் படைத்து, அளித்துக் காத்துப் பிறரோடு பகிர்ந்து கொண்ட பண்பாட்டைப் பற்றியும், பிற நாட்டினரோடு கொண்ட வாணிகப் பண்பாட்டுத் தொடர்புகள் பற்றியும், ஓய்வு நேரத்தில் அவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்து போற்றி வளர்த்த கலைகளைப் பற்றியும் விரித்துரைப்பதாக, நாகரீகப் பண்பாட்டின் படப்பிடிப்பாக விளங்குவதே வரலாறு என்பது டாக்டர் தாயின்பி போன்ற அறிஞர்களின் கருத்தாகும். இத்தகைய வரலாற்று நூல்தான் இக்காலத்தில் போற்றப்படுகிறது.

வரலாற்றின் மூலங்கள் பலவகைப்படும். பழம்பொருள் சின்னங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்கள், புதைபொருள்கள், இலக்கியங்கள், அயல்நாட்டார் எழுதிவைத்துள்ள குறிப்புக்கள் போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் மிக முக்கியமானதும், முதன்மையானதும் இலக்கியம் எனலாம். நம்முடைய நாட்டு வரலாற்றினை வரைவதற்கு இலக்கியங்களே பேரளவு துணைபுரிகின்றன.

மக்களுடைய வாழ்க்கையை, அடுத்தது காட்டும் பளிங்குபோல் படம்பிடித்துக் காட்டவல்லது இலக்கியம். 'மக்களுடைய வாழ்க்கையின் மதிப்புரையே இலக்கியம்' என்னும் கருத்து இதனைத் தெளிவுறுத்துகின்றது. மக்களுடைய வாழ்க்கையை விளக்கும் இலக்கியத்திற்கும், அவ் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்படும் வரலாற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

வரலாறும் இலக்கியமும் இணை பிரியா இரு சகோதரிகள். இலக்கியங்கள் யாவும் பண்டை மக்களுடைய வாழ்வோடும், வரலாற்றோடும் இணைந்தும் இழைந்தும், இரண்டறக் கலந்தும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. கார்லைல் என்னும் ஆங்கிலநாட்டு அறிஞர் 'வரலாறு என்பது உண்மையில் இலக்கியமேயாகும். உண்மை நிகழ்ச்சிகள் நன்முறையில் விளக்கப்படுமானால், கற்பனைக் காவியத்தைவிடச் சுவையும், சிறப்பும் மிக்கதாய் வரலாறு விளங்கும்' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

பழமையினின்று அரும்புவதே புதுமை. புதுமைக்கருத்துக்கள் பூத்துக் குலுங்கும் இக்காலத்தில், அப்புதுமைக் கருத்துக்களின் உள்ளார்ந்த பண்பினை நன்குணர்ந்தால்தான், நல்லதொரு சமுதாயத்தை வருங்காலத்தில் அமைக்க முடியும். புதுமையைப் பற்றி அறியவேண்டும் என்றால், அவளைப் பெற்றெடுத்துப் பாலூட்டிச், சீராட்டி வளர்த்த அன்னையாகிய பழமையைப் பற்றி ஓரளவிற்குத் தெரிந்து கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.

பழமையின் நாட்குறிப்பே வரலாற்று ஏடு. அவ்வரலாற்றேட்டைப் புரட்டினால், நாம் பழமையின் பண்பு நலன்களை அறியலாம். புதுமையின் தோற்றத்திற்குத் தூண்டுதலாக இருந்த - ஏற்றதாக அமைந்த - புறச் சூழல்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம். மேலும் பழமையின் நாட்குறிப்பைப்

புரட்டுவதனால் நமக்கு ஊக்கமும் உற்சாகமும் பிறக்கும்; புத்துணர்ச்சியும் புன்முறுவலும் உண்டாகும்.

மும்மணிகள்:

மனிதன் உணர்ச்சியே வடிவான விலங்கு நிலையிலிருந்து உள்ளத்தால் படிப்படியாக வளர்ந்து, எண்ணத் தெரிந்து, அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் உயர்ந்த வாழ்க்கை நிலையை இன்று அடைந்துள்ளான். ஆயினும் மனிதன் உணர்ச்சியின் பிண்டமாகவே இன்றும் இருக்க விரும்புகிறான். உணர்ச்சி வயப்படுகிறபொழுது விலங்காகவே மாறிவிடுகிறான். தனக்கெனத் தனிச் சிறப்பாகப் பெற்று இருக்கும் சிந்திக்கும் திறனை இழந்து விடுகிறான்; விலங்குகளுக்கு இல்லாத 'பகுத்தறிவைப்' பறிகொடுத்து, உணர்ச்சிக்கு அடிமையாகி விடுகிறான். அதன் பயனாகச் சொல்லொணாத் துன்பத்திற்காளாகி அல்லலுறுகிறான். துன்பக் கடலிலிருந்து கரையேற வழியறியாது ஏங்குகிறான். இது தொன்றுதொட்டு இருந்துவரும் மனித இயற்கை.

மனித இயற்கையின் வன்மை மென்மைகளைக் கண்டு அஞ்சாது, அவற்றிற்குரிய காரணங்களை ஆராய்ந்தறிவதையே தங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த சான்றோர்கள் பலர். அவர்கள் பல்வேறு காலங்களில், பல்வேறு நாடுகளில் தோன்றினர். அல்லும் பகலும் மனித இயற்கையைப் பற்றிச் சிந்தித்தனர்; ஆராய்ந்தனர். இறுதியில் தங்கள் சிந்தனையின் முடிவை - தாங்கள் பெற்ற அறிவொளியை உலகிற்கு எடுத்துரைத்தனர். அவர்கள் அறிவுறுத்திய அறவுரைகள் அனைத்தையும் (1) அறத்தை நம்பு, (2) பிற உயிர்களிடம் அன்பாயிரு, (3) தொண்டுள்ளத்தோடு வாழ் என்னும் மூன்று கொள்கைகளுள் அடக்கி விடலாம். பன்னெடுங்காலமாக இம் மணிகள் மூன்றும் மக்களினத்தின் சிறந்த குறிக்கோள்களாக இருந்து வருகின்றன. சிற்சில சமயங்களில் இவற்றுள் ஒன்று முதலிடம் பெற்றும், ஏனைய இரண்டும் அதற்கு உறுதுணையாகவும் இருந்தன; இருந்தும் வருகின்றன.

மக்கள் வாழ்க்கை எத்துணை மாற்றம் அடைந்தாலும், அறிந்தோ அறியாமலோ இம் முப்பெரும் நோக்கங்கள் அவர்கள் வாழ்க்கையில் ஆழ வேரூன்றிப் பதிந்துள்ளதைக் காணுகிறோம்.

தமிழர் தம் வாழ்வில் மலர்ந்த வரலாற்றிலும் அறத்தின் ஆட்சியை, அன்பின் பெருக்கை, தொண்டின் சிறப்பைச் சிறக்கக் காணலாம்.

அறிவியல் முன்னேற்றத்தால் அண்டத்தையும் (Universe) அளந்து பார்க்க மனிதன் முனைகிறான். எனினும், அவன் உள்ளத்திலிருந்து வெளிவரும் அமைதியற்ற 'சலசலப்பைக்' கேட்கிறோம். 'வெற்றிப் புன்னகையோடு பீடுநடை போட வேண்டிய மனித இனம், ஏதோ வாய்விட்டுச் சொல்ல முடியாது முணுமுணுத்துக் கொண்டிருப்பது ஏன்?' என்னும் ஐயம், உண்மையை ஆராய்ந்தறிய விரும்பும் மக்களிடையே எழுந்த வண்ணம் இருப்பதை உலகம் நன்கறியும். உண்மையை உணர்ந்தவர்களுள் பலருக்கு அதை எடுத்துக்கூற உள்ள உரமில்லை. அண்ணல் காந்தி, அல்பர்ட் சுவைட்சர், பெட்ராண்ட் ரசல் போன்ற சான்றோர்கள் அவ்வப்போது மக்கள் மன்றத்தில் அஞ்சாது உண்மையை எடுத்துரைத்தனர். எதிர்காலத்தில் விளையக்கூடிய தீமையைக் குறித்து எச்சரிக்கை செய்தனர்; செய்தும் வருகின்றனர். அவர்களுடைய குரல்கள் என்றும் கேளாக் குரல்களாகவே இருந்து வருகின்றன. கடந்த நூற்றாண்டுவரை மக்கள் அறத்திடங் கொண்டிருந்த நம்பிக்கை, இந்நூற்றாண்டில் பெரிதும் நெகிழ்ந்து கொண்டு வருவதை அவர்கள் சுட்டிக்காட்டியும் வருகின்றனர். அறத்தில் கொண்டிருந்த நம்பிக்கை குலைந்தமையால், அன்போடு பிறரிடம் பழகுவதும் அழிந்தது; கைம்மாறு கருதாது தொண்டு செய்யும் தூய உள்ளமும் பாழடைந்து; வெறும் ஆரவாரமிக்க போலித்தொண்டு உலகில் தலை விரித்தாடுகிறது.

'இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால், மனிதன் மனிதனாக வாழ்வானா? அல்லது.....?' என்னும் அச்சம் மக்கள் உள்ளத்தே ஊடுருவிப் பாய்கிறது. 'இக்கொடிய நோயினைத் தீர்க்க வழி கிடையாதா?' என ஏங்கும் மக்கள் பலருடைய குரல்கள் நம் செவியில் விழுந்தவண்ணம் உள்ளன. இந் நோயைப் போக்குவதற்கு - இல்லை!- தணிப்பதற்கு ஒரே மருந்து - ஒப்பற்ற மருந்து 'மும்மணிகள்தான்!' வாழ்ந்து காட்டிய அச் சான்றோர்கள் வழியில் சென்றால்தான் மக்களினம் அமைதியும் ஆறுதலையும் பெற முடியும்.

மக்களினத்தின் ஒரு பெரும் பிரிவினராகிய இந்திய மக்கள் சான்றோர்கள் காட்டிச் சென்ற பழைய பாட்டையிலே செல்லுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அவர்களும்

உண்மையின் நிழலையே, உருவம் என்று தவறாக நம்பி இன்னலுறுகின்றனர். இந்தியப் பெருங்குடி மக்களுள் தொன்மை நாகரீகச் சிறப்பு வாய்ந்த தமிழர்களும் 'மின்னுவது எல்லாம் பொன்' என நம்பி, தங்களுக்குள்ளேயே 'பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும்' வளர்த்து வருகின்றனர்.

இந்நிலையில் தமிழர்களாகிய நாம், நமது முன்னோர்களின் கடந்தகால வாழ்க்கையைக் கூர்ந்து ஆராய்ந்து, அவர்கள் வாழ்வில் மலர்ந்த வரலாறு காட்டும் படிப்பினைகளைப் பொன்போல் போற்றி, அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவோமானால், ஒளி படைத்த கண்ணும், உறுதிகொண்ட நெஞ்சும், களிபடைத்த மொழியும், தெளிவு பெற்ற மதியும், ஏறு போன்ற நடையும் உடைய நல்லதொரு தமிழ்ச் சமுதாயத்தை வருங்காலத்தில் காணமுடியும்.

வாழ்வின் அடிப்படை

தமிழினத்தின் தொன்மை

மக்களினம் பரந்தும் விரிந்தும் விளங்குவது. மக்களினத்தின் பல பிரிவுகளுள் பண்டைக் காலத்துச் சீரும் சிறப்பும் பெற்றுச் சிறந்தவை சில. அச் சிலவற்றுள்ளும் நாகரிகத்தின் இழையறாது - உயிர்த் துடிப்புக் குன்றாது நின்று நிலவி வருவது இரண்டு. அவற்றுள் வளம் குன்றி, ஒளியிழந்து, பொலிவற்று, ஆனால் அழிந்தொழியாது இன்றும் உயிர்த்துடிப்போடு உள்ளது நம்முடைய தமிழ் நாகரிகம். இது வெறும் புகழ்ச்சி அன்று; உண்மை. வெறும் உண்மை அன்று; சரித்திரம் சான்றுகள் தந்து விளக்கும் உண்மை.

உலகப் பழம்பெரும் நாடுகளுள் தமிழகம் ஒன்று. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பே இதனை எடுத்தியம்புகிறது. மண்ணியலார் உலகம் தோன்றி வளர்ந்த காலத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து, அதன்கண் உயிரினங்கள் தோன்றி வளர்ந்த கால அளவையும் குறிப்பிட்டுள்ளனர். உலகில் முதன் முதல் பாறைகள் தோன்றிய காலத்தை **'ஆர்க்கியன் ஊழி'** என்பர். அக்காலத்தில் உலகம் கொடிய வெப்பம் வாய்ந்த அனற் பிழம்பாக இருந்தது. உயிர்கள் ஒன்றுமே தோன்ற முடியாத அளவிற்குக் கொடிய வெப்பமுடையதாக இருந்தது என்பர் மண்ணியலார். அக்காலத்தில் தோன்றிய

பாறைகள் பல தமிழகத்தில் இன்றும் இருப்பதாக மண்ணியலார் (Geologists) கூறுகின்றனர். இதனைக் 'கல் தோன்றி மண்தோன்றாக் காலம்' எனலாம். அத்தொல் பழங்காலத்திலேயே தமிழ்நாட்டில் மலைகள் தோன்றின என்பதை அறியும்பொழுது, தமிழகத்தின் 'காலம் கடந்த பழமை' நமக்கு வியப்பும் விம்மிதமும் அளிக்கிறது.

இந்த உலகில் மனிதன் என்று தோன்றினான் என்பதைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள், முப்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனுடைய எலும்புகள் 'கல்மாறிகளாக' (Fossils) இன்று உலகின் பல பகுதிகளில் கிடைத்துள்ளதைக் கொண்டு மனிதன் தோன்றி முப்பதினாயிரம் ஆண்டகளாகி இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

மனித இனம் முதன்முதல் தோன்றிய இடங்கள் சில. அவற்றுள் தமிழகமும் ஒன்று. "வட இந்தியாவில் காணப்படுவதைப் போல் எரிகுழம்பு எழுந்து படிந்தமைக்கோ, நிலநடுக்கங்கள் ஏற்பட்டமைக்கோ அறிகுறிகள் ஒன்றும் தென்னிந்தியாவில் காணப்படவில்லை. ஆதலின், உலகம் தோன்றிய காலத்தில் குழம்பாக இருந்த மண் முதலில் குளிர்ந்து அமைந்த நிலப்பகுதி தென்னிந்தியாவாகும். இவ்விடத்தில் ஆதி மனிதன் தோன்றி இருக்கலாம்" என்று மண்ணியல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

உலகம் தோன்றி வளர்ந்த காலத்தில், அதனுடைய பகுதிகள் பலவற்றைக் கடல் கொண்டதென்று மண்ணியல் ஆராய்ச்சியால் தெரியவருகிறது. இக்கடல்கோள்களைப் பற்றிய கதைகள் ஒவ்வொரு நாட்டிலும் வாழுகின்ற மக்களின் இன மரபு வரலாற்றோடு இணைத்துத் தொன்றுதொட்டுக் கூறும் வழக்கம் இருந்துவருகிறது. பழந்தமிழ் இலக்கியத்தில் இத்தகைய கடல் கோள்களைப் பற்றிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. மூன்று தமிழ்ச்சங்கங்களைப் பற்றிய வரலாறு, கடல்கோள்களைப் பற்றிய கதைகளோடு இரண்டறக் கலந்துள்ளன. இன்றைய தமிழகத்தின் தெற்கே தொல் பழங்காலத்தில் ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது. அங்கே பல ஆறுகளும் மலைகளும் இருந்ததோடு, பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட பல நாட்டுப்பிரிவுகள் இருந்தன என்பதும் தெரிய வருகிறது. கடல் கொந்தளிப்பினால் அப்பெரும் நிலப்பரப்பு கடலுள் மறைந்ததை

“வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள”

என்று சிலப்பதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. கடல் கொண்ட தென்னாட்டைக் ‘குமரி நாடு’ என்று குறிப்பிடும் மரபு பண்டைக்காலம் முதல் தமிழகத்தில் இருந்து வருகிறது. இக்கால மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் இதனை ‘லெமூரியா’ என்று பெயரிட்டு அழைக்கின்றனர். கடல் கொள்ளப்பட்ட தென்னாட்டைப் பற்றிய குறிப்புக்கள், இலங்கையின் பழங்கால வரலாற்று ஏடான ‘மகா வமிசத்தில்’ காணப்படுகின்றன.

தமிழினத்தின் தொன்மைக்குச் சிறந்ததொரு உரைகல்லாக விளங்குவது சிந்துவெளி நாகரிகமாகும். இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, வடமேற்கு இந்தியாவில் உள்ள மொகஞ்சோதாரோ, ஆரப்பா ஆகிய இடங்களில் பெரும் சிறப்புமிக்க நாகரிகத்தோடு வாழ்ந்த மக்கள் இன்றைய தமிழர்களின் மூதாதையர் என்பதை மேனாட்டறிஞர்கள் சான்றுகள் தந்து நிறுவியுள்ளனர். சிந்துவெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடிபாடுகளுள் கிடைத்த பழம் பொருள்கள் பலவற்றுள், தென்தமிழ் நாட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பொருள்கள் பேரளவில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிந்துவெளி மக்கள் பேசிய மொழியின் வரிவடிவமாகிய எழுத்துக்கள், தமிழ்மொழியின் வட்டெழுத்துக்களுக்கு முன்னோடிகளாக இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டு வியப்புற்றனர். ஆகவே, தமிழ்மொழியின் தொன்மையைப் பற்றியும், அம்மொழியைச் சங்கம் வைத்துப் பேணிக் காத்து வளர்த்த தமிழினத்தின் பழமையைப் பற்றியும் கணக்கிட்டுக் கூற இயலுமோ?

மறைந்து மண்மேடிட்டுப்போன பழம் பெரும் நாகரிக நாடுகளான பாபிலோனியா, எகிப்து, சுமேரியா போன்ற நாடுகளோடு, தமிழ்மக்கள் கி.மு.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாணிகத் தொடர்பு கொண்டிருந்தமை, அந்நாடுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்களால் தெரிய வருகிறது.

சிந்துவெளி நாகரிகத்தின் அழிவிற்குக் காரணமாக இருந்த ஆரியர்களின் புனித நூல்களான வேத, இதிகாசங்களில் தென்னாட்டைப் பற்றியும், தென்னாட்டு மக்களின் வாணிகத்தைப்

பற்றியும் குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. இவை யாவும் தமிழினத்தின் தொன்மையைத் தெளிவாக விளக்குவதோடு, முதிர்ச்சியுற்ற நிலையில் திகழ்ந்த தமிழ் நாகரிகத்தின் சிறப்பையும் எடுத்தியம்புகின்றன.

தமிழர் நாகரிகத்தின் சிறப்பு

ஓரின மக்கள் பன்னெடுங்காலமாக உலகில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதனால் மட்டும், அவர்களை மாண்புமிக்க இனத்தைச் சார்ந்தவர்கள் என்று அறிஞர்கள் போற்றுவதில்லை. நீக்கிரோக்கள் இனம் நமது நினைவிற்கு எட்டாத தொல் பழங்கால முதல் இருந்து வருவதாகத் தெரிகிறது. ஆயினும், அவர்கள் நாகரிகத்தின் முதற்படியிலேயே இந்நூற்றாண்டின் தொடக்கம் வரை இருந்து வந்தனர். இக்காரணத்தால் நீக்கிரோ இனம் சிறப்புடையதாகக் கருதப்படவில்லை.

காடுகளிலும் மலைகளிலும் ஆடையின்றித் திரிந்த ஆதிமனிதன் நிலையிலிருந்து படிப்படியாக வளர்ச்சியுற்று, எண்ணத் தெரிந்து அறிவைப் பெருக்கிக், கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் உயர்ந்த நிலையினை அடைந்தான் மனிதன். பிறகு மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் கொண்ட நாடு நகரங்களை அமைத்து, அவற்றைக் காக்க நல்லதொரு அரசினை அமைத்து வாழ்வாங்கு வாழத் தொடங்கினான். மக்களின் வரலாற்றில் இதை 'நாகரிகத்தின் மலர்ச்சி' என்பர்.

நானிலமும் நாகரிக நிலைகளும்:

பண்டைத் தமிழர், உலகினை நான்கு வகைப்பட்ட நிலங்களாகப் பிரித்து 'நானிலம்' என்று பெயரிட்டழைத்தனர். இந்நானிலப் பாகுபாடு பண்டைத் தமிழரின் நாகரிக வளர்ச்சியினைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. மலை முழைஞ்சுகளில்தான், முதன்முதல் தோன்றிய ஆதிமனிதன் வாழ்ந்ததாகக் கூறுவர் மக்களின் நூலார். தமிழ் நாகரிகத்தின் தோற்றம் மலையும் மலைசார்ந்த பகுதியுமாகிய குறிஞ்சிநிலத்தில் என்பதைப் பழந்தமிழ் நூல்கள் எடுத்துரைக்கின்றன. மலையில் தோன்றிய மனிதன் படிப்படியாக நாகரிக வளர்ச்சியுற்று வாழ்ந்ததை விளக்குவதே, பழங்கற்காலப், புதுக் கற்கால நாகரிகங்கள். அக்காலத்தில் மனிதன் வாழ்ந்த நிலையைக் குறிஞ்சி நில மக்கள் வாழ்க்கையைக் கொண்டு அறியலாம். மலையில் தோன்றிய மனித

இனம் பெருக்கமடைந்து, மலையினின்று இறங்கி மலையடிவாரத்தில் உள்ள காடுகளில் வாழத் தொடங்கியதை வரலாற்றேடுகள் நாகரிக வளர்ச்சியின் மூன்றாம் நிலையெனக் கூறும். அக்காலத்தில் மக்கள் பல குழுக்களாகக் கூடி ஒரு சமுதாயமாக வாழக் கற்றனர். காட்டு வெளிகளில் ஆடு மாடுகள் மேய்த்து அமைதியாக வாழ்ந்தனர். வெறும் கற்களால் செய்யப்பட்ட கருவிகளையே இதுவரை பயன்படுத்திய மக்கள், செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களைப் பயன்படுத்த அறிந்தனர், அதனால், இக்கால நாகரிகத்தைச் 'செம்பு வெண்கலக் கால நாகரிகம்' என்று கூறுவது மரபு. பழந்தமிழன் 'முல்லை நிலத்தில்' வாழ்ந்த வாழ்க்கையே செம்பு, வெண்கலக் கால நாகரிகமாகும்.

பன்னெடுங்காலத்திற்குப் பிறகு மக்களினம் ஆற்றுவெளிகளில், வயல் சூழ்ந்த நிலப்பரப்பில் நாடு நகரங்களையும் கோட்டை கொத்தளங்களையும் அமைத்துக், கலைகளை வளர்த்து கருத்து வகையால் உயர்ந்த நிலையினை அடைந்தனர். உழவுத் தொழிலோடு வேறு பல தொழில்களும் செய்து மக்கள் அமைதியும் இன்பமும் நிறைந்த வாழ்க்கையை நடத்தினர். அவர்கள் இரும்பின் பயனை அறிந்து இரும்பினால் தற்காப்பிற்கு வேண்டிய கருவிகளும், தத்தம் தொழிலுக்குத் தேவையான கருவிகளையும் செய்துகொண்டனர். இதனால் இக்காலம் 'இரும்புக்கால நாகரிகம்' எனப் போற்றப்படுகிறது. இரும்புக்கால நாகரிகம் 'மருதநில நாகரிகத்தின்' மறுபதிப்பே - மாற்றுருவேயாகும். மருதநில நாகரிகம், மக்கள் இனம் 'நாகரிகத்தின் கொடுமுடியை' எட்டிப்பிடித்த எழில்மிக்க பொற்காலமாக இன்றுவரை இருந்து வருகிறது. உலகப் பழம்பெரும் நாகரிகங்கள் எனப் போற்றப்படுவன யாவும் ஆற்றங்கரையில் (மருத நிலத்தில்) தோன்றிய நாகரிகங்களே என்பது கருதத்தக்கது. தமிழர்களின் 'பொற்காலமெ'னப் போற்றப்படும் 'சங்க காலம்' மருதநில நாகரிகத்தின் உச்சநிலையை வரையறுத்துக் காட்டுவதாகும்.

ஆற்றங்கரையிலே வாழ்ந்த மக்கள், ஆற்றிலே படகினைச் செலுத்தி வாழ்ந்து வருங்கால், ஆறு கடலில் கலக்கும் கடற்கரைப் பகுதிகளில் சென்று குடியேறத் தொடங்கினர். உள்நாட்டில் வாழ்ந்துவந்த மக்கள் இவ்வாறு கடற்கரையில் குடியேறியதோடு நின்றுவிடாது, அலைகடலினைக் கண்டு அஞ்சா உள்ள உரம் படைத்தவராய் மரக் கலங்களைத் திரை கடலில் செலுத்திச் சிறந்த

கடல் மறவராய் பேரும் புகழும் பெற்றனர். கடல்களுக்கு அப்பால் உள்ள பல அயல்நாடுகளோடு வாணிகத் தொடர்பும், கலை, பண்பாட்டுத் தொடர்பும் கொண்டு வளமிக்க வாழ்க்கை நடத்தினர். ஒரு நாட்டு மக்கள் இன்னொரு நாட்டிற்குச் சென்று வாணிகம் காரணமாகிக் குடியேறினர். இதனால் ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்திற்கும், பிறிதொரு நாட்டு மக்களின் நாகரிகத்திற்கும் தொடர்பு உண்டாயிற்று. இத்தகைய தொடர்பின் காரணமாக, வாழ்க்கை நெறிமுறைகளில், பழக்க வழக்கங்களில் கொடுக்கல் வாங்கல் தோன்றி நாகரிகக் கலப்பு உண்டாயிற்று. இதுதான் இன்றைய உலக நாகரிக நிலை. இதே நாகரிகநிலையினை 'நெய்தல் நில நாகரிகத்தில்' காணுகின்றோம். காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, முசிறி, பொதுகைப் பட்டினம் போன்ற நகரங்கள் பழங்காலத்தில் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்ததோடு முதிர்ந்த நாகரிக நிலையை அடைந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்று மக்களினம் நாகரிக உலகை நோக்கிப் புறப்பட்ட வாழ்க்கைப் பயணத்தின் நான்கு எல்லைக் கற்களாக விளங்கும் 'நாகரிக நிலைகள்' பண்டைத் தமிழர் தம் வாழ்க்கையோடு இணைந்த நிலத்தின் பாகுபாடாக இன்றுவரை இருந்து வருவது சிந்தித்தற்குரியதாகும்.

இந்தியத் தொன்மொழி:

இன்று இந்திய மக்களால் பேசப்படும் மொழிகள் இருநூற்றுக்கு மேற்பட்டன. அவற்றுள் பதினான்கு மொழிகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் சிறந்தவை எனப் போற்றப்படுவன. அவற்றுள்ளும் பன்னெடுங் காலமாகப் பேசப்படும் மொழி, இலக்கிய வளமிக்க மொழி, சிறந்த பண்பாட்டின் ஊற்றாய் விளங்கும் மொழி, உலகப் பழம்பெரும் நாகரிகங்களோடு தொடர்பு உள்ளதாகத் திகழும் ஒரு மொழி நம் தமிழ் மொழியேயாகும். பிறமொழிகளின் தோற்றம், வளர்ச்சி எல்லாம் கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்குள் அடங்கி விடுவனவாகும்.

இந்தியப் பண்பாட்டில் தமிழ்க் கூறுகள்:

இந்தியப் பண்பாடு உலகத்திற்கே வழிகாட்டக்கூடிய சிறந்த பண்பாடு என்று மாக்ஸ்முல்லர் போன்ற அறிஞர்கள்

மொழிந்துள்ளனர். இந்தியப் பண்பாட்டின் சிகரமாக விளங்குவது அன்புநெறி (பக்திநெறி). அன்பே வடிவாக இறைவன் விளங்குகிறான். அவனுடைய படைப்பாக - நடமாடும் கோயில்களாக - உள்ள மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசுவரனுக்கு உகந்த தொண்டு என்பது அன்புநெறியின் கோட்பாடு. இவ்வன்பு நெறியின் தத்துவங்களைத் தெளிவாக விளக்கும் சைவ, வைணவ திருமறைகள் தமிழ் ஒன்றில் மட்டும்தான் உள்ளன. இந்தியப் பண்பாட்டின் மூலப் பண்புகளுக்குத் தலையூற்றாய் விளங்கும் பக்தி நெறிக்குரிய திருநூல்கள் இவையே. **சமஸ்கிருதத்திலோ, வேறு இந்திய மொழிகளிலோ பக்திநெறியின் பழங்காலச் சுவடுகளைக் காணமுடியாது.**

இந்திய நாகரிகம் பன்னெடுங் காலமாகக் கடல்கடந்த அயல்நாடுகளில் சென்று பரவி வருகிறது. மொகஞ்சொதாரோ, ஆரப்பா நாகரிகக் காலமுதல் இன்று வரை இந்தியாவிற்கு வெளியே எல்லாக் கடல் கடந்த நாடுகளிலும் இந்திய நாகரிகத்தோடு சென்று அவ்வாறு பரவிவரும் இந்திய மொழி தமிழ் ஒன்றேயாகும்.

இலக்கிய வளமிக்க இந்திய மொழிகள் பலவற்றுள்ளும் சமயச் சார்பற்ற, புராணச் சார்பற்ற இலக்கியங்களை (Secular Literature) உடைய மொழியாக ஒப்பற்று விளங்குவது தமிழ்மொழியேயாகும். இச்சிறப்பிற்குக் காரணம் பண்டைத் தமிழ் மக்களின் சிறந்த பண்பாடேயாகும். மேலும் இந்தியாவில் உள்ள சமயங்கள் ஒவ்வொன்றின் சார்பாகத் தோன்றிய இலக்கியங்களை உடைய மொழியும் நமது தாய்மொழியேயாகும். பிற இந்திய மொழி இலக்கியங்கள் இவ்வாறு பல சமயத்தவராலும் போற்றி வளர்க்கப்படவில்லை. இந்தியாவின் சிறப்புமிக்க சமயங்களைச் சேர்ந்த இலக்கியங்கள் தமிழ்மொழி ஒன்றில்தான் உள்ளன.

புத்த சமயம் உலகில் உள்ள மக்களுள் ஐந்தில் ஒரு பகுதியினரால் பின்பற்றப்படுவதாகும். புத்த சமயத்தின் புனிதமொழி - வேதமொழி பாலி. பாலிமொழியில் புத்த சமய

நூல்கள் எண்ணற்றவை எழுதப்பட்டுள்ளன. புத்த சமயத்தோடு தொடர்புகொண்ட மொழிகள் நூற்றைம்பதிற்கு மேற்பட்டனவாகும். ஆயினும் புத்த சமயத்தின் தத்துவக் கருத்துக்களை விளக்கும் 'காப்பியங்கள்' அம்மொழிகளில் இல்லை. தமிழில் உள்ள புத்தமதக் காப்பியமாகிய 'மணிமேகலை' ஒன்றுதான், உலகில் புத்த சமயத்தின் ஒப்பற்ற காப்பியமாக விளங்குகிறது.

"கிரேக்கர்களுக்கு ஓமர் (Homer) எப்படி என்றும் சிறந்தவரோ, அப்படியே குறள் தமிழ் மக்களுக்கு இன்றியமையாத இலக்கியப் புதையல், எடுத்துரைக்க ஏற்ற கவி, ஒப்புயர்வற்ற வகையான் சொல்லின் பெருஞ்சிறப்பு, ஒழுக்கத்தின் மேதகவு" என்று சார்லசு இ.கவர் என்னும் மேனாட்டு அறிஞர் திருக்குறளைப் போற்றியுள்ளார். திருக்குறள் தமிழர்தம் வாழ்வில் பன்னெடுங்காலமாக ஊறித் திளைத்த உயர்ந்த அனுபவ உண்மைகளின் வற்றாத இன்ப ஊற்று.

"மக்களினத்தின் வேதமாக (விவிலியமாக) விளங்கும் திருக்குறளில் மில்டனின் கவிநலனும், தாந்தேயின் காப்பிய அழகும், செகப்பிரியரின் உலகப்பொதுமையும், அரிஸ்டாட்டலின் தெளிந்த அறிவும், பிளேட்டோவின் இலட்சிய நோக்கும், மார்க்கசு அரேலியசின் அறவேட்கையும் ஏற்ற அளவில் இணைந்தும், இழைந்தும், கலந்தும் காணப்படுகின்றன." மாண்புமிக்க இந்த உலகப் பொதுமறையினைப் படைத்து அளித்த நாடு நமது தமிழ்நாடு. இதனால் தான் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

திருக்குறள் தமிழர் நாகரிக நறுமலரினின்று ஒழுகும் நற்றேன். அத்தேனினை உண்டு மகிழும் வண்டுகள் மிகப்பல. இவ்விழுமிய நூலினை உலகிற்குத் தந்துதவிய நாகரிகம் உண்மையிலேயே மிகச்சிறந்ததொரு நாகரிகமாகும். பலவகைப் போராட்டங்களுக்கும், இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் இடையே அந்நாகரிகத்தின் இழையறாது இன்றுவரை நின்று நிலவி வருகிறது.

'இப்பழம்பெரும் நாகரிகம் இன்றுவரை அடியோடு அழிந்தொழியாது, நின்று நிலவிவருவதற்குரிய காரணம் என்ன?' மாண்புமிக்க கிரேக்க நாகரிகம், வியத்தகு எகிப்திய நாகரிகம், ஆடம்பர ஆரவாரமிக்க உரோம நாகரிகம், பகட்டு வாய்ந்த பாபிலோனிய நாகரிகம் போன்ற பல பழம்பெரு நாகரிகங்கள் அனைத்தும் இருக்கும் இடம் தெரியாது அழிந்தொழிந்தது ஏன்? என்னும் ஐய வினாக்கள் சிந்தனையாளர் உள்ளத்தே தோன்றுவது இயற்கை.

விருப்பு வெறுப்பின்றிப் பொறுமையோடு, மண்மேடிட்டு மறைந்துபோன பழம்பெரும் நாகரிகங்களின் அடிப்படையை ஆராய்வோர்க்கு ஓர் உண்மை புலனாகாமல் போகாது. எகிப்திய, பாபிலோனிய, கிரேக்க உரோம நாகரிகங்களின் அடிப்படை சரியான முறையில் அமையவில்லை. ஒரு சமுதாயத்தார் சிறந்த நாகரிகமும் பண்பாடும் பெற்று சீரும் சிறப்புமுற்று வாழ்வாங்கு வாழ்ந்தனர் என்றால், அதன் அடிப்படை அவர்களுடைய குடும்ப வாழ்விலே தான் காணப்படும். வீட்டில் நலமிக்க வாழ்வைப் பெறாத சமுதாயம், வெளியுலகில் எத்துணைச் சிறந்த வாழ்வைப் பெற்றாலும், அது வேரில்லாத மரம் தழைத்ததைப் போன்றதேயாகும். அக வாழ்வு நல்லமுறையில் சிறப்பாக அமையாத காரணத்தினால்தான் எகிப்திய, பாபிலோனிய, கிரேக்க, உரோம நாகரிகங்கள் இன்று வரலாற்றில் மட்டும் சிறப்பிடம் பெறும் அவலநிலையை அடைந்துவிட்டன.

பழந்தமிழர் நாகரிகத்தின் அடிப்படையாய் - ஆணிவேராய் விளங்கியது - இன்றும் விளங்குவது - அக வாழ்வுதான். அகத்தின் அடிப்படையில் இன்பம் பிறக்கும்; அறம் தழைக்கும்; செல்வம் செழிக்கும்; அமைதி நிலவும் என்பது தமிழன் கண்ட அனுபவ உண்மை. இச்சீரிய அடிப்படையில் அமைந்த பண்டைத் தமிழர் நாகரிகம் இன்றுவரை நின்று நிலவி வருவதில் வியப்பு இல்லையன்றோ? எனவே பழந்தமிழர் நாகரிகத்தின் அடிப்படையாய் விளங்கிய அக வாழ்வை ஆராய்ந்து அறிய வேண்டுவது நமது கடமையாகும்.

2. வாழ்வில் மலர்ந்த வரலாறு

அகத்தின் அமைதி:

உலகம் தோன்றிய நாள்முதல் மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் அமைதியை நாடி அலைகின்றான். எத்தகைய சூழ்நிலையில் அமைதியை எளிதில் அடைய முடியும் என்று அறியப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மக்களினம் முயன்று வருகிறது. தனி வாழ்விலும், சமுதாய வாழ்விலும், கூட்டு வாழ்விலும், அரசியல் வாழ்விலும் மனிதன் அமைதியை நாடி அலைந்து வருந்துகிறான்.

நாகரிகமற்ற காட்டுமிராண்டியாய் மனிதன் வாழ்ந்த கால முதல் இன்றுவரை அமைதியை அடைய அவன் வகுத்த வழிகள் பல; கடைப்பிடித்து ஒழுகிய ஒழுக்க நெறிகள் பல. அமைதி தானே அரும்புவது என்பதையும், அகத்தே அமைதி பிறக்கப் புறச் சூழ்நிலை ஓரளவு துணைக்காரணமாக உள்ளன என்பதையும் அவன் அறியப் பன்னெடுங்காலமாயிற்று.

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்கள் கூட்டம் அமைதியைத் தேடி வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பே, தமிழன் அமைதியை அடையப் பெரிதும் உதவியாக இருக்கும் ஒரு சூழ்நிலையைக் கண்டான். அதை 'இல்லறம்' என்றும், 'இல்வாழ்க்கை' என்றும் போற்றினான். இல்லறத்தின் இன்றியமையாமையைப் பிற நாட்டார் அறியும் முன்னரே தமிழன் அதன் பெருமையை நன்குணர்ந்தான்.

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப(து) இல்லாயின் நன்று"

என்னும் வான்மறை தந்த வள்ளுவர் வாய்மொழி இவ்வுண்மையை உணர்த்துகின்றது.

வாழ்க்கை அன்புவழி வளர்தல் வேண்டும். அவ்வழியில் வளரும் வாழ்க்கையே பண்பும், பயனும் உடையதாக விளங்கும்.

பண்பும் பயனும் உடைய இல்வாழ்க்கையினால் மனிதன் அமைதியை அடைய முடிகிறது. எனவே அன்பு அமைதிக்கு வித்தாக அமைகிறது. காதல் வாழ்வில் அன்பு அரும்பி, இல்வாழ்க்கையில் மலர்ந்து மணம் பரப்புகிறது. அன்பு மனத்தைத் தூய்மையாக்குகிறது. மாசற்ற தூய்மையான மனமே அறத்தின் நிலைக்களன். அன்புவழி சிறக்கும் வாழ்க்கை அற வாழ்வாக அமைவது இயற்கை. எனவேதான் திருவள்ளுவர் 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

இத்தகைய அகவாழ்வினால் தான் பண்டைத்தமிழர் சீரும் சிறப்பும் பெற்று, "அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு; அறத்தைப் போற்றி வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன்" என்னும் உயர்ந்த குறிக்கோளுடன் சிறந்ததொரு சமுதாயமாக, அமைதி நிறைந்த வாழ்க்கை நடத்தினர். அமைதி இல்லாத வாழ்வில் நாகரிகமோ, பண்பாடோ, இலக்கியமோ, கலைகளோ தோன்றா; தோன்றினாலும் நிலைத்து வளராது. பழந்தமிழரின் வாழ்வு அமைதி நிறைந்ததாய் இருந்ததனால்தான், வாழ்வில் சிறந்த குறிக்கோளும், பண்பாடும் நிறைந்து காணப்பெற்றன.

அறநெறியில் இல்வாழ்க்கை நடத்தினால்போதும்; வேறு வழியில் போய்ப் பெறக்கூடிய பயன் (அமைதி) ஒன்றும் இல்லை. அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவனே வாழ முயல்கின்றவர்கள் எல்லோரிலும் தலையானவன் என்பது பண்டைத் தமிழர் வாழ்வியலைப் பற்றிக்கொண்ட கருத்தாகும்.

மக்களுடைய அன்றாட வாழ்வினைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர் நன்கு கூர்ந்து ஆராய்ந்து, அதனை இருவகையாகப் பாகுபடுத்தியுள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துவதாகும். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு அவர்கள் செய்த பாகுபாடு எக்காலத்திலும் உலகில் வாழக்கூடிய மக்கள் வாழ்க்கைக்குப் பொருந்தும் வண்ணம் அமைந்துள்ளமை கருதத்தக்கது.

தனி மனிதன் ஒருவனுடைய வாழ்க்கையை 'அகம்' என்றும், 'புறம்' என்றும் பாகுபாடு செய்துள்ளனர். 'அகம் என்றால் என்ன?' என்னும் வினாவிற்கு "ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்தது எனக் கூறப்படாததாய், யாண்டும்

உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாகலின், அதனை அகம் என்றார்”- என்று பண்டை உரையாசிரியர் ஒருவர் விளக்கம் தந்துள்ளார். இதனால், ஒருவனும் ஒருத்தியும் ஒத்த அன்போடு கூடி வாழும் இல் வாழ்க்கையினையே ‘அகம்’ என்று தொன்றுதொட்டு நம் முன்னோர்கள் போற்றி வந்தனர் என்பது புலனாகின்றது.

அன்பின் ஐந்திணை:

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு காதலித்து, இல்லறத்தில் ஈடுபடுதலே பண்டைத் தமிழரிடை பெரு வழக்காக இருந்தது. பிறர் அறியா வண்ணம் சில நாட்களேனும், திங்களேனும் மறைந்து ஒழுகும் காதல் ஒழுக்கம் ‘களவு’ எனவும், பலர் அறிய மணந்து கணவன் மனைவியாக இல்வாழ்க்கையில் ஈடுபட்டு இல்லறம் நடத்தும் ஒழுக்கம் ‘கற்பு’ எனவும் போற்றப்பட்டது. களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டு, பிறகு திருமணம் புரிந்து கற்பு நெறியினை மேற்கொள்ளுவதே சிறந்ததாகக் கருதப்பட்டது.

காதலர் இருவர் கருத்தொருமித்து வாழும் பொழுது, தலைவன் காதலியை விட்டுப்பிரிந்து தனது கடமைகளைச் செய்வதற்காகச் செல்லும்பொழுது உண்டாகும் துன்பம் பொறுத்தற்கு அரியதாகக் காதலர் உணர்ந்து வருந்துவர். அதனைப் ‘பிரிவு’ என்பர். பிரிந்து சென்ற காதலர் ‘வருவார், வருவார்’ என்று அவர் வரவை எதிர்நோக்கி, துன்பத்தைப் பொறுத்துத் தலைவி ஆற்றியிருத்தல் ‘இருத்தல்’ என்றும், ‘திரும்பி வருவாரா?’ என்ற நம்பிக்கையற்ற நிலையில் அவரை நினைந்து நினைந்து, தலைவி ஏங்கிக் கண் கலங்கி, உள்ளம் உருகி வாழும் நிலை ‘இரங்கல்’ என்றும், தலைவன் அன்பு மறந்து பிரிந்து, மீண்டுவந்த போது தலைவி உரிமையோடு ஊடுதல், ‘ஊடல்’ என்றும் பலவாறு காதலரின் மென்மையான உள்ளத்தே எழும் நுட்பமான உணர்ச்சிகளைக் கொண்டு, இல்வாழ்க்கையினை ஐந்து வகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். இவ்வகை ஒழுக்கங்களை ஐந்துவகை நிலங்களுக்கு உரியதாக்கிப் போற்றினர்.

காதலர் கூடியிருந்து மகிழ்தல் ‘குறிஞ்சி’ ஒழுக்கம் என்பர். மனிதன் மலைகளில் வாழ்ந்த காலத்து மகளிரும் மைந்தரும் பிறர் அறியாவண்ணம் கூடி, இன்பம் துய்த்து மணந்து கொண்டனராதலின், ‘புணர்தலும்’ அது காரணமாயுள்ள பொருள்களும் குறிஞ்சிக்கு

உரித்தாக்கப்பட்டன. முல்லை நிலத்தில் ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் வாழ்க்கையில் ஆடுமாடுகளை மேய்க்கப் பிரிந்து சென்ற கணவர் திரும்பி வரும்வரை, அந்தப் பிரிவுத் துன்பத்தைப் பொறுத்து 'மீண்டும் கூடுவோம்' என்ற நம்பிக்கையுடன் இருத்தலை 'முல்லை' நிலத்திற்குரிய கற்புநெறியாக - அன்பின் வெற்றியாகக் கருதினர்.

கடற்கரையில் வாழும் மகளிர், மரக்கலங்களில் சென்ற 'தம் காதலர் திரும்பி வருவார்' என்ற நம்பிக்கை இழந்து, சோர்ந்து நைந்து உருகுதலை 'நெய்தல்' என்று போற்றினர். பொருள் தேடுதல், அரசர் ஏவலை நிறைவேற்றுதல் முதலிய காரணங்களை முன்னிட்டுக் காதலர் காதலியைப் பிரிந்து செல்கின்றபொழுது இருவரிடத்தும் உண்டாகிய துன்பத்தைப் 'பாலை' நிலத்திற்கு உரிய ஒழுக்க நெறியாக கருதி வந்தனர். பிரிவினால் காதலர் இருவரிடத்தும் அருள் நினைவு நன்கு வலுப்பெறுவது இயற்கை. அருள் நினைவு இன்ப ஒழுக்கமாகிய அகவாழ்வின் மிகச்சிறந்த பண்பாகத் திகழ்கிறது.

வளமான வாழ்க்கை காரணமாக அன்புமறந்து, காதலியைப் பிரிந்து, 'வரைவின் மகளிரிடத்து' இன்பம் நுகர்ந்து ஆடவர் திரும்பி வந்தபோது, மகளிர் உரிமையோடு ஊடுதல் நீர்வளமும், நிலவளமும் மிக்க மருத நிலத்திற்குரிய ஒழுக்கமாகக் கருதினர். இவ்வாறு காதல் உள்ளத்தின் ஐவகை "உணர்வுநிலையை" வாழ்க்கை வகையாகப் பகுத்து அதனை 'அன்பின் ஐந்திணை' என்று செம்மை சான்ற வாழ்க்கை நெறியாகப் போற்றினர்.

காதல் வாழ்வு:

இல்வாழ்க்கையில் ஈடுபடும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பத்துப் பண்புகள் ஒத்திருத்தல் வேண்டும் என்பது தமிழ்ச்சான்றோர் கண்ட அனுபவ உண்மை. அவனும் அவளும் ஒத்த குடியில் பிறந்தவராய், தாம் பிறந்த குடிக்கு ஏற்ற ஒழுக்கம் உடையவராய், தாம் மேற்கொள்ளப் போகும் குடும்பப் பொறுப்பைச் செம்மையாக நடத்தும் திறமையுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்ற நெறிமுறையைப் பண்டைத் தமிழர் கைக்கொண்டிருந்தனர். திருமணம் செய்து கொள்ளத்தக்க ஆணிற்குப் பதினாராண்டு நிரம்பியிருக்க வேண்டும்; பெண்ணிற்குப் பன்னிரண்டாண்டுகளேனும் நிரம்பி இருத்தல் நல்லது என்று கருதினர். தோற்றப் பொலிவால் இருவரும் ஒத்திருத்தல்

அவர்களிடையே அன்பினைப் பெருக்கும் என்பதை நன்கறிந்திருந்தனர். மனத்தை ஒருவழி நிறுத்தும் 'நிறை' (கற்பு) என்னும் பண்பும் இருவரிடத்தும் வேண்டப்படுவதாக இருந்து வந்தது. அருள் உள்ளம் இருவருக்கும் இன்றியமையாதது என்றும், அறிவினால் இருவரும் ஒத்திருத்தல் மிகச்சிறந்தது என்றும் கருதினர். செல்வம் நிரம்பியுள்ள காலத்து விரும்பியும் குறைந்த காலத்து வெறுத்தும் வாழும் மனநிலையை ஒழித்து, எக்காலத்தும் மனநிறைவு உடையவராய் இருவரும் வாழ்தல் வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கும் உடையவராய் வாழ்வதே மாண்புமிக்க வாழ்க்கையாகும் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறி:

திருவள்ளுவர் தமிழர் சமுதாயம் அன்று இருந்த நிலையினை நன்கு உற்று நோக்கியுள்ளார். சமுதாயத்தின் உறுப்பான தனிமனிதனின் நிலையினையும் நன்கு ஆராய்ந்துள்ளார். 'மனிதன் கூடிவாழும் விலங்கு' என்பது கிரேக்கநாட்டு அறிஞரான அரிஸ்டாட்டலின் கருத்து. இந்நிலையில் நின்றும் திருவள்ளுவர் தமிழ்ச் சமுதாயத்தினை நோக்கியுள்ளார். எனவேதான், தனிமனிதன், குடும்ப வாழ்க்கை, அரசியல், சமுதாயநிலை, காதல்வாழ்வு என்று தனது உலகப் பொதுமறையாகிய திருக்குறளை முறைப்படுத்தி எழுதியுள்ளார்.

தன்னலமிக்க, 'சோற்றுப் பிண்டமாக' விளங்கும் தனிமனிதனைப் பண்படுத்த - செம்மைப்படுத்த - இன்றியமையாதது குடும்ப வாழ்க்கை என்பதை வள்ளுவரின் முன்னோர்களே நன்கறிந்திருந்தனர். அதனால்தான் 'அகத்திற்கு' அத்தனைச் சிறப்புக்கொடுத்தனர். இதனைக் கருத்தில் கொண்ட வள்ளுவர் தனிமனிதன், அவன் குடும்பம் ஆகிய இரண்டையும் முதலில் ஆராய்கின்றார். மனிதன் தன்னலத்தை சிறிது சிறிதாக ஒழிப்பானானால், அதற்கேற்ற அளவு அவன் சிறந்த மனிதனாக வாழ முடியும். மனிதன் மனிதப் பண்புகள் நிறைந்த முழுமனிதன் ஆக - முழுத் தன்மை பெறத்- தன்னல இழப்பு இன்றியமையாதது என்பதையும் கண்டார். தன்னலத்தை உதறித்தள்ள சிறந்தவழி இல்லறமே என்பதை உணர்ந்துதான், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், பொறையுடைமை, ஒழுக்கமுடைமை,

வெஃகாமை, பயனில சொல்லாமை, ஒப்புரவறிதல், ஈகை முதலிய அதிகாரங்களைப் படிப்படியாக மனித உள்ளத்தின் தன்னல இழப்பினை அறிவிக்கும் 'மைல்' கற்களாக அமைத்துள்ளார். தனிமனிதனும், அவன் குடும்பமும் செம்மையடைய இதைவிடச் சிறந்த வழியைக் காட்டியவர்கள் வேறு எவருமிலர்.

பண்டைத் தமிழரின் காதல் வாழ்வு தன்னல இழப்பிற்கு ஒரு பயிற்சிக் களமாக அமைந்திருக்கிறது. பருவம் அடைந்த ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் முதன்முதல் சந்திக்கின்றவரை - கண்டதும் காதல்கொள்ளுகின்றவரை - அவர்களிருவரும் தங்களைப் பற்றியே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். ஆனால் அண்ணலும் நோக்கி, அவளும் நோக்கி, இருவரும் இதயம் மாறி புக்கபின்பு, இதுவரை 'தான் தான் எல்லாம்' என்கின்ற முனைப்போடு இறுமாந்திருந்த ஆண்மகன், தன்னைவிடச் சிறந்த அவள், தன்னுடன் இல்லாமல், தனக்கு வாழ்வு இல்லை என்பதை உணர்ந்து உள்ளம் நெகிழ்கின்றான்; அந்நிலையில் 'தான்' என்கின்ற அவனுடைய ஆணவத்தின் வீறு குறைந்து விடுகிறது. அவளை அடைய எத்தகைய துன்பத்தையும் ஏற்கத் துணிந்து நிற்கும் நிலையில், முதன்முதலாக மனிதன் தனது 'தன்னலத்தைக்' காதல் தெய்வத்திற்குக் காணிக்கையாகப் பலியிடுகிறான். இவ்வாறு காதல் வாழ்வின் தொடக்கமே தன்னல இழப்பின் முதற்படியாக அமைவதைத் தமிழ்ச்சான்றோர் நன்கறிந்திருந்தனர். களவு ஒழுக்கம் ஆண், பெண் ஆகிய இரு சாராரிடத்தும் தன்னல இழப்பைப் 'பரிசாகப்' பெறுவதை வள்ளுவரின் இன்பத்துப்பால் இனிது எடுத்தியம்புகிறது.

அகத்தில் அமைதி வேண்டுமா?

மக்கள் சமுதாயம் தோன்றிய நாள்முதல் இன்றுவரை அமைதியை நாடி அலைகின்றது என்பதை முன்பு கண்டோம். பெறுதற்கரிய அமைதியைப் பண்டைத்தமிழன் அகவாழ்வில் பெற்றான் என்றால், அது ஒரு செயற்கரும் செயல் அல்லவா? பொதுவாக எல்லாரும் அகத்தில் அமைதியைக் காண முடியுமா? என்ற ஐயம் நம் உள்ளத்தில் எழுவது இயற்கை. அகத்தில் அமைதியைக் காணவேண்டுமானால் சில நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைப் பண்டைத் தமிழர் வாழ்க்கையின் படிப்பினைகள் உணர்த்துகின்றன.

முதலாவதாக அகவாழ்வின் அடிப்படை நன்றாக அமைய வேண்டும். அடிப்படை நன்றாக - உரமுடையதாக இருந்தால்தான் கட்டிடம் நிலைபெற்று நிற்கமுடியும். அகவாழ்வின் அடிப்படையாக - ஆணிவேராக - இருப்பவள் மனைவி. மனைவி நற்பண்புகள் நிறைந்து கற்பு என்னும் திண்மையுடையவளாய் இருக்கவேண்டும். அன்பும் அறனும் அணியெனப் பூண்டு, தன்னைக்கொண்ட கணவனை விரும்பிக் காத்து, தனக்கும் கணவனுக்கும் புகழ் உண்டாகுமாறு குடும்பத்தைக் கொண்டு செலுத்தி, தம் கடமைகளில் தவறாமல் கண்டார் வியப்புறும் வண்ணம் இல்லறத்தை நல்லறமாக நடத்தும் தகுதியுடையவளாய் இருக்க வேண்டும்.

அகவாழ்வில் அன்பு தழைத்து ஓங்கினால்தான் அமைதியை - இன்பத்தைக் காண முடியும். வளமாக வாழும் காலத்து கணவனைப் போற்றிப் பாராட்டியும், பொருள்வளம் குறைந்து வறுமை வந்துற்ற காலத்து கணவனைத் தூற்றும் பண்புடைய மனைவியை ஒருவன் பெற்றிருப்பானானால் அவனுடைய வாழ்வில் அமைதியைக் காண முடியாது என்பது திண்ணம். இதனை நன்கு உணர்ந்திருந்த பண்டைச் சான்றோர் உடுப்பதற்கு வேறு ஆடையில்லாத காரணத்தினால் ஓர் ஆடையின் இரு பக்கங்களைக் கணவன் மனைவி ஆகிய இருவரும் உடுத்து வாழக்கூடிய கொடிய வறுமையே வந்துற்றாலும், அவர்களிருவரும் உள்ளத்தால் ஒன்றுபட்ட அன்புடையவர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் வாழ்க்கைதான் உண்மையான அன்புடைய நல்வாழ்க்கையாகும் என்று கருதினர்.[1] எனவே இல்வாழ்க்கை என்று சொன்னால், உள்ளத்தால் ஒன்றுபட்ட தலைவன் தலைவியரைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

சிறந்த பண்புகள் நிறைந்த மனைவி, சிற்சில சமயங்களில் கணவன் அறிந்தோ, அறியாமலோ, உணர்ச்சி வயப்பட்டோ தவறுசெய்து விடுவானானால், அவனை வெறுத்துப் புறக்கணிக்காது, அவன்செய்த தவறை நயமாக உணருமாறு செய்து, அவனிடத்து என்றும்போல் அன்புடையவளாக ஒழுகுதல் வேண்டும். "இப் பிறவி கழிந்து, மறுபிறவி நாம் எடுத்தாலும், நீங்கள் என்னுடைய கணவராக வாய்க்கப் பெறும் பேற்றினை யான் பெற வேண்டும்"

---

1. "ஒன்றன் கூறாடை உடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை" (கலித்தொகை -18)

அப்பிறவியில் நான் தங்கள் உள்ளத்தைக் கவரும் 'இதயராணி'யாக விளங்கும் பேற்றினைப் பெற விரும்புகிறேன்'[2] என்பது பண்டைத் தமிழ் மகள் ஒருத்தி, தன் கணவனை நோக்கிவிடுத்தி வேண்டுகோளாகும். இத்தகைய அன்பும் பண்பும் நிறைந்த மனைவியைப் பெற்றால் ஒவ்வொருவரும் அகத்தில் அமைதியைக் காண முடியும் என்பது நமது மூதாதையர் கண்ட உண்மை.

இல்லத்தரசி:

மனைத்தக்க மாண்புடைய மகளிரை 'மனைக்கு விளக்கு மடவார்' எனப் போற்றும் மரபு தொல்காப்பியர் காலமுதல் இன்றுவரை நம்மிடையே இருந்து வருகிறது. 'குடும்ப விளக்காக' மட்டும் மனைவியர் இருந்தால் வாழ்க்கைச் சிறப்புறாது. அவர்கள் இல்லத்து அரசிகளாக உரிமை வாழ்வு வாழ்ந்தால்தான், 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' எனும் அரிய இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாக மக்கள் வாழ்க்கை மிளிரும் என்பதைப் பொன்னேபோல் பண்டைத் தமிழ் மக்கள் போற்றினர்.

திருமணம் ஆகும் வரையில் தன்னையே முதலாக வைத்து எண்ணிய 'கணவன் - மனைவியர்' இடையே, 'நாம்' எனும் அரிய அன்பின் பண்பு அரும்பிய பிறகு - உள்ளம் பண்பாட்டின் நிலைக்களனாக மாறத் தொடங்கிய பிறகு - இருவரும் கூடிவாழும் இல்வாழ்வில் தங்கள் 'உரிமையைப்' பற்றிய பேச்சுக்கே இடம் இல்லை. ஆயினும் அகவாழ்வில் பன்னெடுங்காலமாகச் சிறந்த அனுபவம் பெற்றிருந்த அன்றைய தமிழ் மக்கள் கணவன் மனைவி ஆகிய இருவருடைய உரிமைக்கும் அதிகாரத்திற்கும் ஒருவாறு வரம்புகட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒத்த அன்பும் பண்புமுடைய கணவன் - மனைவியரின் அக வாழ்வில், 'எதையும் ஏற்று கொண்டு செலுத்தும் உரிமை யாருடையது?' என்னும், உரிமைச்சிக்கல் அவர்களிடையே தோன்றுவது இயல்பேயாகும். கணவன் மனைவி ஆகிய இருவரும் வீட்டு ஆட்சியில் அதிகாரம் செலுத்தினால் அது 'இரட்டை ஆட்சியாக' மாறி இன்னல் பலவற்றை விளைவிக்குமே தவிரப்

---

2. "இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயாகி யரெம் கணவனை;
யானா கியர்நின் நெஞ்சு நேர்பவளே!" (குறுந்தொகை - 49.)

பயன் ஒன்றும் விளையாது என்பதனை நன்கறிந்த தலைமகன், வீட்டு ஆட்சியைத் தன் மனைவியிடம் ஒப்படைத்துவிட்டான். இல்லத்தினை ஆளும் சிறப்பு உரிமையை அவள் பெற்றுவிட்ட காரணத்தினால்தான் "இல்லாள்" என்று ஆன்றோர்களால் போற்றும் சிறப்பைப் பெற்றுவிட்டாள். இல்லாள் என்னும் பெண்பாலையுணர்த்தும் சொல்லிற்கு நேரான ஆண்பாற்சொல் தமிழ் அகராதியிலேயே காணப்படவில்லை என்பது இங்குக் கருதத்தக்கது.

இவ்வாறு வீட்டு வாழ்க்கையில் தனக்குள்ள உரிமையை ஆண்மகன் குடும்ப நலங்கருதிவிட்டுக் கொடுக்கத் தொடங்கினான். அதனால் அவனுடைய ஆணவத்தின் பெரும்பகுதி அழியத் தொடங்கி, அன்பு வளர்ச்சியுறுவதற்குச் சிறந்ததொரு பயிற்சிக் களமாக இல்லறம் அன்று அமைந்திருந்தமை பாராட்டுதற்குரியதாகும்.

அகவாழ்வின் முழுப்பொறுப்பை அவளிடத்து ஒப்படைத்துவிட்டமை, ஆடவன் புறவாழ்வின் பெருஞ்சுமையைத் தாங்கும் உள்ள உரத்தைப் பெறுவதற்குச் சிறந்ததொரு தூண்டுகோலாக அமைந்தது எனலாம். இத்தகைய கணவன் மனைவியருடைய வாழ்க்கை வெறும் இல்வாழ்க்கையாக - இன்பத்தை நாடி அலையும் அல்லல் நிறைந்த வாழ்க்கையாக அமைவதால், பயனில்லை என்பதை அனுபவ வாயிலாக நன்குணர்ந்திருந்தனர்.

அறத்தின் அடிப்படை:

பண்டைத் தமிழ் மக்கள் 'எல்லாரும் வாழப் பிறந்தவர்கள்' என்பதை அறிந்திருந்ததோடு, அவர்கள் 'எல்லாரும் வாழ்வாங்கு வாழப் பிறந்தவர்கள்' என்பதை ஒல்லும் வகையெல்லாம் வாழ்ந்துகாட்டிச் சென்றனர். எல்லோரும் நன்றாக - வளமாக - வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் என்ன செய்யவேண்டும் என்பது குறித்து நன்கு சிந்தித்து நல்லதொரு முடிவிற்கும் வந்திருந்தனர். பெரும்பான்மையோரின் நன்மையை நிலைநிறுத்துவதற்கு உறுதுணையாக வகுக்கப்பட்டனவே சட்டதிட்டங்கள். இயற்கையிலேயே இத்தகைய ஓர் இயற்கைச் சட்டத்தை ஒவ்வொரு மக்கள் சமுதாயமும் போற்றிப் பின்பற்றி வருவதைக் காண்கிறோம். அந்த இயற்கைச் சட்டத்தைத்தான் தொல் பழங்கால முதல் தமிழ்மக்கள் 'அறம்' எனப் போற்றியும், அதைக் கடைப்பிடித்து ஒழுகியும் வருகின்றனர்.

இல்வாழ்க்கை இனிது நடைபெற வேண்டுமானால் அது அன்பு நெறியிலும், அற நெறியிலும் செல்ல வேண்டும். இல்வாழ்க்கையின் பண்பு அன்பு; பயன் அறன். இல்வாழ்க்கையில் மனிதன் பெற முயல்வது இன்பம். இன்பத்தினைத் துய்க்க பொருள் இன்றியமையாதது. பொருளைத் தேடுவதற்கு மனிதன் பலவகை முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அந்நிலையில் அறநெறி பிறழாது பொருளை ஈட்டி, ஈட்டிய பொருளை அறவழியில் செலவழித்து, அதன் பயனாகிய இன்பத்தைத் துய்ப்பதே இல்லறத்திற்கு ஏற்ற நெறியாகப் பழங்காலத் தமிழ் மக்கள் கருதினர். அதனால்தான், 'அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே; அதுவும் பிறனொருவனால் பழிக்கப்படும் ஒரு குறையும் இல்லாதிருக்குமானால் மிக நன்மையுடைத்ததாகும்' என்று போற்றினர்.

தமிழன் 'அறம்' எனும் சொல்லிற்குக் கண்ட பொருள் மிகப் பரந்ததும், விரிந்ததும் நுட்பமானதுமாகும். அவற்றுள் ஒழுக்கம், கடமை, தருமம், இல்லறம், துறவறம், நன்மை என்னும் பொருள்கள் இங்குக் குறிப்பிடத்தக்கன. தன் மனத்திற்கிசைந்த மங்கை நல்லாளுடன் இல்வாழ்க்கையைத் தொடங்கும் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய சில ஒழுகலாறுகள், செய்யவேண்டிய கடமைகள், பிறருக்குத் தன்னால் இயன்றவரை பயன்கருதாது உதவுதல், நன்மையானவற்றையே நாடுதல் - செய்தல் - ஆகிய நெறிகளைப் பின்பற்றி வாழ வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறு வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து பார்த்த பெரியோர்கள், மனிதன் இல்வாழ்க்கையில் உண்டாகும் சிக்கல்கள், நெருக்கடிகள், பூசல்கள் ஆகியவற்றிலிருந்து தப்புவதற்கு - பிழைத்து உய்வதற்குரிய ஒப்பற்ற ஒரேவழி அறத்தின் அடிப்படையில் இல்வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுவதேயாகும் என்ற முடிவிற்கு வந்தனர்.

அறத்தின் அடிப்படையில் அமைத்துக்கொண்ட இல்வாழ்க்கையில் அவனும் அவளும் ஆற்ற வேண்டிய கடமைகள் எவை என்பதையும் வரையறை செய்திருந்தனர். உலகில் வாழும் மக்கள் அனைவருமே இல்வாழ்க்கையில் ஈடுபடுவதில்லை. உள்ளொளி பெற்ற சிலர் வாழ்வின் விடை காண முடியாத வினாக்களுக்கு விடை காணும் மெய்யறிவு ஆராய்ச்சியில் ஈடுபட்டு வாழ்பவராவர். அவர்களுக்கு யான், எனது என்னும் பற்றுகளே கிடையாது. அத்தகைய மெய்யுணர்வாளர்களான துறவிகளுக்கு,

உண்ண உணவு கொடுத்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதரவேண்டியது இல்லறத்தாரின் தலையாய கடமையாகும்.

தன் குடும்பத்தில் தோன்றி இயற்கை எய்திய மூதாதையர், கடவுள், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐந்திடத்தும் செய்யும் அறநெறித் தொண்டினைத் தவறாமல் செய்வது, இல்வாழ்வானுக்குரிய சிறந்த அறமாகக் கருதப்பட்டது. இவ்வாறு பிறருக்கு உதவியாக வாழ முற்படுகையில், கணவன் மனைவி ஆகிய இருவரும் தமது இன்பத்தை விட்டுக்கொடுத்துப் பிறருக்கு மகிழ்ச்சியை உண்டாக்க - நன்மை செய்யப் பழகுகின்றனர். இதனால் மனம் மேலும் மேலும் விரிவடைகின்றது. பிறருக்காக வாழ்வதில் இன்பம் காணத் தலைப்படுவதால் விரிவடைந்த அவர்கள் உள்ளம், தம் குடும்பம், தம் உற்றார் உறவினர், தம் அண்டை வீட்டார், தெருவார், ஊரார், நாட்டார் என்ற முறையில் விரிந்துகொண்டே செல்ல ஏதுவாகிறது. இவ்வாறு பரந்தும் விரிந்தும் பொதுமையை நாடும் அவர்கள் உள்ளம், இறுதியில்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்னும் உலகப் பொதுமையை - எல்லாரும் ஓரினம் என்னும் உணர்வைப் பெற்றே தீரும் என்னும் உண்மையைப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே நமது சான்றோர்கள் கண்டறிந்திருந்தனர். இத்தகைய உலகப் பொதுமை உணர்வை - ஆன்மநேய ஒருமைப்பாட்டை - வளர்க்கும் வளர்ப்புப் பண்ணையாகப் பண்டைத் தமிழனுடைய இல்லறம் அமைந்திருந்ததை நாம் கருத்திலிருத்த வேண்டும்.

வாழ்வின் ஒளி:

பண்டைத் தமிழர் அறத்தின் அடிப்படையில் அமையும் இல்வாழ்க்கை ஒளியுடைய வாழ்க்கையாக அமைதல் வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். நிலையில்லாத இவ்வுலகத்தின் கண் நிலை பெற்று வாழவேண்டுமென்றால், பொன்றாப் புகழைப் பெற அல்லும் பகலும் அரும்பாடுபட்டு முயன்றாக வேண்டும். புகழை அடைவதற்குப் பல வழிகள் உள்ளன. வறுமையால் வாடும் மக்களுக்கு இயன்ற உதவி செய்தல் வேண்டும்; அதனால் புகழ் உண்டாகும்; இல்வாழ்க்கையில் வாழ்பவர்க்கு அப்புகழைப் போன்ற பயன் வேறொன்றும் இல்லை

எனலாம். புகழ் என்று சொல்லப்படும் எச்சத்தைப் பெறாவிட்டால் உலகத்தில் பிறந்தோர்க்கு இகழ்ச்சியாகும். தம்மிடம் இகழ்ச்சி இல்லாமல் வாழ்கின்றவரே உண்மையாக வாழ்கின்றவர் ஆவார்.

தம்மைப்போன்று பிற உயிர்களையும் கருதி உதவி செய்பவனே உண்மையாக உயிர்வாழ்பவனாவான். அவ்வாறு உதவாதவன் உயிருடையனாயினும் செத்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான். ஒன்றும் இல்லாத ஏழையின் பசியைத் தீர்க்கவேண்டுவது இல்வாழ்வானின் கடமையாகும். அவ்வாறு பசியைத் தீர்த்தல், பொருள் படைத்தல் ஒருவன் தன்பொருளைச் சேமித்து வைக்குமிடமாகும் என்பது அவர்களுடைய உள்ளக் கிடக்கை.

உலகில் தோன்றும் மனிதன் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து மறைகிறான். அவன் சிறந்த பண்புடையவன், அல்லது பண்பற்றவன் என்பது அவன் பூத உடல் மறைந்த பிறகு, அவனைப் பற்றி உலக மக்கள் சிறப்பாகக் கருதுமாறு விட்டுச் செல்லும் புகழினால் அறியலாம். எனவே, நிலைபேறில்லாத இந்த உலகிலே மக்கள் மனத்திலே நிலைத்த இடத்தைப் பெற வேண்டுமானால் 'புகழ்ச்சிக்குரியராய்' வாழ்தல் வேண்டும் என்று கருதினர். அப்புகழ்ச்சி தான் உலக வாழ்க்கையில் ஒருவன் பெறக்கூடிய ஒளியாகும் என்று கருதியதைப் பண்டைத் தமிழ் மக்கள் பலருடைய வாழ்க்கை வரலாற்றால் அறிகிறோம். 'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே' (புறம்-165) என்னும் குறிக்கோளோடு வாழ்ந்த காரணத்தினால்தான், சங்ககாலத் தமிழ் மக்களின் வாழ்க்கை ஒளிமிக்க - புகழ்மிக்க வாழ்க்கையாக இன்றும் போற்றப்படுகிறது.

குழந்தைச் செல்வம்:

மனிதன் வாழ்க்கையில் பெற வேண்டிய பேறுகள், சிறப்புக்கள், செல்வங்கள் மிகப்பல. அவற்றுள் மிக முக்கியமானவை, மனிதன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு மிக இன்றியமையாதவை பதினாறு என்று நம் முன்னோர்கள் வரையறை செய்துள்ளனர். அவற்றைப் 'பதினாறு பேறுகள்' என்று பொதுவாகக் கூறுவது மரபு. பேறு என்பதற்கு ஒவ்வொருவரும் வாழ்க்கையில் பெற வேண்டிய சிறப்புக்கள் என்பது பொருள். புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பொறுமை, இளமை, துணிவு,

நோயின்மை, வாழ்நாள் ஆகியவற்றைப் பதினாறு பேறுகள் என்பர்.

இவற்றுள் ஐந்தாவதாக வைத்து எண்ணப்படும் நன்மக்கட்பேறு, ஒருவன் அடையக்கூடிய செல்வங்களுள் மிகச்சிறந்ததும் முதன்மையானதுமாகப் பண்டைக் கால மக்கள் கருதினார்கள். தனி மனிதன் பெறும் புகழ், கல்வி, வலி, வெற்றி முதலியவற்றைக் காட்டிலும், சமுதாயத்திற்குப் பயன்படும் மனிதனாக அவன் மாறும் பொழுது - இல்லறத்தில் ஈடுபடும்பொழுது அவனுடைய கால்வழி அற்றுப்போகாமல் குடும்பவளர்ச்சியில் கருத்தாக இருக்கிறானா என்பதைத்தான் அவனிடம் இருந்து அன்றைய சமுதாயம் எதிர்பார்த்தது. அதனால்தான் 'இல்லறத்தின் பெருமையே ஒருவனுக்கு நன்மை தருவது; அவ்வில்லறத்தின் அணிகலன் போன்றது நல்ல மக்களைப் பெறுதல்' என்னும் கருத்தமைய

"மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கலம் நன்மக்கள் பேறு"

என வான்புகழ் கொண்ட வள்ளுவரும் கூறிப் போந்தார்.

அறநெறியில் நிற்கும் ஒருவனுடைய இல்வாழ்க்கை அவனுக்கும் பிறருக்கும் பயன்பட வேண்டுமாயின், அவனிடத்து இன்றியமையாது இருக்கவேண்டிய செல்வம் 'குழந்தைச் செல்வம்' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தனர்.

ஒருவன் பெறத்தக்க செல்வங்களுள் சிறந்தது குழந்தைச் செல்வம் என்று கூறுவதனால், பண்டைத் தமிழ்மக்கள் குழந்தைகளின் எண்ணிக்கை கூடுதலையே பெருஞ்செல்வமாகக் கருதினார்கள் என்று கூறுவது பொருத்தமற்றதாகும். அறியவேண்டியவற்றை அறிந்த நன்மக்களை, சிறந்த பண்புடைய மக்களைப் பெறுவதைத்தான் சிறப்பாகக் கருதினார்களே தவிர, புற்றீசல்போலப் பல பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளுவதைப் போற்றியதாகத் தெரியவில்லை. பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய மக்களைப் பெற்றால், தங்கள் வாழ்வில் எத்தகைய துன்பங்களும் தங்களை நெருங்கா என்ற நம்பிக்கையோடு வாழ்ந்தனர் என்பதை அவர்கள் வாழ்வும் வரலாறும் எடுத்து இயம்புகின்றது.

குழந்தைச் செல்வம் ஒருவனுக்கு வற்றாத இன்பத்தை அளிக்கும் ஊற்றாகக் கருதினர். தம் மக்களின் சிறிய கைகளால் துழாவப்பட்ட உணவு தூய்மையை இழந்தாலும், சுவைமிக்க அமிழ்தத்தினும் மிக இனிமையுடையதாக அதைப் போற்றினர். தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேளாதவர்களே, குழலிசையும் யாழிசையும் இனிமையானவை என்று போற்றுவராம். குழந்தைகள் தம் உடலைத் தழுவும்பொழுது உண்டாகும் இன்பத்திற்கும், அவர்கள் மழலைச் சொல்லைக் கேட்கும்போது உண்டாகும் இன்பத்திற்கும் இணையாக வேறு ஒன்றையும் கூற முடியாது என்பதை நன்கறிந்திருந்தனர். இத்தகைய இன்ப மயக்கத்தை ஊட்டும் மக்களைப் பெறாத மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்தும் வாழ்ந்தும், தங்கள் வாழ்நாளின் பயனைப் பெறாதவர்களேயாவர்.[3]

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட கணவன் மனைவியரிடையே காதலை வளர்ப்பதற்குரிய சிறந்த கருவியாகக் குழந்தைச் செல்வம் கருதப்பட்டது. குழந்தையின் மழலைச் சின்மொழியால் மதிமயங்கி இன்பக்கடலுள் திளைக்கும் பெற்றோர் நாளடைவில் அருள் ஊறும் நெஞ்சமுடையவர்களாவர். மக்கட் சமுதாயம் நிலைபெற்று வளர்வதற்கு இத்தகைய அருள் ஊறிய நெஞ்சத்தவர்களே உண்மையாகத் தொண்டு செய்யும் பண்புள்ளம் வாய்க்கப் பெறுவர். அவர்கள் தாங்கள் தோன்றிய குடியையும், இனத்தையும், நாட்டையும் உயர்த்தி மேன்மைபெறச் செய்தலை தங்கள் தலையாய கடமையாகக் கருதுவார்கள். குழந்தைச் செல்வத்தின் மாண்பினைப் பண்டைத் தமிழ் வேந்தர்கள் நன்கறிந்திருந்தனர். பகையரசரோடு போர் தொடுப்பதாயிருந்தால், பொன்னினும் சிறந்ததாகக் கருதப்படும் புதல்வர்களைப் பெறாதவரைப் "போருக்குப் புறப்படுகிறோம்; நீங்கள் விலகி நில்லுங்கள்" என்று அறிவித்த பின்னரே போருக்குப் புறப்படுவர்.

---

1. "படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் ... ...
... ...
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாழ்வாழு நாளே" (புறம்-188).

‘பொன்போல் புதல்வரைப் பெறாதீரும்’ என்பதனால் நல்ல குழந்தைகளைப் பெறவேண்டியது ஒவ்வொருவருக்குமுரிய கடமையாகப் பண்டைத் தமிழர் கருதினர் என்று தெரிகிறது.

பிள்ளைகளைப் பெற்றுவிடுவதால் மட்டும் ஒருவன் சிறந்தவனாகக் கருதப்படவில்லை. குழந்தைகள் பெற்றோர்க்கும், சமுதாயத்திற்கும் நன்னெறியில் பயன்படுபவர்களாக வாழுமாறு செய்தல் பெற்றோரின் முதற்கடமையாக இருந்து வந்தது. குழந்தைகளிடம் இயற்கையில் அமைந்துள்ள பண்புகளை நல்லமுறையில் வளர்த்து, அவை நன்முறையில் மலர்ந்து மணம் பரப்புமாறு செய்ய வேண்டும். பயிற்சியின் மூலம் நற்பண்புகள் மக்களிடை வளருமாறு செய்வது நல்லதென்று கண்டனர். தம்மைவிடத் தம்மக்கள் அறிவுடையவர்களாக இருத்தல், தங்களுக்கு மட்டுமல்லாமல் உலகத்து உயிர்கள் அனைத்திற்கும் இனிமையைத் தரும் என்னும் நோக்கத்தோடு தங்கள் குழந்தைகளை வளர்த்தனர்.

3. கடமை உள்ளம்

'மனிதன் ஒரு சமுதாய விலங்கு' என்பர். தனித்து வாழ்வதைவிடக் கூடி வாழ்வதையே மனிதன் பெரிதும் விரும்புகின்றான். தனிமனிதர்கள் பலர் அன்பால் பிணைக்கப்பட்டு தாங்களே கூடிவாழ முன்வருவர். இவ்வாறு மக்கள் கூடிவாழும் வாழ்க்கையே 'சமுதாய வாழ்வு' எனப்படும். இச்சமுதாயத்தின் உறுப்புக்களாக விளங்குபவர்கள் தனி மனிதர்களேயாவர். ஒரு சமுதாயம் சீரும் சிறப்பும் பெற்று சிறந்து விளங்க வேண்டுமென்றால், அதன் உறுப்புக்களாக விளங்கும் மக்கள் வாழ்வு வளம்பெற வேண்டும். மக்கள் வாழ்க்கை வளம் பெறுவதற்குரிய வழிவகைகளை வகுத்துத் தரவேண்டியது நாட்டினை ஆளும் அரசர்களுக்கும், அரசர்களை நெறிப்படுத்தும் சான்றோர்களுக்கும் உரிய கடமையாகும். அன்றைய தமிழ்ச்சமுதாயம் நன்முறையில் வளர்ச்சியுற்று சிறந்த நிலையை அடைந்திருந்தற்குக் காரணம் மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை நன்கறிந்து கடைப்பிடித்து ஒழுகியமையாகும்.

தாயின் கடமை:

ஒரு குடும்பத்தின் அடித்தளமாக - முதுகெலும்பாக விளங்கும் தாய், ஆண்மையும் ஆற்றலும் நிறைந்த பிள்ளைகளைப் பெற்று வளர்த்தலைத் தலையாய கடமையாகக் கொண்டிருந்தாள். குழந்தைகளைப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டிப் பாராட்டி அவர்களை அஞ்சா நெஞ்சமும், அறிவும் ஆற்றலும் நிறைந்தவர்களாய் வளர்ப்பதில் பண்டைத் தமிழ் மகளிர் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். 'இன்று தொட்டிலாட்டும் கையே நாளை உலகை ஆளப்போகிறது' என்பதனைத் தமிழகத் தாய்மார்கள் தெளிவாக அறிந்திருந்தனர். அதனால்தான் மழலைமொழி பயிற்றும் தன் சிறார்களுக்குப் பாலூட்டும்பொழுதே வீரவுணர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் குழைத்து ஊட்டி வந்தனர். போரெனில் நாட்டைக் காக்க வீட்டுக்கொரு வீரனை வேல் கை கொடுத்து, 'போர்முகம் நோக்கிச் சென்று வாகைசூடி வருக!' என்று வாழ்த்துக்கூறி அனுப்பும் கலங்கா உள்ளம் படைத்த

மறக்குடி மங்கையராகத் திகழ்ந்தனர். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திருந்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடியாகிய தமிழ் மறக்குடியில் பிறந்த மகளிர் தம் உயிரினும் வீரத்தையே சிறப்பாகக் கொண்டொழுகினர். தாங்கள் பெற்றெடுத்த பிள்ளைகளுக்குத் தக்க கல்வியை உதவுதல் தங்கள் கணவர் கடமை என்றும், தம் அரசர் காட்டும் நன்னெறியைக் கடைப்பிடித்து, வேலெடுத்துப் போரில் யானையைக் கொன்று புகழ்மாலை சூடித்திரும்புதல் தம் மைந்தரின் கடனென்றும் நம்பி வாழ்ந்தனர். போர்க்களம் சென்ற தன் மகன், அஞ்சி நடுங்கிப் புறமுதுகிட்டு ஓடினான் என்னும் சொல் தன் செவியில் விழுமுன்பே, தன் உயிரைவிடத் துணியும் மறப்பண்பு வாய்ந்தவராக விளங்கினர்.

'ஊற்றுநீர் அல்லது வேற்றுநீர் அறியா ஒரு சிற்றூர். அங்கு மாசறு நுதலும் காசறு கூந்தலும் உடைய ஒரு மங்கை வாழ்ந்தாள். கடவுளைக் கைதொழுது நின்று வழிபடுகிறாள். அவள் வழிபாடு செய்யும் கடவுள் போரில் மடிந்து துறக்கமெய்திய ஒரு வீரனின் நடுகல்லேயாகும். அதுதான் அவளுடைய குல தெய்வம். அக்குலதெய்வத்தைப் பணிந்து வணங்கி இரண்டு வரம் வேண்டுகிறாள்.

"நாளும் விருந்தினர் தவிராது என் வீட்டிற்கு வர, யான் அவர்களைப் போற்றி உபசரிக்க வேண்டும். ஒரு பெரிய அரசன் பகைவனாகக்கிடைத்து, அவனை என் கணவன் போரில் எதிர்க்க வேண்டும்" என்று பலமுறை மன்றாடி வேண்டுகிறாள்' ஒரு தமிழச்சி என்பதைப் புறநானூற்றால்[1] அறிகிறோம். தன் கணவன் போரில் நிச்சயமாக வெற்றி பெறுவான் என்பதை நன்குணர்ந்தே இவ்வாறு வேண்டுகிறாள். இவ்வாறு பேரரசனை வென்றால், பெரிய நாட்டைத் தன் கணவன் கைக்கொள்ள முடியும் என்றும், அப்பொழுதுதான் தான் அதிகமான விருந்தினரை இனிது உபசரிக்க முடியும் என்பதும் அவளுடைய உள்ளக்கிடக்கையாகும். மறப்போரும் அறப்போராக இருக்கவேண்டும் என்பது அவளுடைய அவா. அதனால்தான், தன் கணவன் 'பகை எய்துக' என்று வேண்டுகிறாள். போரின் பயன் விருந்தோம்பலாக

---

1. ... ...
நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது;
விருந்து எதிர் பெறுகதில் யானே; என்ஐயும்
ஓ ..... வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக. (புறநானூறு - 306)

விளங்கவேண்டும் என்றும் வேண்டுகிறாள். பண்டைத் தமிழ் மகளிரின் அறம் பொதிந்த கடமை உள்ளத்திற்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக இம் மறக்குடிமகள் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுவிட்டாள்.

மனைக்கு விளக்காகிய வாணுதல் மங்கையர், தன்னால் தொழப்படும் தெய்வம் வேறு, தன் கணவன் வேறு என்று வேறுபாடு கருதவில்லை. தன் கணவனையே வழிபடு தெய்வமாகக் கருதி, அன்பினால் வழிபாடு செய்தொழுகினர். பண்டைத் தமிழ்மகளிரின் அன்றாடக் கடமைகளுள் கணவனை வழிபடுவது முதல் இடம் பெற்றதென அறிகிறோம்.

அமிழ்தினும் இனிய உணவினைச் சுவைமிக்குடையதாய்ச் சமைத்துத், தம் கணவனை உண்பித்தலைத் தங்களுடைய கடமைகளுள் சிறந்ததாகக் கருதினர். தான் பேரன்போடு சமைத்த நல்லுணவினை 'மிகவும் இனியது' எனச் சொல்லித் தன் கணவன் உண்ணுதலைக் கண்டு பெரு மகிழ்ச்சியுறுதலைவிட, மனைவி ஒருத்தி பெறக்கூடிய சிறந்த மகிழ்ச்சி வேறொன்றுமில்லை என்ற கொள்கையுடன் வாழ்ந்தனர். அறநெறியாளர்க்கு உணவளித்தலும், அந்தணர்களைப் பேணுதலும், துறவியரை எதிர்கொண்டு உபசரித்தலும், தம் முன்னோரின் சிறந்த நிலையைப்போல வரும் விருந்தினரை எதிரேற்று உபசரித்தலும் தங்கள் தலையாய கடமையாகக் கற்புடை மகளிர் கருதி வாழ்ந்தனர்.

தந்தையின் கடமை:

தொடங்கிய செயலை இடையே நெகிழ விடாது செய்துமுடிக்கும் செயலாற்றல் உடையவர் ஆண்மக்கள். அவர்கள் பெருமையும் உரனும் அணியாகப் பூண்டவராவர். வாழ்க்கையில் நேரும் இடையூறுகளை அஞ்சாது எதிர்த்து நின்று வெற்றி காணுதலே ஆண்மைக்கு அழகு எனப் பண்டைத் தமிழர் கருதினர். அன்றைய ஆண் மக்கள் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் தன்னை உயர்நிலையில் நிறுத்திக்கொள்ளுவதையே தங்களுடைய சிறந்த கடமையாகக் கருதினர். கல்விப் பயிற்சியால் பெற்ற நல்லறிவும், இன்னல்களையும் இடையூறுகளையும் கண்டு அஞ்சாத வீரமும், பலரும் தன்னைப் பாராட்ட வாழும் புகழும், தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் வள்ளண்மையும் ஒருவனை வாழ்வில் மேன்மேலும் உயர்ந்து பேரும் புகழும் பெற்று விளங்குமாறு செய்யும். எனவே அத்தகைய வாழ்க்கையைத்

தாங்கள் அடைவதற்குரிய வழிவகைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதைத் தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

தம் குடியையும் நாட்டையும் காத்தற்பொருட்டுத் தம்முயிரைத் தியாகம் செய்தற்குரிய ஆண்மைத் திறத்தைத் தம் கால் வழியினர் பெறவேண்டும் என்று ஆண்மகன் கருதினான். அதற்காகக் கருத்தொருமித்த காதல் மனையாளொடு இல்வாழ்க்கையை இனிது நடத்தினான். இல்வாழ்வின் பயனாகப் 'புகழ்மிக்க மக்களைப்' பெறுவதைச் சிறந்ததாகக் கருதினான். தன் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியைப் பயிற்றுவித்து பல்லோர் குழுமியுள்ள அவைக்கண் எல்லாரினும் அவர்களை முந்தியிருக்கச் செய்தல் தன்னுடைய தலையாய கடமையாகக் கருதினான். அவர்களை நல்லறிவும் ஒழுக்கமுமுடைய சான்றோர்களாகவும், போர்த்துறையில் சிறந்த பயிற்சி பெற்ற வீரர்களாகவும் விளங்குமாறு செய்வதைவிடச் சிறந்ததொரு கடமை தங்களுக்கில்லை என்பதை அன்றைய தந்தையர் நன்குணர்ந்திருந்தனர்.

தொழிலாளிகளின் கடமை:

ஒரு நாட்டின் வாழ்வும் வளனும், உயர்வும் தாழ்வும் அந்நாட்டு மக்களால் செய்யப்படும் பல்வேறு தொழில்களின் வளர்ச்சியைப் பொருத்தே அமைகிறது. கல்வியின் பயனாக அறிவும், அவ்வறிவின் பயனாகத் தொழில்களும் வளர்ச்சியடைதலே வாழ்க்கையின் வளர்ச்சி நெறியாகும்.

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவது உணவு. உணவுப்பொருள்களை நிலமும் நீருங்கூடிய நிலையிலேதான் விளைவிக்க முடியும். நிலத்தை ஆழ உழுது புழுதியாக்கி, நீர்ப்பாய்ச்சி நெல் முதலியவற்றை விளைவிக்கும் பயிர்த்தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தோர் 'உழவர்' என்னும் பெயர் பெற்றனர். இடைவிடாது முயலும் உடலுழைப்பும், முயற்சியும் உடையவராக அவர்கள் வாழ்ந்தனர். 'இவ்வுலகில் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் பல்வகைத்தொழில்களிலும் இவ்வுழவே தலை சிறந்த தொழில் என்பதைப் பண்டைத் தமிழர் நன்கறிந்திருந்தனர். அதனால் உழவினை மிகவும் சிறப்புமிக்கதாகப் போற்றினர். உணவிற்கு அடுத்தாற்போல் மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது உடை. விலங்குகளைப் போலத் திரியாமல், உடலினை மறைத்தற்குரிய உடையினையுடுத்து மானத்துடன் வாழும் முறை மக்கள் வாழ்க்கையின்

சிறப்பியல்பாகும். நாகரிகத்தின் தனிச்சிறப்பாக விளங்குவது மனிதன் பஞ்சினை நூலாக நூற்று, ஆடையாக நெய்து உடுத்தக் கற்றதாகும். நெய்தற்தொழிலில் பண்டைத் தமிழ் மைந்தரும் மகளிரும் நுண்ணிய தேர்ச்சி பெற்று விளங்கினர். பருத்தி நூலாலும், பட்டு நூலாலும், எலி மயிராலும் நுண்ணிய ஆடைகளை நெய்யும் கைவண்ணமிக்க தொழில் வல்லார் பேரூர்களிலும், சிற்றூர்களிலும் நிறைய வாழ்ந்தனர்.

உண்ண உணவும் உடுக்க உடையும் பெற்ற மனிதனுக்கு மிக இன்றியமையாது தேவைப்படுவது தங்குமிடமாகும். கதிரவனின் வெப்பத்தையும், பனியின் நடுக்கத்தையும், மழையின் குளிர்ச்சியையும் போக்கி இன்பமாக வாழ்வதற்குரிய வசதியினைத் தருவது வீடாகும். அக்காலத்தில் புல்லால் வேய்ந்த குடிசை முதல் கூட கோபுரங்கள் நிறைந்த நிலாமுற்றமுடைய ஏழடுக்கு மாளிகைகள்வரை உள்ள பல திறப்பட்ட வீடுகளைக் கட்டுவதிலும் அன்றைய தமிழன் சிறப்புற்றிருந்தான். தச்சர், கொல்லர் முதலியோர் கட்டடத் தொழிலிற்குரிய இன்றியமையாதத் தொழிலாளர்களாவர்.

மக்களின் அன்றாட வாழ்க்கைக்குரிய கலன்கள், வண்டிகள், அணிகலன்கள், கலைப் பொருள்கள் முதலியவற்றைச் செய்து தரும் பலவகைப்பட்ட தொழில்களில் கைத்திறன் வாய்ந்த கணக்கற்ற தொழிலாளர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் உலோக வேலை செய்யும் 'கஞ்சகாரர்' இரும்பு வேலை செய்யும் 'கொல்லர்', மட்கலம் செய்யும் 'குயவர்' அணிகலன்களை அமைக்கும் 'திருமணி குயிற்றுநர்' முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைகளைப் பெற்றிருந்த பண்டைத் தமிழ் மக்கள், தங்களுக்குப் பகைவரிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் தக்க பாதுகாப்புத் தேவை என்பதை உணர்ந்தனர். பகைவர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு வலிமையான படைக்கலன்கள் தேவைப்பட்டன. உறுதியும் கூர்மையுமுடைய படைக்கலன்களைக் கொல்லர்கள் செய்து கொடுத்தனர். போரில் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக விளங்கும் போர்க்கருவிகளைச் சிறந்தமுறையில் செய்துதரும் கொல்லர்கள் நாட்டின் மிக இன்றியமையாதத் தொழிலாளர்களாக இருந்து வந்தனர். அதனால் கொல்லர்களைத் தொழிலாளர்

வர்க்கத்தின் 'பிரதிநிதி'களாகக் கருதினர். போர்த்துறையில் சிறந்த வீரர் பகைவரை வென்று வாகை சூடுவதற்குரிய வேலும் வாளும் போன்ற படைக்கலன்களைச் செய்து கொடுத்து, நாட்டின் படைத்திறனைப் பெருக்குதல் கொல்லர்களின் கடமையாகப் போற்றப்பட்டமை கருதுதற்குரியதாகும்.[2]

நாட்டின் அமைதியையும், நல்வாழ்வையும் குறிக்கோளாகக் கொண்டு தொழிலாளரும் பாட்டாளி மக்களும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும். அப்பொழுதுதான் அரசாங்கம் நாட்டுமக்களுக்கு 'நன்னடை நல்குதல்' கூடும் என்பதை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது முன்னோர்கள் நன்கறிந்திருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

அரசின் கடமை:

ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு அரசாட்சி இன்றியமையாதது. பண்டைத் தமிழகத்தில் முடியரசு ஒன்றுதான் சிறந்த அரசியல் அமைப்பாக விளங்கியது. நாட்டின் வளத்தைப் பெருக்கவும், குடிமக்களின் வாழ்க்கை வளம்பெறுவதற்குரிய பொதுநலங்களில் கருத்தூன்றவும், பகைவர்களாலும், கள்வர்களாலும் மக்கள் துன்புறாதபடி பாதுகாக்கவும் அன்றைய முடியரசு முனைந்து நின்றது. இக் காரணத்தினால்தான் 'அரசனில்லாத நாடு உயிரற்ற உடம்புபோலக் கருதப்பட்டது.'[3] அறநெறியில் சிறிதும் தவறாது, மக்களுக்குத் தீமை விளைவிக்கக்கூடிய செயல்களை நீக்கி, வீரத்தில் தவறாமல் மானம் உடையவராக அக்காலத் தமிழ்மன்னர்கள் விளங்கினர். அவர்கள் நாட்டுக்குப் பொருள் வரும் வழிகளை உண்டாக்குதலும், நாட்டில் கிடைக்கப் பெறாதனவற்றை கிடைக்குமிடங்களிலிருந்து கொண்டுவந்து சேர்த்தலும், நாட்டில் உள்ள பொருள்களை வீணாக்காமல் காப்பாற்றுதலும், காப்பாற்றிய பொருளைப் பயன்படும் வழிகளில் வகுத்துச் செலவிடுதலும் ஆகிய ஆட்சிமுறையில் வல்லவர்களாக இருந்ததோடு, குடிமக்கள் யாவரும் வந்து எளிதில் காண்பதற்குரியராய், கடுமையான சொற்களை மறந்தும் சொல்லாதவர்களாய் வாழ்ந்தனர். இவ்வாறு அறநெறி தவறாமல் ஆட்சிமுறை செய்து அவர்கள் மக்களைக் காப்பாற்றியதனால், மக்கள் அவ்வரசர்களைக் கடவுளுக்கு

---

2. புறம் - 312.
3. புறம் - 186.

ஒப்பாகக் கருதிப் போற்றினர்.[4] உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்து வாழ்வதைப்போல, பண்டைத் தமிழ்மக்கள் எல்லாரும் அரசனுடைய செங்கோல் ஆட்சிமுறையை எதிர்பார்த்து வாழ்ந்தனர்.[5]

பண்டைத் தமிழகத்தை ஆண்ட முடிவேந்தர்கள் மூவரும் எல்லாவகையான ஆட்சிமுறை சிக்கல்களையும் நன்காராய்ந்து, யாவரிடமும் நடுநிலைமையில் சிறிதும் வழுவாது தெளிந்த அறிவுடன் ஆட்சி செய்தனர். அவர்களுடைய செங்கோல் நாட்டிலே அறம் தழைப்பதற்கும், அறவோர்கள் அறத்தின் திறனை மக்களுக்கு எடுத்தியம்புவதற்கும் உறுதுணையாக இருந்தது. அரசனுக்கு வெற்றியைக் கொடுப்பது அவன் கையில் கொண்டுள்ள வேற்படையன்று; அவனுடைய நல் ஆட்சியேயாகும் என்பதை நன்குணர்ந்திருந்தனர்.[6] நால்வகைப் படைகளும் நன்குடையவராய் இருந்தாலும், அறநெறியின் அடிப்படையில் ஒழுகுவதே உண்மையான வெற்றியைத் தரும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்தனர். தாய்ப்புலி தான் உயிரோடு வாழும்வரை தன் குட்டியைப் பிறர் கொண்டு போகவிடாது; தன் உயிரை இழந்த பின்னரே தன் குட்டியை இழக்கும் என்பர். அவ்வாறே மூவேந்தர்களும் தாம் உயிருடன் வாழும் வரை தம் குடி மக்களைப் பிறருக்கு அடிமையாக வாழவிடாது காத்தனர்.[7]

அரசர் தன் நாட்டில் வாழும் மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது, 'கொடியன் எம் அரசன்' என்று கண்ணீர் வடித்துக் கதறாமல் காக்க வேண்டியது தங்களுடைய தலையாய கடமையாகக் கொண்டிருந்தனர்.[8] நாட்டினை மேன்மேலும் வளமுறச் செய்வது அரசர்களின் முதன்மையான கடமைகளுள் ஒன்றாக இருந்தது. நாட்டில் நீர்நிலைகளைப் பெருக்கிக் குடிமக்களின் வேளாண்மைக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுத்தனர். மக்களிடையே உண்டாகும் வழக்குகளை அறநெறி பிறழாத அறம் வழங்கும் மன்றங்களில், அறவோர்களைக் கொண்டு தீர்த்து வைப்பதைத் தங்களுடைய சிறந்த கடமையாகக் கொண்டிருந்தனர். குடிமக்களின் நலன் கருதி அரசாண்ட அம்மன்னர்கள் முறையறிந்து ஆறிலொரு பங்காக மக்களிடமிருந்து தங்களுக்குரிய வரியைப் பெற்றனர்.

---

4. திருக்குறள் அதி-39; 5. திருக்குறள் - 542; 6. திருக்குறள் அதி - 55; 7. புறம் - 55; 8. புறம் - 72.

நாடாளும் வேந்தன் தன் ஆணையால் குடிமக்களை வற்புறுத்திப் பேரளவில் பொருள் கொள்ளுதலை வழிப்பறி செய்யும் திருடனுடைய கொடிய செயலைக் காட்டிலும் மிகக் கொடியதாகக் கருதினர்.

பகைமையும் போரும் இவ்வுலகில் எக்காலத்தும் உண்டு என்பதனை நன்கறிந்திருந்த தமிழ்வேந்தர்கள், பகையரசனுடைய நாட்டின் மீது போருக்குப் புறப்படும் பொழுது அந்நாட்டில் வாழும் பசுக்களையும், அறநெறியில் ஒழுகும் அறவோரையும், பெண்களையும், நோயாளிகளையும், தத்தம் மூதாதையருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்குரிய பொன் போன்ற புதல்வர்களைப் பெறாத ஆண்களையும், போர் நிகழும் இடத்தைவிட்டுப் புறத்தே போய்விடும்படி எச்சரித்த பின்னரே, அந்நாட்டினைப் பெரும்படையுடன் சென்று தாக்குவதைச் சிறந்ததொரு அறப் பண்பாகக் கொண்டொழுகினர்.[9] அறத்தினை அடிப்படையாகக் கொண்டு செய்யும் அறப்போரே அக்கால மக்களால் போற்றப்பட்டமை புலனாகின்றது.

இவ்வாறு அவர்கள் மிக்க பசியும், நீங்காது தொல்லைதரும் நோயும், அழிவு செய்யும் பகையும் தன் நாட்டை அண்டாதவாறு காத்தனர். தன் நாட்டில் குறையாத விளைபொருள்களும், அறவோரும், என்றும் வறுமையுறாத செல்வரும் ஒருங்கு வாழ்வதே சிறப்பாகக் கருதினர்.[10] நாட்டின் நலங்காக்க, முன்வரும் இளைஞர்களுக்கு - வீரர்களுக்கு - அரசியல் நெறியில் பிறழாது ஒழுகும் ஒழுங்குமுறையினை அறிவுறுத்தி, நிலமும் பொருளுந் தந்து ஆதரித்தலைத் தமிழக வேந்தர்கள் தம்முடைய கடமையாகக் கொண்டொழுகினர்.[11] அன்றைய தமிழகம் அயலாரின் கருத்தைக் கவரும் வண்ணம் 'நாடென்ப நாடா வளத்தன' என்பதற்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக விளங்குமாறு செய்தவர்கள் பண்டைத் தமிழ்மன்னர்களேயாவர். இவற்றால் பண்டைக் காலத்திலேயே தமிழகம் சிறந்ததொரு சமூக நல நாடாக (Welfare State) விளங்கியமை புலனாகின்றது.

---

9. புறம் - 9; 10. திருக்குறள் அதி - 74; 11. புறம் - 312.

காளையின் கடமை:

தமிழகத்தின் இளைஞர்கள் தங்கள் உயிர் வாழ்க்கையினை ஒரு பொருளாக மதியாது, எத்தகைய பகையினையும் எதிர்த்து நிற்கும் உள்ள உரமும், உடல் திண்மையும் பெற்றிருந்தனர். தம்மைவிட மெலியாரிடத்தே அவரினும் மென்மையுடையராகப் பணிந்தொழுதலும், வலியாரிடத்தே அவரைவிட வன்மையுடையராகத் தலைநிமிர்ந்து நடக்கும் பெருமிதப் பண்புடையவர்களாகவும் வாழ்ந்தனர். வாழ்க்கையில் உண்டாகும் இடையூறுகளையும் இன்னல்களையும் எதிர்த்து நின்று தங்கள் குடும்பத்தைக் காக்கும் பொறுப்பினை இளைஞர்கள் மிகச் சிறந்த கடமையாகக் கருதினர். துன்பத்தால் தளர்ச்சியுற்று, நலிந்தழியும் குடியினைத் தளராமல் தாங்கி நிற்கும் மனத்திட்பத்தோடு இளைஞர்கள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இயற்கையிலேயே வீரவாழ்வு வாழ்வதற்குரிய சூழ்நிலையினையுடைய தமிழகத்தில் பிறந்து வளர்ந்த இளைஞர்கள், போர்க்களத்திலே பகைவர் சேனைகளை அறவே அழித்து, மதமிக்க களிறுகளை எதிர்த்துப் போரிட்டு வாகை சூடுவதையே தங்களுடைய தலையாய கடமையாகக் கருதினர்.[12] தமக்கு எதிரில்லாதபடி தமது ஆண்மைத் தன்மையை மேன்மேலும் போர்க்களத்தில் புலப்படுத்துதலையே தம்முடைய பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். பண்டைத் தமிழகத்தில் தோன்றிய இளைஞர்கள் எல்லாருமே போர்த்துறையில் பயிற்சிபெற்றுச் சிறந்த வீரராக விளங்கினர். தங்கள் நாட்டின் நலங்கருதிப் பகைவரை எதிர்த்தல் இளைஞர்கள் கடன் என்னும் கொள்கையுடையவர்கள் பழந்தமிழர்கள்.

---

12. புறம் - 312.

4. அறத்தின் ஆற்றல்

அறவாழ்வு:

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை தெளிவும் நல்ல நாகரிகமும் உடையதாக விளங்கியது. எல்லாரும் நலமாகவும் வளமாகவும் வாழ்ந்தனர். இவ்வாறு வாழ்வாங்கு வாழ்வதற்கு உறுதுணையாக இருந்தது மக்களின் உள்ளப் பண்பாடேயாகும். அவர்களுடைய உள்ளம் அன்பு, நாணம், ஒப்புரவு (பிறருக்குதவுதல்), கண்ணோட்டம், வாய்மை ஆகிய பண்புகளின் நிலைக்களனாக இருந்தமையால்தான் அத்தகைய சிறந்ததொரு பண்பாட்டை அவர்கள் அடைய முடிந்தது. இத்தகைய பண்புகள் ஒருவனுடைய உள்ளத்தில் வேரூன்றி விளங்க வேண்டுமானால், அவனுடைய உள்ளம் தூய்மையுடையதாக இருக்க வேண்டும் என்பதனை நன்கறிந்திருந்தனர். உள்ளத்தைத் தூய்மையுடையதாக ஆக்கிக்கொள்ளுவதற்கு அவர்கள் அனுபவத்தில் கண்ட ஒரே வழி - ஒப்பற்ற வழி மனத்தின்கண் குற்றம் இல்லாதிருத்தலேயாகும். அவ்வாறில்லாதிருக்க வேண்டுமானால், உள்ளத்தில் உண்டாகும் அழுக்காறு, பெருவிருப்பம், சீற்றம் ஆகிய தீய உணர்ச்சிகளையும், அவை காரணமாக வெளிப்படும் கடுஞ்சொல்லையும் மனத்திலிருந்து அறவே ஒழித்துவிட வேண்டும். இவ்வாறு உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுதலே 'அறம்'[1] எனப் பெரியோர்களால் போற்றப்பட்டது. மக்களுக்குரிய பண்பினை இல்லாதவர், அறிவில் அரம் போன்ற கூர்மையை உடையவராயினும் அவர்கள் மரத்திற்கு ஒப்பாகக் கருதப்பட்டனர்.

பிறருடைய உள்ளம் வருந்தாதவாறு தனக்கும் பிறருக்கும் நன்மையை நாடி வாழும் வாழ்க்கையே பண்புடைய வாழ்க்கையாகப் போற்றப்பட்டது. நீர்வளமும் நிலவளமும் நன்கு அமையப்பெற்றமையால் செழித்து விளங்கும் ஒரு நாடு நல்ல நாடாகிவிட முடியாது. ஒரு நாடு நல்ல நாடாக, சிறந்த நாடாக விளங்குவது அந்நாட்டு மக்களின் பண்புநலனைப் பொறுத்தே இருக்கிறது. நிலம் நன்கு திருத்தப்பட்ட நாடாயிருப்பினும்,

---

1. திருக்குறள் 34, 35.

காடாய்க்கிடப்பினும், பள்ளமாகவோ மலைப்பாங்காங்கவோ இருப்பினும், அந்நிலத்து வாழும் மக்களைப் பொறுத்தே அது நல்ல நிலம் அல்லது தீய நிலம் என்று மதிப்பிடப்படும். தீய நிலமாக இயற்கையில் அமைந்திருந்தாலும் நல்லோர் அங்கு வாழ்ந்தால் அது நல்ல நிலமாகிவிடும். அது இயற்கையில் நல்ல நிலமாகவேயிருப்பினும் தீயோர் அங்கு வாழ்வாராயின் அது தீய நிலமாகிவிடும். ஒரு நாட்டினுடைய ஏற்றத் தாழ்விற்கு அந்நாட்டு மக்களே காரணம். ஒரு நாடு வாழ்வும் தாழ்வும், மேன்மையும் இழிவும் அடைவது அந்நாட்டு மக்களைப் பொறுத்தேயிருக்கிறது. மேலும் ஒவ்வொரு நிலமும் தனது இயல்புக்கு ஏற்றவாறு வெவ்வேறு விளை பொருள்களை அளிக்க வல்லதாயிருக்கும். அதன் இயற்கையை நன்கு அறிந்து, அதன் பண்பிற்கேற்ற செயல்களைப் பேருழைப்புடன் செய்வாராயின் அது நல்ல நிலமாக - சிறந்த நாடாக விளங்கும். முயற்சியின்றி சோம்பேறிகளாய் வாழும் மக்களையுடைய நாடு என்றும் பயனற்ற நிலமுடையதாய்ப் பாழாய்க் கிடக்கும். அந்நிலத்தைக் குறைகூறிப் பயனில்லை; அதிலுறையும் மக்களின் குறையே பெருங்குறையாகும்[2] என்பதை உணர்ந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக நனிபல தொண்டுகள் புரிந்து வாழ்ந்தனர்.

பெரும் பதவியைக் குறிக்கும் நீண்ட பட்டங்களைப் பெறுவதும், விரைவாகச் செல்லும் ஊர்திகளில் ஏறிச் செல்வதும் போன்ற வாழ்க்கையே செல்வம் உடைமையைக் குறிக்கும். ஆனால் இத்தகைய வெளிப்பகட்டான செல்வங்களைத் தமிழ்ச் சான்றோர் செல்வம் என்று கருதினரல்லர். முன்பு தாம் செய்தவினையின் பயனால் இத்தகைய செல்வம் மக்களை வந்தடைவதாகும். தம்மை நம்பி வந்தடைந்தவர்க்கு உண்டாகிய துன்பத்தைக் கண்டு அஞ்சி, அத்துன்பத்தை ஒல்லும் வகையெல்லாம் போக்க முயன்று அவரைக் கைவிடாமல் காக்கும் இனிய தன்மை வாய்ந்த அருள் உள்ளத்தையே மிகச்சிறந்த செல்வமாகக்[3] கருதும் விழுமிய பண்பு பண்டைத் தமிழரிடை குடிகொண்டிருந்தமையால் தான் அவர்கள் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ முடிந்தது.

இவ்வுலகில் மக்கள் அரும்பாடுபட்டுத் தேடும் செல்வம், அறனும் பொருளும் இன்பமும் எனப்பட்ட மூன்றும் செய்வதற்கு உதவ வேண்டும். அவ்விதம் மக்கள் படைத்த செல்வம் அறத்தின்

---

2. புறம் - 187; 3. நற்றிணை - 210.

அடிப்படையில் பிறருக்குப் பயன்படாமல் போகுமானால், செல்வத்தைப் படைத்தவன் தம்மையே பாதுகாவாது துன்பத்திற்கு ஆளாகும் அவல நிலையை அடைவான். ஆகவே செல்வத்தைப் பெற்றவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளவும், பிறருக்கு உதவவும் தயங்காது முன் வந்தனர். ஆனால் இப்பிறவியில் செய்யும் நல்வினை மறுபிறவியில் வந்து உதவும் என்னும் காரணத்திற்காக அறம் செய்வதை இழிவாகக் கருதியதோடமையாது, அத்தகைய நோக்கத்தோடு அறம் செய்யும் தமிழரல்லாதாரை 'அறத்தை விலைகூறி விற்கும் வாணிகர்' என்று இழித்தும் பழித்தும் பேசினர். இதனால், ஒவ்வொருவரும் அறம் செய்வதைத் தங்கள் கடமையாகக் கொண்டு ஒழுகினர் என்பது புலனாகின்றது.

பயன் கருதாது பிறருக்கு உதவும் அருள் உள்ளமே செல்வத்துள் எல்லாம் தலையாய செல்வம் என்பதையும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் வாழ்க்கையே சிறந்த சமுதாய வாழ்க்கை என்பதையும் நன்குணர்ந்திருந்த பண்டைத் தமிழர், ஒருவன் தன் தேவைகளுக்குப் போக மிகுதியாக உள்ள பொருளை பிறருக்கு ஈத்துவக்கும் இன்பமே அழியாது என்றும் நிலைபெற்ற இன்பம் என்ற நோக்கொடு வாழ்ந்தனர். பிறருக்கு உதவாது குறுகிய நோக்கொடு ஒருவன் சேர்த்துவைப்பதால் அவனுக்கும் உலகிற்கும் தீமையே உண்டாவதையும் அறிந்திருந்தனர். எனவே செல்வத்துப்பயனே ஈதல்; 'இல்லை' என்று தம்மை நாடிவந்தார்க்கு 'இல்லை'யென்று கூறாது வழங்குவது செல்வரின் சிறந்த கடமையாகும் என்று கருதினர்.

நாடாளும் வேந்தனுக்கும் காடாளும் மறவனுக்கும் தேவைகள் யாவும் ஒரே தன்மையன. பின் அவர்களிடையே உள்ள வேறுபாடுதான் என்ன? ஈதல் ஒன்றுதான். ஈத்துவக்கும் இன்பம் அறியாது வைத்திழக்கும் வன்கண்மை வாய்ந்த மன்னனுக்கு நாகரிகம் ஏது? அவன் நாகரிகமற்ற காட்டுமிராண்டியே ஆவான். இரவும் பகலும் காட்டிலே விலங்குகளைக் குறியாகக் கொண்டு அலைந்து திரியும் அறியாமை நிறைந்த மறவனும், வெண்கொற்றக் குடையின் கீழ் உலகினை ஆளும் ஒப்பாரும் மிக்காருமற்ற வேந்தனும் உண்பது நாழி அரிசி சோறுதான்; உடுப்பவை இரண்டு துண்டுகள்தான். மற்ற தேவைகளும் ஒரே தன்மையுடையனவே யாகும். ஆதலால், செல்வமுடையார் வறியார்க்கு மனம் விரும்பிக் கொடுத்தலே தாம் பெற்ற செல்வத்தால் பெறக்கூடிய பயனாகும். 'செல்வத்தை யாமே நுகர்ந்து மகிழ்வோம்' எனக் கருதிச்,

செல்வர்கள் பிறருக்கு ஈயாது வாழ்வார்களானால், அதனால் அவர்களுக்கு விளையும் தவறுகள் மிகப்பலவாகும்[4] என்னும் உண்மையினைத் தக்கார் வாயிலாக அறிந்து, வறியாரது பசியைப் போக்கி வாழும் அறச்செயலினை மிகவும் விரும்பிப் போற்றினர். சிறப்புடைய பொருளும் இன்பமும் அறத்தின் வழிப்பட்டு நிற்றலே தொன்றுதொட்டு தமிழரிடை இருந்து வரும் மரபு என்பதனை உணர்ந்து,[5] அந்நெறி நின்று ஒழுகி வந்தனர்.

அறத்தைக் கருதாது பசுவினுடைய முலையை அறுத்தவருக்கும், சிறந்த அணிகலன்கள் அணிந்த கருவுற்ற மகளிரின் கருவினைச் சிதைத்தவருக்கும், இருமுதுகுரவராகிய தம் பெற்றோர்களுக்குத் தீங்கு சூழ்ந்த கொடுமையாளருக்கும் தாங்கள் செய்த பெருந் தீவினைகளின் பயனை அனுபவியாது தப்புவதற்குச் சில கழுவாய்கள் உள்ளன. ஆனால், உலகமே தன்நிலை கெட்டு அழிவதாயினும் ஒருவன் தனக்குச் செய்த ஒரு நன்மையினை மறந்து வாழ்வானானால், அவனுக்குக் கடைத்தேறும் வழியே இல்லை என்னும் அறநூலின் கருத்தினை மனத்திலிருத்தி ஒல்லும்வகையெல்லாம் செய்ந்நன்றி மறவாத மனப்பாங்கு[6] வாய்ந்தவர்களாகச் சங்ககாலத் தமிழ் மக்கள் வாழ்ந்தமையால் தான் அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று விளங்க முடிந்தது.

சிறந்த அறம்:

உலகில் தோன்றிய மனிதன் ஒருநாள் இவ்வுலகைவிட்டு நீங்கப்போவது உறுதி. எனவே மக்களாகப் பிறந்தவர்கள் தங்கள் வாழ்நாளில் தங்களுக்கு உறுதுணையாக விளங்கக்கூடிய அறச் செயல்களை இயன்ற வகையெல்லாம் மனம், மொழி, மெய்களால் செய்ய வேண்டியது கடமையாகும். அதனால் தாங்களும் இன்புறலாம்; உலகமும் இன்புற்று வாழும். எல்லாருக்கும் நன்மை தரத்தக்க அறத்தைச் செய்ய இயலாதவர்கள் தங்களுக்கும் தங்கள் சமுதாயத்திற்கும் தீமை விளைக்கும் தீய செயல்களையேனும் செய்யாது வாளா இருத்தல் மிகச்சிறந்த செயலாகும். இவ்வாறு தீய செயல்களைச் செய்யாது இருத்தலே அவன் சமுதாயத்திற்குச் செய்யும் பெருந் தொண்டாகும். அவ்விதம் அவன் தீமை புரியாதிருந்தால் அவனுக்கும் நன்மை; சமுதாயமும் தீதின்றியாவது வாழும் என்பதனை அன்றைய தமிழர்கள் அனைவரும்

4. புறம் - 189. 5. புறம் - 28. 6. புறம் - 34.

உணர்ந்திருந்ததோடு, இவ்வாறு தீமை செய்யாது வாழ்தல் அறவாழ்விற்குரிய சிறந்ததொரு நெறியாகவும் கருதினர்.[7]

ஒரு வீட்டில் 'சாப்பறையொலிக்க, மற்றொரு வீட்டிலே மணமுரசியம்ப, கணவனைக் கூடிய மகளிர் நறுமணப் பூக்களை அணிந்து மகிழ, கணவனை இழந்த மகளிருடைய கண்கள் துன்பக்கண்ணீர் சொரிய, இவ்வாறு இன்பமும் துன்பமும் ஒவ்வாதபடி இவ்வுலகியல் அமைந்துள்ளதை அனுபவத்தில் கண்டனர்.'[8] துன்பத்தையே தனக்குரிய இயல்பாகவுடைய இவ்வுலகின் இயல்பினை நன்கறிந்த காரணத்தினால், இவ்வுலகிலிருந்தே நிறைந்த பேரின்பமாகிய வீட்டின்பத்தைத் தரும் இனிய செயல்களை அறிந்து அவற்றைப் பெருவிருப்புடன் செய்து வாழ்ந்தனர்.

இப் பிறப்பிற்குரிய இம்மைச் செல்வமும், வரும் பிறப்புக்களில் துணை செய்வனவாகிய அறச் செயல்களும், பிறப்பறுக்க முயலும் பெருநெறியாகிய துறவு நிலையும் ஆகிய இம்மூன்று நிலைகளும் மக்கள் வாழ்க்கையின் திறங்களென முன்னைத் தமிழ்ச் சான்றோர் ஆராய்ந்து அறிவுறுத்தியுள்ளனர். கணவனும் மனைவியுமாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மக்களொடு மகிழ்ந்து மனையறம் பேணிச் சுற்றத்தாரைப் போற்றி விருந்தோம்பி எல்லோர்க்கும் ஆதரவாக வாழ்வதே இம்மை வாழ்வின் பயன் என்பது அவர்கள் கோட்பாடாகும்.

கணவனும் மனைவியுமாக இல்லறம் நிகழ்த்திய இருவரும் இன்ப நுகர்ச்சியெல்லாம் குறைவற, நுகர்ந்து, மன அமைதி பெற்ற நிலைமையில் மனையறத்திற்குப் பாதுகாவலாகிய மக்களால் நிறைந்து, அறத்தையே புரியும் சுற்றத்தாருடன் உயிரினும் சிறந்த 'செம்பொருளின்' இயல்பினை அறிஞரிடம் கேட்டறிந்து அச்செம்பொருளிடம் மனத்தை இருத்தி, அதன் தன்மையினை உணர்ந்து, போற்றி வாழ்தலே இதுவரை தாம் அன்பினால் நிகழ்த்திப் போந்த இல்லறத்தின் முடிந்த பயனாகக் கருதினர்.

---

7. புறம் - 195. 8. புறம் - 194.

கடவுள் நெறி:

பண்டைத் தமிழ் மக்கள் "உலக இயற்கையிலுள்ள அழகினைக் கண்டு வியந்து அவ்வளவில் அமைந்துவிடாமல், அவ்வியற்கையின் உள்ளே நுழைந்து அங்கெல்லாம் பிறழாத ஓர் ஒருமைப்பாடும், அதனை அங்கே நிலைபெறுத்தி மறைந்து கிடக்கும் ஓர் உயிர்ப்பொருளின் இருப்புங் கண்டறிந்து களிப்படைந்தனர். அங்ஙனம் இவ்வுலக இயற்கையில் மறந்து ஊடுருவிக் கிடைக்கும் அவ்வுயிர்ப் பொருளினையே கடவுள் என்று துணிந்து, அதனை மனத்தால் நினைந்து, வாயால் வாழ்த்தி, மெய்யால் வணங்கி வழிபட்டு வந்தனர்."[9]

தோற்றமும் ஒடுக்கமுமின்றி என்றும் நின்றும் நிலவுவதாய்த், தன்பால் ஒன்றும் ஊடுருவ இயலாமையால் தூய்மையுடையதாய்த், தனக்கு எத்தகைய குறைவுமின்றி என்றும் ஒரே தன்மைத்தாய் நிற்றல் முழுமுதற் பொருளின் இயல்பாதல் பற்றி அதனைச் 'செம்பொருள்' என்று போற்றினர்.

கடவுள் உலகத்திற்குத் தலைவன்; அவன் குணங்களை அடைவதே கல்வி கற்பதனாலாய பயன்; உயிர்களின் உள்ளங்களில் எல்லாம் அப்பெரியோன் அவரவர் நினைவின் வடிவமாகத் தங்கியிருக்கின்றான். அவன் பற்றில்லாமல் செயலாற்றுபவன்; அதனால் அவனுக்கு நல்வினை தீவினைகள் உண்டாவதில்லை. அவனுக்கு விருப்பு வெறுப்பு என்பதும் இல்லை. அவனுக்கு மேல் இன்னொருவர் இல்லையாதலால் அவனுக்கு அவனையேதான் உவமையாகக் கூறவேண்டும். அவன் அறமும் அருளும் உடையவன்; மதிக்கத்தக்க ஆற்றல்கள் உடையவன்; அவன் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை என்னும் கடவுளின் இயல்புகளைப் பண்டைத் தமிழ்மக்கள் அறிந்து போற்றி வாழ்ந்தனர்.

"பழந் தமிழர் இயற்கை அழகையே உயர்ந்த பொருளாக - அதாவது கடவுளாகக் கொண்டு வாழ்ந்தனர். அவர் மலைமீது வாழ்ந்தபோது அவர் உள்ளத்தைக் காலையிலும் மாலையிலும் ஞாயிற்றின் செம்மையும், வானத்திற்படரும் செம்மையும், பிற செம்மைகளும் கவர்ந்தன. அச்செவ்விய இயற்கை அழகை, 'சேய்' என்று போற்றினர். அம் மக்கள் தங்கள் கண்ணுக்குப் பச்சைப்

9. மறைமலை அடிகள் : முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பக்.13-14.

பசேலெனக் காட்சி வழங்கிய காட்டின் இயற்கையை 'மால்' என்று வழுத்தினர். அவர் மருதநிலத்தில் குடிபுகுந்தபோது, அங்கே பெரிதும் தம் இனமாகிய கூட்டத்துடன் நெருங்கிப் பழக நேர்ந்தமையான், மக்கள் மாட்டு ஒளிரும் இறைமை என்னும் இயற்கை அழகைக் கண்டு அதை 'வேந்து' என்று கொண்டனர். அவர் கடற்கரை நண்ணியபோது கடலின் இயற்கை அழகை 'வண்ணம்' என்றனர். பழந்தமிழ் மக்கள் அவ்வந்நில இயற்கை அழகுக்கு இட்ட பெயர்கள் சேய், மால், வேந்து, வண்ணம் என்பன"[10]

இவற்றை எல்லாம் உற்று நோக்கும்போது, தெளிவு உணர்வான கட்டற்ற ஒரே கடவுளை - பற்றற்ற ஒரே பரம்பொருளைப் பண்டைத்தமிழ் மக்கள், இங்ஙனம் சேயோனாகவும், மாயோனாகவும், அழைத்து வழிபட்டு வாழ்ந்தனரென்று தெரிகின்றது.

இறைவனின் இருப்பில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் வாழ்ந்த தமிழ் மக்கள் இறைவனை வழிபடும்பொழுது, 'பெருமானே! யாங்கள் உன்னிடத்தில் தாழ்மையாக மன்றாடி வேண்டுவது பொருளும், பொன்னும், போகமும் (இன்ப நுகர்ச்சியும்) அல்ல; அருளும், அன்பும், அறனும் என்னும் தெளிந்த உணர்வுகளேயாம்'

'.....யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்' – பரிபாடல் 5.

என்று வேண்டி நின்றனர். பண்டைத் தமிழன் சமயவாழ்வில் உற்றிருந்த ஓர் உயர்ந்த நிலையினைத் தெளிவாக இப்பாடல் விளக்குகின்றது. பழந்தமிழர்கள் இறைவனிடத்து வேண்டுகின்ற பொழுதும் தங்களுக்கு 'அற உள்ளம்' வாய்க்கப் பெறுதல் வேண்டும் என்பதனையே தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தமை கருதுதற்குரியது.

சங்ககாலத்து மக்கள் வாழ்க்கையே நூல்களாக உருவம் பெற்றது. அக்காலத்திய தமிழர் வாழ்க்கை மாசு மறுவற்ற அழியாப் பேரொளியும் பெரும்பயனும் பெருமதிப்பும் உடைய மெய்யுணர்வு வாழ்க்கையாகத் திகழ்ந்தது. மேன்மேலும் உண்மை

10. திரு.வி.க: தமிழ் நூல்களில் பௌத்தம் பக்: 11.

காணும் வாழ்க்கையாக அக்காலத்திய மக்கள் வாழ்க்கை வளர்ச்சி நெறியில் ஓங்கிச் சென்றது. கொள்கைகள் வேறாகவும் வாழ்க்கை வேறாகவும் அக்காலத்தில் பிரிவுண்டுநிற்கவில்லை. 'தமிழ்ச் சான்றோர்களின் முதிர்ந்த அனுபவத்தில் முகிழ்த்த கொள்கைகள், வாழ்க்கையாகிய சாணையில் இணைந்து உரசி மேன்மேலும் நுட்பமாக்கப் பெற்றுப் பயன்முகமாக விளங்கின.

சங்ககாலத் தமிழர்கள் தூய்மையான உயர்ந்த உணர்வு வாழ்க்கை வாழ்ந்தனர், என்பதற்கு அவர்கள் இயற்றியுள்ள இலக்கியங்களே தக்க சான்றாகும். அன்றைய உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த கலைஞர்களும், கவிஞர்களும், மனிதனின் இழிந்த உணர்ச்சியான உடல் பசியினைப் புனைந்துரைத்து பல்லாயிரக்கணக்கான பாடல்கள் பாடியுள்ளனர். ஆனால், அக்காலத்திலும் - அக்காலத்திற்கு முன்பும் வாழ்ந்த தமிழ்ச்சான்றோர்கள் உள்ளத்து எழும் தூய உணர்வினைச் சிறந்ததாகப் போற்றி, அதனை அகம், புறம் என்னும் பாகுபாட்டுக்குள் அடக்கிச் சொல்லோவியமாகத் தீட்டித் தந்துள்ளனர். இவ்வாறு உயர்ந்த உணர்வுநிலையினைப் பெற்ற தமிழர்கள் வாழ்வு சிறந்ததொன்றாகும். வாழ்க்கையில் அறிவு நிலைகள் ஒழுக்கங்களாகச் செயற்படும்பொழுது அவை உணர்வு நிலைகளாக மாறுகின்றன. அந்நிலையில் அவை பேராற்றல் வாய்ந்தனவாகத் திகழ்கின்றன. இத்தகைய உணர்வு வாழ்க்கையில், மிக உயர்ந்த உணர்வு வாழ்க்கையே அருள் வாழ்க்கை அல்லது சமய வாழ்க்கை, மெய் வாழ்க்கை என்னும் பலவகைப் பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன. ஆகவே, சங்ககால வாழ்க்கை அதன் பண்பில் சமய வாழ்க்கையின் கூறுகளை உடையனவாக இருந்தமை தெளிவாகிறது. சமய வாழ்க்கை வேறென்றும், உலக வாழ்க்கை வேறென்றும் பிரித்துரைக்கும் பிற்காலப் பொய்ம்மை நெறி சங்ககாலத்தில் இல்லை. அன்று தூய உணர்வு நெறியான கடவுள் நெறி மக்களின் அன்றாட வாழ்க்கையில் வேறுபடுத்தி அறிய முடியாதவாறு இரண்டறக் கலந்து இருந்தமை சங்ககாலப் பாடல்களால் விளக்கமுறுகிறது.

மக்களுடைய இன்ப வாழ்க்கை, பொருள் வாழ்க்கை, அற வாழ்க்கை ஆகிய மூன்றிலும் சமய வாழ்வு எனும் தூய மெய்யுணர்வு வாழ்க்கை சிறப்பிடம் பெற்றிருந்தது. ஆனால், அக்காலத்தில் சமயம் ஒரு கலையாகக் கருதப்பட்டுத் தனிக் குறியீடுகளும் இலக்கணங்களும் தோன்றுமாறு அறிவுநிலையில்

வைத்துப் போற்றப்படவில்லை. சமய உணர்வு மக்கள் வாழ்க்கையின் ஒரு கூறாகவே கருதப்பட்டது. உணர்வுநிலையின் உயர்ந்த படியாகிய 'அற வாழ்க்கையே' சமய வாழ்வு என்று கருதப்பட்ட காலம் அது. எனவேதான் சங்ககாலத்தில் தனிப்பட்ட யாதொரு சமயத்தினையும் சிறப்பாகக் காணமுடியவில்லை. கடவுள்நெறி தனிமனிதனுக்குரிய உணர்வு நெறியாகவே போற்றப்பட்டது. ஆனால், இந்நிலை மாறி சமயமும் ஒரு கலையாக வரையறுக்கப்பட்டு வாழ்க்கையினின்று வேறாகப் பிரித்து, குறியீடுகள் கொடுக்கப்பட்ட காலத்தில்தான் தமிழகத்தில் பல்வகைச் சமயங்களும், அவற்றோடு சமயப் பூசல்களும் தோன்றின. இவ்வாறு அறநெறியில் நின்று இறையின் இயல்பினையுணர்ந்து, அவன் திருவடிகளைச் சிந்தித்த, அவனை மனம், மொழி, மெய்களால் போற்றி வழிபடுவோர் பிறவிக்கடலைக் கடப்பர் என்றும், மற்றையோர் அப் பெருங்கடலைக் கடக்க அறியாது அதனுள் மூழ்கி வருந்துவர் என்றும் கருதினர்.

நிலையாமை:

நிலையில்லாத உலகியற் பொருள்களை நிலையுடையனவாகக் கருதுதல் அறிவீனம். நேற்றைக்கு இருந்தான் ஒருவன் இன்றைக்கு இறந்தான் என்று சொல்லும்படி அவ்வளவு நிலையாமை மிகுந்துள்ளது இவ்வுலகம். செல்வம் ஓரிடத்தில் நிலைத்திருப்பதும் அன்று. எனவே செல்வத்தைப் பெற்றபோதே அறம் செய்ய வேண்டும். உயிர் நீங்கும் காலத்தில் பேசுதலும் முடியாதாகையால் முன்னதாகவே விரைந்து அறஞ்செய்யவேண்டும்.[11] அறமே பெருமையையும் செல்வத்தையும் தரும். அதனைவிட உயிர்க்கு ஆக்கம் தருவது வேறொன்றில்லை. அதனை மறப்பதைவிடக் கொடிய கேடும் கிடையாது. நீக்க வேண்டியது பழியே. அறச் செயலைத் தம்மால் முடிந்த வகையில் ஒழியாது, முடியுமிடம் எல்லாம் செய்தல் வேண்டும். ஒரு நாளையும் வீணாக்காது நன்மைகளைச் செய்தால், மனிதன் பிறந்ததன் பயனை அடைந்தவன் ஆவான். அறநெறியில் ஒழுகி அடைவதே இன்பம்[12] என்னும் கருத்துக்களை, உலகின் இயல்பினைக் கூர்ந்து நோக்கிய தமிழகத்தின் மெய்யுணர்வாளர்கள் அக்காலத்திலேயே மக்களுக்கு எடுத்தியம்பியுள்ளனர்.

---

11. திருக்குறள் - 34 அதி.நிலையாமை.
12. திருக்குறள் - 4 அதி. அறன்வலியுறுத்தல்.

இவ்வுலகம் ஒரு நாடகமேடை போன்றது. நாடகத்திலே பல்வேறு நடிகர்கள் வெவ்வேறு கோலத்துடன் தோன்றித் தமது வேடத்திற்கேற்ப ஆடிப்பாடி மறைவதுபோல, பல உயிர்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி, இயங்கி இறந்து போகின்றன இத்தகைய நிலைபேறில்லாத உலகில் தமது சுற்றம் மகிழ்ச்சியுறும் வண்ணம் தாம் சேர்த்த பொருளை எல்லார்க்கும் உதவும்படிக் கொடுத்துப் புகழ் பெறுவதே அறிவின் செயலாகும் என்று எண்ணினான் சங்ககாலத் தமிழன்.

பழந் தமிழன் நல்வினையால் நன்மை விளைவதையும், தீவினையால் தீமை விளைவதையும் நன்கு ஆராய்ந்து அறிந்திருந்தான். இவற்றை இல்லை என்று மறுப்பவர் என்றும் தீமையே புரிந்தொழுகும் தீத்தொழிலாளராய் அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடிப்பர் என்பதையும் உணர்ந்தான். அத்தகையோரால் மக்கள் சமுதாயம் நாளடைவில் கெட்டுச் சீரழியும் என்பதையுணர்ந்து, அவர்களோடு கூடி ஒழுகுதல் கூடாது என்று எச்சரிக்கையுடன் வாழ்ந்தான்.[13]

கைம்மாறு கருதாது கடமையைச் செய்யும் கடமை உள்ளம் வாய்க்கப் பெற்றிருந்தான் அக்காலத்தமிழன். அறம் செய்வதனால் தனக்கு நன்மை உண்டாகுமா? அல்லது நன்மை விளையாமல் போகுமா?' என்னும் ஐயம் சிறிதளவுமின்றி வாழ்ந்தான். பயன் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் உயர்ந்தனவற்றையே அவன் உள்ளம் நாடியது. வேடன் ஒருவன் சிட்டுக்குருவி வேட்டைக்குச் சென்று ஒரு குருவியும் கிடைக்காது வீடு திரும்புவதும் உண்டு. யானை வேட்டைக்குச் சென்று பல யானைகளைக் கொண்டு வருவதும் உண்டு. ஆதலால் குருவி வேட்டையாடுவதைவிட யானை வேட்டையில் முயல்வதே மேல் என்று, உயர்ந்தரல்ல செயல்களிலே முனைந்தது தமிழன் உள்ளம். சுவர்க்கம் கிடைத்தாலும் கிடைக்காமல் போய்விட்டாலும், மறுபிறப்பு உண்டென்றாலும், இல்லையென்றாலும் அதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. நாம் செய்யும் நல்வினையே நமக்குச் சிறந்ததொரு நன்மையாகும். நாம் நல்வினையினைச் செய்வதனால் இப்பிறவியில் நாம் அடையும் புகழ் ஒன்றே போதும். நாம் இறந்தாலும், நம் புகழ் என்றும் அழியாது இமயமலை போன்று நின்று நிலவும். சுவர்க்க இன்பத்தையும் மறுபிறப்பின்மையையும்

13. புறம் - 29.

விட, இவ்வுலகில் பொன்றாது நிற்கும் ஒன்றாகிய புகழே மாண்புமிக்கதாகும். ஆகவே ஐயமும் அழுக்கும் அகற்றி, நன்மையைச் செய்து பொன்றாப்புகழ் பெற்று வாழ்வதையே சாலவும் சிறந்ததெனப் போற்றினர்[14] தமிழர்.

ஏன் அழியவில்லை?:

தனி மனிதன் நிலையற்ற உலகிடை தான் மட்டும் நிலைபெற்று வாழ விரும்பி புகழைத் தேடினான் என்பதை முன்னர்க் கண்டோம். 'பொன்றாப் புகழை எவ்வாறு தேட வேண்டும்?' என்பதை அறிவதற்குப் பண்டைத் தமிழ்ச்சான்றோர் அரும்பாடுபட்டுள்ளனர். பரந்த அனுபவமும், ஆழ்ந்த சிந்தனையும், விரிந்த அறிவும் கொண்டு தமக்கென வாழாது, பிறர்க்கென வாழ்வதால் உண்டாகும் புகழே சிறந்த புகழ். அத்தகைய புகழ் உடையோர் பலர் இவ்வுலகில் இருப்பதனால்தான் இவ்வுலகம் இன்றுவரை அழிந்தொழியாது நின்று நிலவி வருகிறது. அத்தகைய நற்பண்புடைய சான்றோர்கள் வாழவில்லையானால் இந்நிலவுலகம் மண்ணுள் மறைந்து அழிந்துவிடும்.

"பண்புடையார் பட்டுஉண்டு உலகம்; அஃது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" – திருக்குறள் –996.

என்பது வான்மறை தந்த வள்ளுவரின் முடிந்த முடிபாகும்.

அன்றைய தமிழன் கிடைத்தற்கரிய தேவர் அமிழ்தமே கிடைப்பதாயினும், அதனை இனிது என்று கருதித் தனியே தான் மட்டும் அதனை உண்ணமாட்டான்; பிறரிடம் வெறுப்புக்கொள்ளாது வாழ்ந்தான்; பிறர் கண்டு அஞ்சுகிற துன்பத்தைக் கண்டு தாமும் அதற்கு அஞ்சி அத்துன்பத்தைப் போக்க முனைந்து நின்றான். புகழ் கிடைப்பதாயின் தம் உயிரைப் பணயமாகக் கொடுத்துப் புகழைப்பெறத் தயங்காது நின்றான். உலகம் முழுவதும் தமக்கு உரிமையாகக் கிடைப்பதானாலும், அச் செயலால் தமக்குப் பழியுண்டாகும் என்று தோன்றுமாயின் அதைத் துச்சமெனத் தள்ளியுதறினான். அத்தகைய மாண்புமிக்க பண்பாட்டை உடையவனாகித் 'தனக்கு' என்று தன்னல முயற்சியில் ஈடுபடாது வாழ்ந்தான்; பிறர்க்கென வாழ்வதிலேயே பேரின்பம் கண்டான்.[15] இத்தகைய நோக்கம் கொண்ட மக்களையுடைய சமுதாயமாகப் பண்டைத் தமிழ்ச்

14. புறம் - 214. 15. புறம் - 182.

சமுதாயம் இருந்தமையாலும், அதன் அடிப்படை நன்முறையில் அமைந்தமையாலும்தான் இன்றுவரை எண்ணற்ற போராட்டங்களுக்கும், இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் இடையே சிக்குண்டு இருந்த இடம் தெரியாமல் அழிந்து ஒழியாது, 'தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்று பாவலர்கள் பாராட்டும்வண்ணம் வீறுடன் விளங்குகிறது.

நிலையில்லாத உலகிலே நிலைபெற்று வாழவிரும்பிய தமிழன், தன் புகழை மட்டும் நிலைநிறுத்திச் செல்லாது, தன்னுடைய இனம், மொழி, நாகரிகம், பண்பாடு ஆகிய அனைத்தையும் இன்றுவரை நிலைத்துவாழச் செய்துள்ளானெனில் அதற்குரிய காரணம் யாது? அவன் வாழ்வின் ஊடே விரைந்து பாய்ந்து செல்லும் உயிராற்றல் வாய்ந்த சிறந்த பண்பாடுதான் காரணம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. சான்றாண்மைமிக்க பெரியார்களால்தான் இவ்வுலகம் நிலைபெற்றிருக்கிறது என்று அன்றைய தமிழன் கருதினான். அத்தகைய சான்றாண்மை மிக்க பண்பாளர்கள் தமிழ் இனத்தில் தோன்றியதனால் - இன்னும் தோன்றுவதனால்தான் - தமிழர் இனமும் மொழியும் பண்பாடும் 'பொய்யாய்க், கனவாய்ப் பழங்கதையாய்ப்' போகாது நின்று நிலைபெற்று, 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று முழக்கம் செய்வதைக் காணுகிறோம்.

இவ்வாறு தமிழினமும், தமிழ்மொழியும் காலவெள்ளத்தை எதிர்த்து எதிர்நீச்சல் போட்டு, நீந்திக் கரையேறியதற்குரிய மூல காரணமாக - முதன்மையான காரணமாக விளங்குவது அறம். அறத்தின் அடிப்படையில் பண்டைத் தமிழர் வாழ்க்கை அமையாது இருந்திருக்குமானால், அவர்களுடைய வாழ்வு தேய்பிறைபோன்று தேய்ந்தொழிந்து இருக்கும். வாழ்க்கை அழிந்திருந்தால் வாழ்வுக்குரிய தமிழினம் அழிந்திருக்கும்; தமிழரினம் அழிந்திருந்தால் அவர்கள் பேணிக்காத்த அமிழ்தினுமினிய தமிழ்மொழி அழிந்திருக்கும்; தமிழ்மொழியோடு தமிழ்ப் பண்பாடும், தமிழர் நாகரிகமும், தமிழ்நாடும் இருக்கும் இடம் தெரியாது மண்ணொடு மண்ணாய்

மாய்ந்து மறைந்து போயிருக்கும் என்பது திண்ணம். அறத்தின் அடிப்படையில் தம் வாழ்வை அமைத்துக்கொள்ளாத கிரேக்க, ரோம, பாபிலோனிய, எகிப்திய நாகரிக நாடுகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டதை வரலாறு நினைவுபடுத்துகிறது. குடும்ப வாழ்வு சிறந்து விளங்காத ஒரே காரணத்தால்தான் கிரேக்க, ரோம நாடுகளில் போரும், பூசலும் கொழுந்துவிட்டு எரிந்தது. கிரேக்கர்களும், ரோமர்களும் தங்களுடைய அழிவை நெறிமுறை அற்ற வாழ்க்கையின் காரணமாகத் தாங்களே தேடிக்கொண்டனர் என்று வரலாற்று வல்லுநர்கள் எடுத்தியம்புகின்றனர். இதனைக் கருத்திலிருத்திப் பண்டைத்தமிழர் வாழ்க்கை நெறியினை உற்று நோக்குவோமானால், அறத்தின் ஆற்றல் இனிது புலனாகும். தனிமனிதனை மட்டும் வாழ்வாங்கு வாழவைப்பதோடு அமையாது, ஓரினத்தையே பன்னெடுங்காலம் நின்று நிலைபெற்று வாழச் செய்யும் பேராற்றல் வாய்ந்த அறத்தின் மாண்பினைக் கருதும்தோறும் வியப்பும் விம்மிதமும் உண்டாகின்றது.

5. தமிழன் கண்ட கனவு

வந்தது தீங்கு:

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் தமிழன். வரலாற்று நூலின் தொடக்க காலமுதல் இன்றுவரை தமிழகத்திற்குள் மெல்ல நுழைந்து, பையப் பையத் தமிழகத்தைத் தங்களுக்குரிமை நாடாக்கிக் கொண்ட அயலினத்தார் மிகப் பலராவார். வந்தவர்களை எல்லாம் அன்பு கனிந்த உள்ளத்தோடு வரவேற்றான் தமிழன்; வந்தவர்களுக்கு இருக்க இடம் கொடுத்து, வாழ்வதற்கு வேண்டிய வசதியும் செய்து தந்தான். வந்தவர்கள் நன்றியறிதலோடு வாழ்ந்தனர் சில நாட்கள். எனினும், தங்கள் இனம் குடியேறிய நாட்டில் அறுகுபோல் படர்ந்து, ஆல்போல் தழைத்து வாழ்வதற்குரிய வழிவகையினை ஆராய்ந்து கண்டனர், அதன் விளைவாகத் தமிழகத்தில் 'பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல்குறும்பும்' தோன்றியது.

போரென்றால் பொழுதுபோக்கெனப் புகன்ற தமிழ் வேந்தர்களுக்கிடையே பகைமைத்தீயினை மூட்டிவிட்டனர் சிலர். 'ஒன்று பரம்பொருள் நாமதன்மக்கள்' என்ற விழுமிய நோக்கொடு வாழ்ந்த மக்களிடையே, கொண்டொழுகும் கொள்கையாலும் வழிபடும் தெய்வத்தாலும் வேறுபாடுகள் பல கற்பித்தனர். அதோடு அமையாது பண்டைத் தமிழர் கொண்டிருந்த மெய்யுணர்வுக் கோட்பாடுகளைத் தகர்த்து எறிந்தனர். இதனால் மக்கள் மனத்திலே ஒருவகைக் கலக்கம் உண்டாயிற்று. மேலும் பிறப்பால் வேற்றுமை இல்லாது சிறப்பால் வேற்றுமை கண்ட தமிழிரிடை நிறத்தாலும், செய்கின்ற தொழிலாலும் வேற்றுமையைப் புகுத்தினர். இதைக்கண்டு அஞ்சிய அறிஞர்கள் பலர் வெள்ளம் வருவதற்கு முன்பே அணைபோடத் தவறியதை நினைந்து வருந்தினார்கள். வருங்காலத் தமிழகத்தைப் பற்றி எண்ணிய சான்றோர்கள் சிலர், தமிழ்ப் பண்பாட்டிற்கு ஆக்கம் தேடும் வகையினை ஆராய்ந்தார்கள்.

போரே வேண்டாம்:

முதலாவதாக தன்மானத்திற்காகவும், தன் புகழிற்காகவும் அடிக்கடி தங்களுக்குள்ளே ஒற்றுமையின்றி, பகைமை வளர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்த தமிழ் வேந்தர்களிடையே 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை குலைந்திடில் நம் அனைவர்க்கும் தாழ்வு' உண்டாகும் என்பதனை ஒல்லும் வகையெல்லாம் உணர்த்தி வந்தனர். போரினால் உண்டாகும் அழிவையும், மக்களுக்குண்டாகும் துன்பத்தையும் மன்னர்களின் மனக்கண்முன் தோன்றுமாறு சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டினர். பண்டைத் தமிழ்வேந்தர்கள் போர் வெறியும் மண்ணாசையும் கொண்ட, அலெக்சாண்டர், செங்கிஸ்கான், நெப்போலியன் போன்ற வெறிபிடித்த வீரர்களாக மாறாவண்ணம் அவர்கள் உள்ளத்தை வேறு நெறியிலே திருப்புவதற்கு அரும்பாடுபட்டனர்.

போரையே தனது இளமை முதல், பொழுதுபோக்கெனக் கருதித் தமிழகத்தினை ஒரு குடைக்கீழ் ஆண்ட ஒப்பற்ற வேந்தனாகிய தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் "போர் செய்வது அரசனுக்குரிய கடமைகளுள் ஒன்று; வாழ்நாள் முழுவதும் போர் புரிவதே அரசனுடைய கடமையாகாது; அதையே வாழ்க்கையின் பயனாகக் கருதி இறுமாந்திருத்தல் அறிவுடைமையுமாகாது. எனவே, ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த அழகிய மகளிர் அருகிலிருந்து, மணமும் குளிர்ச்சியும் நிறைந்த தேறலைப் பொற் கிண்ணத்தில் ஊற்றிக் கொடுப்பதை உண்டு மகிழ்ச்சியுடன் வாழ்வாயாக! அவ்வாறு வாழ்வதே வாழ்வாங்கு வாழ்வதாகும்; புகழுடன் வாழ்வதற்குரிய வழியுமாகும்"[1] என்று மாங்குடி மருதனார் அவனது உள்ளத்தை அறநெறியில் - இல்லறக் கடமைகளில் - கருத்துச் செலுத்துமாறு தூண்டியமை இங்கு நினைவுகூரத்தக்கது.

இரண்டு உலகப்போர்களைக் கண்டு அச்சமும் வெறுப்பும் கொண்ட நாம், இனி உலகில் போர் உண்டாகாமல் பார்த்துக் கொள்ளுவதற்குரிய வழி வகைகளைச் சிந்தித்து அதற்கென உலக மக்கள் அனைவரும் சேர்ந்து ஓர் அமைப்பினை அமைத்துப் போற்றி வருகிறோம் அல்லவா? அந்த அமைப்பின் மூலம் இனி உலகில் போரே மூளாமல் பார்த்துக் கொள்ளுவதற்குரிய நெறிமுறைகளை வகுத்து, அதைச் செயல்படுத்துவதில் கண்ணும்

1. புறம் - 24.

கருத்துமாக இருந்து வருகிறோம். உலகில் போரே உண்டாகாமல் காப்பதற்குரிய தடுப்புமுறைகள் பலவற்றையும் பற்றி உலகப் பேரறிஞர்கள் இன்றும் தங்கள் சிந்தனையில் தோன்றும் புத்தம் புதிய கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

தமிழன் கண்ட கனவு:

இதைப் போன்றே ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் தோன்றிய ஒரு தமிழன் ஓர் ஒப்பற்ற கனவு கண்டான். நாட்டிலே போர் உண்டாகாமல் இருக்க வேண்டுமானால், போரினால் உண்டாகும் கொடுமையையும், போரின்மையால் உண்டாகக்கூடிய நன்மையையும் மன்னன் முதல் மக்கள்வரை நன்கறிந்திருத்தல் வேண்டும் என்பதனை உணர்ந்திருந்தான். அவன் ஒரு மாபெரும் மன்னனைப் பார்த்து 'வேந்தே! நினது குடை நிழற்கீழ் வாழும் மக்கள் சோறு சமைக்கும் நெருப்புடனே கதிரவனின் வெயில் வெம்மையைத் தவிர, வேறு வெம்மையை கொடுந்துன்பத்தை அறியார்; வானவில்லை அன்றிப் பகைவருடைய கொலைவில்லைப் பார்த்தும் அறியார்; உழவுத் தொழிலிற்குரிய கலப்பையைத்தவிர, வேறு படைக்கலன்களைக் கண்டறியார்; நின் நாட்டில் கருவுற்ற மகளிர் வேட்கையினால் விரும்பி உண்பதல்லாது பகைவரால் உண்ணப்படாத மண்ணினையுடையாய் நீ!' என்று தான் கனவில் கண்ட இலட்சிய நாடாக, அம் மன்னனுடைய நாடு விளங்க வேண்டும் என்று குறிப்பாகப் புலப்படுத்துகிறான்.

"சோறு படுக்கும் தீயொடு
செஞ் ஞாயிற்றுத் தெறல் அல்லது
பிறிது தெறல் அறியார், நின்நிழல் வாழ்வாரே!
திருவில் அல்லது கொலைவில் அறியார்;
நாஞ்சில் அல்லது படையும் அறியார்;
திறன்அறி வயவரொடு தெவ்வர் தேய,அப்
பிறர்மண் உண்ணும் செம்மல்! நின்நாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது,
பகைவர் உண்ணா அரு மண்ணினையே" – புறம்.20.

என்று போரின்றி அமைதியாக வாழ்வதற்குரிய சூழ்நிலையையும், அதற்குரிய அறிவாற்றல்களையும் தமிழ் மக்கள் உண்டாக்கிக் கொள்ளுவார்களானால், தமிழர்களிடையே போரும் பூசலும் தோன்றாது ஒன்றுபட்டு, மாற்றார் கண்டு அஞ்சத்தக்க ஒரு

மாபெரும் இனமாக விளங்கமுடியும் என்பதனை அறிவுறுத்தி வந்தனர்.

வடநாட்டு மன்னர்களான காவா நாவிற் கனகனும் விசயனும் வடநாட்டில் நடந்த ஒரு விருந்திலே பல புதிய மன்னர்களுடன் கூடி, அருந்தமிழ் ஆற்றல் அறியாது இழித்தும் பழித்தும் பேசினர் என்ற செய்தி தனக்குக் கிடைத்தவுடனே, பெருஞ்சினத்துடன் கொதித்து எழுந்த சேரன் செங்குட்டுவன், 'வடதிசை மருங்கின் மன்னர்க்கு எல்லாம், தென்தமிழ் ஆற்றல் காட்டுதும் யானெ'னப் போருக்குப் புறப்பட்டுச்சென்று கங்கைக் கரையிலே மாபெரும் வெற்றி பெற்று திரும்பிய வரலாற்றைச் சிந்தைக்கு இனிய சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். தமிழகத்து மூவேந்தர்களுக்கு இடையே ஒற்றுமை நிலவிய காலத்தில்தான் வடநாட்டு மன்னர்களை எதிர்த்து வெற்றிபெற முடிந்ததை இளங்கோவடிகள் குறிப்பாகக் காட்டிச் செல்லுகிறார்.

இத்தகைய ஒருமைப்பாட்டை மூவேந்தர்களிடையே காணக் கருதிய சான்றோர், தமிழகத்தில் இனி போரே உண்டாகாமல் இருப்பதற்குரிய சிறந்ததொரு வழியைக் கண்டு உரைத்தார். அவர் கண்ட கனவு அன்றைய தமிழகத்திற்கு மட்டும் தேவைப்பட்டதன்று. இன்றும், என்றும் மக்களினம் மாண்புற்று வாழ வேண்டுமானால் - போரைப் பற்றிய கவலையின்றி வளமாக வாழவேண்டுமானால் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழன் கண்ட கனவு நினைவாக வேண்டும். அன்றுதான் உலகில் உண்மையான அமைதியை, அன்பை, இன்முகத்தைக் காணமுடியும். அந்நாள்வரை உலகம், குமுறும் எரிமலை புன்னகை புரிவதைப் போன்று 'போலிக் காட்சி'யினை வழங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஒரே வழி:

'உலகிலே போரே உண்டாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?' என்னும் ஐயம் நம் உள்ளத்தே எழுவது இயற்கை. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு உலகில் போரே உண்டாகாமல் தடுக்க, உலக நாடுகள் பல ஒன்றுகூடி 'ஐக்கிய நாடுகளின் அமைப்பு' என்னும் ஒரு கழகத்தை அமைத்ததை நாம் அறிவோம். அந்த அமைப்புத் தோன்றுவதற்குக் காரணம் "நாம் எல்லோரும் நல்ல நண்பர்களைப் போன்று கூடிவாழ்ந்து உலகில் அமைதியையும் இன்பத்தையும் காணவேண்டும்" என்பதற்காக ஐக்கியநாட்டு அமைப்புக்களின்

உரிமைப் பட்டயம் (United Nations Charter) எடுத்தியம்புகிறது. இன்றைய உலகம் இதனை மிகவும் விரும்பிப் போற்றுவதைக் காணுகிறோம்.

'உலகம் ஒரு குடும்பம். அதன்கண் வாழும் மக்கள் அனைவரும் ஒரு குடியில் தோன்றிய சோதரர்கள் என்னும் சிறந்த நோக்கத்தோடு, உலக வாழ்வில் உண்டாகும் துன்பங்களைக் கண்டு அஞ்சாது உள்ள உரமுடன் வாழ முயல்வதே மக்களாகப் பிறந்தாரின் கடமை' என்பதனைத் தமிழகம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு உயர்த்தியமை இங்கு நினைவுகூரத்தக்கதாகும். தமிழன் கண்ட இந்த அரும்பெரும் உண்மையை கடந்த முந்நூறு ஆண்டுகளாகத்தான் உலகில் உள்ள பிறநாடுகள் கருதத் தொடங்கியுள்ளன.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்னும் கருத்தினைப் பிறநாட்டு அருளாளர்கள் கூறியதற்கும், கணியன் பூங்குன்றன் என்ற தமிழன் கூறியதற்கும் இடையே மிக்க வேறுபாடு காணப்படுகிறது. அதிலும் தமிழன் கூறிய முறையே ஒரு தனிச் சிறப்புடையதாகத் தோன்றுகிறது. ஒருவன் உலகில் உள்ள ஊர்கள் எல்லாம் தன்னுடைய ஊரென்றும், அங்கு வாழும் மக்கள் எல்லாம் தன்னுடைய சுற்றத்தார் என்றும் கருதி வாழ முற்பட்டாலும், பிறர் அவனுக்குத் தீங்கு இழைக்கும் பொழுது அவ்விழுமிய எண்ணம் பல நாட்களுக்கு நிலைத்து இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சிறு துன்பமாக இருக்குமானால் சில நாட்கள் எந்த மனிதனாலும் பொறுத்துக் கொள்ள முடியும். வேண்டும் என்றே பிறிதொரு காரணமுமில்லாமல் உயிரை இழக்கக்கூடிய கொடிய துன்பத்தைப் பிறர் தனக்கு இழைத்தால், அதைப் பொறுத்துக்கொண்டு 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்று உயர்ந்த நோக்கத்துடன் ஒருவன் வாழ முடியுமா? அவர்களைப் பகைவர் என்றுதானே கருத நேரிடும். இச்சிக்கல்களை எல்லாம் நன்கு சிந்தித்து, அவற்றிற்கு ஒரு முடிவு கண்டான் கணியன் பூங்குன்றன்.

ஒருவன் தனக்குத் தீங்கு இழைத்துவிட்டான் என்று உணரும் போதல்லவா அவன்மீது வெறுப்பும் பகையும் கொள்ளுகிறோம். அவ்வாறு நினையாமல் தனக்குப் பிறனொருவன் நன்மையோ தீமையோ செய்ய முடியாது, என்று நினைக்கும் பண்புள்ளம் வாய்க்கப்பெற்றால் வெறுப்புக்கொள்ள வாய்ப்பில்லை அல்லவா?

இதைக் கருத்தில் கொண்டுதான் அடுத்த அடியிலேயே 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார். அவ்வாறாயின், 'பிறரால் நமக்கு துன்பம் உண்டாவதை வாழ்க்கையில் காணுகிறோமே?' என்னும் ஐயம் எழுவது இயல்பு. அவ்வையத்தைப் போக்கவே, இன்பமும் துன்பமும் (நோதலும் தணிதலும்,) ஒருவர் கொடுத்து நாம் பெறுவன அல்ல; நமது செயல்களினாலேயே அவை நமக்கு வருகின்றன' என்று எடுத்தியம்புகிறார். அப்படி 'ஒருவன் நமக்குத் துன்பம் செய்வதனால் இறந்துபடும் நிலை வந்தால் என் செய்வது?' என்று அஞ்சி நடுங்குவாரை நோக்கி, 'சாவைப் பற்றி நாம் அஞ்சவேண்டியதில்லை' என்று பிறந்தோமோ அன்றே இறப்போம் என்பது உறுதியாகிவிட்டது. எனவே இறத்தல் என்பது புதுமையன்றே! அது ஒரு சிலருக்கு உரியதுமன்று. வாழ்வு இன்பந்தருவது; சாவு துன்பந்தருவது என்று ஏன் மனம் கலங்க வேண்டும்? அவ்வாறு மனம் அஞ்சுவதனால் தானே பிறர்மேல் வெறுப்புக்கொள்ள நேரிடுகிறது? எனவே அவ்வாறு சாவைக் கண்டு அஞ்சவேண்டாம்' என்று ஆறுதல் கூறுகின்றார் பூங்குன்றனார்.

பிறருக்கு நாம் ஒரு நன்மை செய்கின்றபொழுது, நாம் செய்யும் உதவிக்கு அவர் நன்றி பாராட்டாது போவாரானால் நமக்கு ஒரு கால் வெறுப்புண்டாகலாம். அத்தகைய வெறுப்பும் உண்டாகக்கூடாது என்பது தான் தமிழன் கண்ட அறம். 'வானம் இடியுடன் மழை பெய்கிறது. அதனால் ஆற்றில் வெள்ளம் பெருகி ஓடுகிறது. அந்த வெள்ளத்தில் ஒரு தெப்பம் அகப்பட்டுவிடுமாயின், அது வெள்ளத்தின் போக்கை எதிர்த்துப்போக இயலாது. வெள்ளம் பாய்ந்தோடும் வழியே அத் தெப்பமும் மிதந்து செல்லும் அல்லவா? அதைப்போலவே ஒவ்வொருவருடைய பெறுதற்குரிய உயிரும் அதனுடைய ஊழின் வழியே நடைபெற்று இயங்குகின்றது. ஆகவே, நன்மை செய்யும் ஒருவனைப் புகழவும் வேண்டா, தீமை இழைக்கும் ஒருவனை வாய் தவறியும் இகழ்ந்துரைக்க வேண்டாம்' என்னும் விழுமிய நோக்கோடு வாழ்ந்தால், உலகில் உள்ள மக்கள் அனைவரும் 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்னும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டைப் பெற முடியும் என்பதைப் பல்லாற்றானும் வற்புறுத்திச் சென்றனர். பண்டைத்தமிழர். (புறம்.192).

பழமையும் புதுமையும்:

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கியநாட்டு அமைப்பின் பேரவையில் "மனித உரிமைகளும் தனி மனிதனின் பொறுப்பும்" காக்கப்பட வேண்டியது குறித்து அறிக்கை வெளியிட்ட செயல்துறைத் தலைவர் (Secretary General) 'தனி மனிதன் என்ற முறையில், பிறருடைய உரிமைகளை மதித்துப் போற்றும் நம் உள்ளப் பண்பைப் பொறுத்தே நமது உரிமைகளும் சிறந்து விளங்கமுடியும். இக்கொள்கையைப் பல்வேறு நாட்டு மக்களிடையே கொள்ளும் உறவுமுறைகளிலும் கடைப்பிடித்து ஒழுகுவோமானால், அது உலக அமைதிக்குச் சிறந்ததொரு அடிப்படையாக அமையும் என்பது திண்ணம். எங்கும் மனித உரிமையின் மாண்பினை மதித்துப் போற்றுவதற்கு, நமக்கு நம்முடைய உரிமைகளும் நோக்கங்களும் எவ்வாறு தெய்வத்தன்மை வாய்ந்தனவாகத் தோன்றுகிறதோ, அதைப்போன்று நம்முடன் வாழும் மக்களின் உரிமைகளையும் நோக்கங்களையும், அவர்கள் கூடி வாழும் சமுதாயத்தின் - நாட்டின் - உரிமைகளையும் நோக்கங்களையும் சிறந்ததாகவும் புனிதமானதாகவும் நாம் ஏற்றுக்கொள்ளுவதற்கு நம்மை நாமே மறுமுறையும் படைத்துக்கொள்வோமாக! இத்தகைய மனநிலையோடு நாம் செயலாற்றுவோமானால், நம்மை நாமே காத்துக் கொள்ளுவதோடு இன்றும் நம் பார்வையை மறைக்கும் மேகமாகிய அச்சத்தை விரட்டியடிக்க இயலும். மேலும் நம்முடைய முயற்சியை ஒருங்கு திரட்டிக் காலத்தின் அறைகூவலுக்கு விடை கூற முடியும்'[2] என்று மொழிந்துள்ளமை இங்குக்குறிப்பிடத்தக்கதாகும்.

---

2. *Our rights as individual human beings depent on our willingness to act with respect for the rights of others. And this Principle applied to the relationship of nations with one another is likewise the basis of a world at peace. We need to rededicate ourselves to the recognition of human dignity everywhere, and to the courageous acceptance of our fellow men as individual and as nations, with rights and aspirations as sacred to them as ours to us. It is only in this spirit that we can act to dispel the insecurity and fear which today becloud our vision and shackle our efforts to respond to the challenge of our times*".

Foreword to
The Universal Declaration of Human Rights.

இதனுடன்,

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
... ...
... ... மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" (புறம்–192)

என்னும் பண்டைத் தமிழன் கருதிய கருத்தினையும் ஒப்புநோக்குவோமானால், அணுகுண்டு போன்ற கொடிய கொலைக்கருவிகளை மக்களினம் கனவில்கூட செய்ய நினைக்காத நெடுங்காலத்திற்கு முன்பே, தமிழன் உலக சகோதரத்துவத்தைப் பற்றிக் கனவு கண்டான். 'எல்லோரும் ஓரினம்; எல்லோரும் ஓர் நிறை' என்று இன்று அச்சத்தின் காரணமாகப் பறை அறைவதைப் போன்று தன்னலங் காரணமாகத் தமிழன் இவ்விழுமிய உண்மையினை உலகிற்கு எடுத்துரைக்கவில்லை என்பது இனிது புலனாகும். இத்தகைய எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் பொருந்தக்கூடிய ஓர் ஒப்புயர்வற்ற உண்மையைத் (Universal Truth) தமிழன் உலகிற்குத் தந்தான். அவ்வாறு சிறந்ததொரு கருத்தினை உலகிற்குத் தந்ததொடு அமையாது உலக மக்களை நோக்கி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!' என்று அறைகூவி அழைத்துத் தன்னுடைய நாட்டினையே 'ஒருலகப் பெருநாடா'க்க பெரிதும் முயன்றமை இன்றுவரை உலகப் பேரறிஞர்களால் உணர்ந்து போற்றப்படாமை தமிழகத்தின் தவக்குறைவே யாகும்.

II. அன்பு

1. அறத்தின் வீழ்ச்சி

தமிழக நிலை:

தமிழக வரலாற்றில் கடைச்சங்க காலத்திற்குப் பிறகு, ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு (கி.பி.250 முதல் கி.பி.600 வரை)க் காரிருள் சூழ்ந்து கிடக்கிறது. தொன்றுதொட்டு தமிழகத்தை ஆண்டவந்த மூவேந்தர்களின் ஆட்சி ஒடுங்கி, முதன்முதல் தமிழகத்தில் பிறமொழியாளராகிய அயலாரது ஆட்சி கால்கொள்ளத் தொடங்கிய காலம் இது. இதனால் தமிழகம் சீரும் சிறப்புமிழந்து மாற்றாரின் அடிமைகள் வாழும் நாடாக மாறியது. தொண்டை நாட்டிலே பல்லவர்களும், சோழ பாண்டிய நாடுகளிலே களப்பிரர் என்ற கொள்ளைக் கூட்டத்தினரும் கோலோச்சத் தொடங்கினர். அவர்கள் நுழைவு தமிழக வரலாற்றை இருள் நிறைந்ததாக்கிவிட்டது. அக்காலத்திய நாடு, மொழி, மன்னர், மக்கள் நிலையைப்பற்றி ஒன்றும் அறிவதற்கு இயலா நிலையில் இருக்கிறோம்.

இலக்கியங்களிலும் களப்பிரர் இடையீட்டிற்கு மறைமுகமான சான்றுகள் உள்ளன. சிலம்பும் மணிமேகலையும் இயற்றப்பட்ட பிறகு, கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரையில் சிறந்த தமிழிலக்கியங்கள் தோன்றியதாகத் தெரியவில்லை. இந்த இடைக்காலத்தில் தமிழ்ப்புலவர்கள் தோன்றவில்லையா? 'சங்கம்' எனும் தொட்டிலில் தமிழை வளர்த்த பாண்டியர் குடி அழிந்து போயிற்றா? மற்றைய சேர சோழ மன்னர்களும், வந்தவர்க்கு வரையாது வழங்கிய வள்ளல்களும் எங்கு போயினர்? என்னும் எண்ணம் எழுவது இயற்கை. ஆம்! தமிழகத்தின் தார் வேந்தர்களின் குடும்பங்கள் தலை மறைந்து வாழ்ந்து வந்த காலமது! அமிழ்தினுமினிய தமிழ்மொழியைப் பேணி வளர்த்த பாண்டிய மன்னர் மரபு பிழைக்கும் வழியறியாது புண்பட்ட உள்ளத்தினராய்த் தங்கள் உயிரைக் காப்பாற்றி வாழ்ந்த காலமது! தமிழகத்தின் அமைதியும் இன்ப வாழ்வும் குலைந்து மக்கள் அல்லும் பகலும் அஞ்சி வாழ்ந்த காலமது! இந்நிலையில் புலவர்களைப் போற்றுவார் யார்? உயிரினுமினிய தமிழைப் பேணி வளர்ப்பவர் யார்? வடக்கே இருந்துவந்த கொள்ளைக்கூட்டத்தினரான

களப்பிரரும், வேற்றுமொழியாளராகிய பல்லவரும் தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலமல்லவா அது? இந்நிலையில் சிறந்த இலக்கியம் எவ்வாறு தோன்ற முடியும்? அதனால் தான் இவ் இன்னல் மிக்க இடைக்காலத்தில் சிறந்த இலக்கியம் ஒன்றும் தோன்றவில்லை.

களப்பிரர் யார்?

தமிழக வரலாறு தெளிவு பெறாமல் இருண்டு கிடக்கும் இக்காலத்தில் (கி.பி.250-600) தமிழகத்தின் பெரும் பகுதி 'வடுகக் கருநாடர்' என்ற ஒரு மறவர் கூட்டத்தாரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அவர்கள் ஆதியில் துங்கபத்திரை ஆற்றுக்கு வடக்கேயுள்ள கரியநாடும் திராவிடத்தின் பகுதிகள் ஐந்தனுள்[1] ஒன்றாகிய கருநடத்தில் வாழ்ந்து வந்தனர். தக்கணத்தில் ஆந்திரரின் ஆதிக்கம் பெருகத் தொடங்கியதும், அவர்கள் அங்கிருந்து வெளியேறித் தெற்குத் திசை நோக்கி வந்தனர். கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடவேங்கடத்தைக் கடந்து மெல்ல மெல்லச் சோழநாடுவரை சென்றனர். வேள்விக்குடிச் செப்பேடுகளில்[2] 'களப்பிரர்' என்றும், பெரியபுராணத்தில்[3] 'கருநடர்' என்றும் பேசப்படுகிறவர்கள் அவர்களே யாவர். களப்பிரர் வருகை நாட்டில் ஆங்காங்குக் கலவரம் விளைத்ததால், அக்கொள்கைக் கூட்டத்தினரைத் தமிழில் 'களவர்' என்றும், கன்னடத்தில் 'களபரு' என்றும், வடமொழியில் 'களப்ரா' என்றும் பெயரிட்டு அழைத்தனர். அச்சொற்கள் திரிந்து களப்பிரர், களப்பாளர் என ஆயின. களபூரிய, கலசூரியர் (Kalachuri's) என்ற பெயர்களின் திரிபு என்பாரும் உளர்.[4]

கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தைக் களப்பிரர் கைப்பற்றியதால் சோழ, பாண்டிய, பல்லவ அரசுகள் அமைதியையும் உரிமையையும் இழந்தன. அவர்கள் பௌத்த சமண சமயங்களையே தழுவினவர்களாவர். கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலேயே பௌத்தமும் சமணமும் தமிழகத்தில்

1. பஞ்ச திராவிடம்: தமிழகம், ஆந்திரம், கருடம், மகாராட்டிரம், கூர்ச்சரம்.
2. 'களப்பரனென்னும் கலியரைசன்' - வேள்விக்குடிச் செப்பேடு - 12ம்வரி.
3. 'கானகக்கடிசூழ் வடுகக்கருநாடன்' பெரியபுராணம் மூர்த்தி நாயனார். 16
4. K.S.சீநிவாசம் பிள்ளை - தமிழ் வரலாறு - பக்.13.

புகுந்தனவாயினும், களப்பிரர் வந்த பின்னரே அவை தழைத்தன. களப்பிரர் ஆதிக்கத்தின் முற்பகுதியில் பௌத்தமும், பிற்பகுதியில் சமணமும் செல்வாக்குப் பெற்றிருந்தன. அகச் சமயங்களான சைவமும் வைணவமும் களப்பிரரால் ஒடுக்கப்பட்ட காரணத்தால் அவர்களைக் 'கலியரசர்கள்' என்று அழைத்தனர்போலும். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் களப்பிரரை அடக்கியொடுக்கி, பல்லவ பாண்டிய நாடுகள் தலைதூக்கினவென்பதை பல்லவன் சிம்மவிஷ்ணு, பாண்டியன் கடுங்கோன் வரலாறுகளால் அறியப்படுகிறது. வடக்கே பல்லவராலும், தெற்கே பாண்டியராலும் நெருக்கப்பட்ட களப்பிரர், ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் சோழ நாட்டில் தஞ்சையிலும், கோனாடு எனப்படும் புதுக்கோட்டைப் பகுதியிலும் முத்தரையர் என்னும் பெயருடனே சிற்றரசர்களாக விளங்கினர்.

தக்கணத்திலிருந்து குடிபெயர்ந்த களப்பிரர் அருவாவடதலை நாட்டில் (திருப்பதி பகுதியில்) குடியேறினர். வடபெண்ணை யாற்றுக்குத் தெற்கில் காளத்தி, திருவேங்கட மலைகளிலும், அவற்றைச்சுற்றியிருந்த காடுகளிலும் வசித்தனர். சோழ மன்னர்களுக்கும் களப்பிரர்களுக்கும் தொடர்பு ஏற்படலாயிற்று. களவரும் தொண்டையரும் ஒரு வகுப்பினர் என்ற கூற்று[5] ஏற்புடைத்தாயின் பல்லவ அரச பரம்பரையினர், களப்பிர குடியினரென்றோ, அவர்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்களன்றோ கொள்ளலாம். அப்படிக்கொண்டால் களப்பிரர் - பல்லவர் போராட்டம் ஒரு புதிராகிவிடும். அவர்களுக்கிடையே ஒரு நூற்றாண்டு போர்கள் நடைபெற்றதாகத் தெரிகிறது. கி.பி.நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்பெண்ணைக்கும் பாலாற்றிற்கும் இடையில் வாழ்ந்த களப்பிரரை இன்னும் தெற்கே விரட்டிச் சென்று பல்லவ அரசை நிறுவிய பெருமை பல்லவ மன்னன் சிவஸ்கந்தவர்மனைச் சார்ந்தது. ஆயினும் இத்துடன் களப்பிரர் தொல்லையிலிருந்து பல்லவர் முற்றிலும் விடுபட்டனர் என்று சொல்லுவதற்கில்லை. ஆறாம் நூற்றாண்டில் சோழர்கள் உதவிகொண்டு களப்பிரர்கள் புத்தவர்மன் என்ற பல்லவனை எதிர்த்துத் தம் ஆதிக்கத்தை நிலவச் செய்ய முயன்றனர். பின்னர் சிம்மவிஷ்ணு (கி.பி.575-600) களப்பிரரை முறியடித்துப் பெரிதும் ஒடுக்கினான் என்பது வேலூர்ப்பாளையம் செப்பேடு செப்புகின்றது. அதன் பின்னரும்

5. ந.மு.வேங்கடசாமி நாட்டார்: கள்ளர் சரித்திரம் - பக்.18.

பல்லவ களப்பிரர் போர்கள் நிகழ்ந்தன. முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற இப்போர்கள் காரணமாகவே பல்லவர்கள் ஆறாம் நூற்றாண்டின் இறுதிவரையில் தலை தூக்க முடியவில்லை.

சங்க நூல்களில் களப்பிரரைப் பற்றிய குறிப்பு ஒன்றும் காணப்படவில்லை. புல்லி என்னும் தலைவனைப் பற்றிய செய்திகள் அகம், புறம் முதலிய சங்கநூல்களில் கிடைக்கின்றன. அவனை ஒரு சிலர் களப்பிரர் தலைவன் என்பர். தமிழ்நாட்டின் வடவெல்லையின் மேற்கில் துளு, கொங்கணம் (பூழிநாடு) முதலிய நாடுகளின் தலைவனாகிய நன்னனும் (கடைச்சங்க காலவேள் நன்னனின் தந்தை), கிழக்கில் தொண்டைநாட்டுப் பல்குன்றக் கோட்டைத்தைச் சேர்ந்த திருவேங்கடத்தின் தலைவனாகிய புல்லியும் ஆட்சி செய்தனர். 'கள்வர் கோமான்' புல்லி விற்பயிற்சியிற் சிறந்த கள்வர் படையினையுடையவனாக இருந்தான். வடவேங்கடத்தைப் புல்லி குன்றம்[6] என்று வழங்குமளவிற்கு வன்மையும் வீரமும் ஒருங்கமைந்த தமிழ்க்காவலன் சோழநாட்டின் ஒரு பகுதியாகிய மழபுலத்தைத் தன்னடிப்படுத்தித் திறைகொண்டவன்.[7] புல்லி என்ற வில்லியின் படை பாண்டிய நாட்டினுள்ளும் தம் வலிகாட்ட முயன்றபோது அப்படையை வீரபாண்டியர் வெருட்டி அவர்களிடமிருந்து யானையைத் திறையாகப் பெற்றனர்.[8] இவற்றால் தமிழகத்தின் வடவெல்லையில் குறுநில மன்னனாகத் திகழ்ந்த கள்வர்கோமான் புல்லி களப்பிரர் இனத்தைச் சேர்ந்தவன் என்பது வலியுறுத்துகிறது.[9] தமிழகத்தில் களப்பிரர் வருகையால் பெரிதும் இடர்ப்பட்டு நீண்டகாலம் அரசுரிமை இழந்து அல்லலுற்றவர்கள் சோழர்களே. சோழநாட்டில் கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கிய களப்பிரர் ஆதிக்கமும் ஆட்சியும் ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்குமேல் நீடித்திருந்தது. அச்சுத விக்கந்தன் என்ற களப்பிரகுல மன்னன் தமிழ்நாட்டை ஆண்ட செய்தியை நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் காவிரிப்பூம்பட்டின விகாரமொன்றிலிருந்து 'அபிதம்மாவதாரம்' என்ற ஈனயான பௌத்த சமய நூலை எழுதிய புத்த தத்த மகாதேரர் தன் நூலினுள்ளே குறிப்பிட்டுள்ளார். முடியுடை மூவேந்தரையும் வென்று சிறைப்படுத்திய அச்சுத

---

6. அகம் - 265. 7. அகம் - 61. 8. அகம் - 27.
9. P.T.Sreenivasan Iyengar: History of the Tamils P.535.

களப்பாளனைச் சில செய்யுட்கள் பாராட்டுகின்றன.[10] இம் மன்னனைப் பற்றி யாப்பருங்கலக் காரிகையில் இரு பாடல்கள் உள்ளன. பத்தாம் நூற்றாண்டின் வாழ்ந்த அமிதசாகரர் (சமணர்) என்ற தமிழ் இலக்கண ஆசிரியரும் இவனைப் பற்றிப் பேசுகிறார். அச்சுதன் பௌத்தத்தைத் தழைக்கச் செய்த பெருமன்னன்.

சோழநாட்டை ஆண்ட மற்றொரு களப்பிர பெருமன்னன் கூற்றுவன்.[11] இவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். களப்பிரர்கள் நாளடைவில் தமிழகத்தின் பழைய சமயத்தைத் தழுவினர் என இதிலிருந்து அறிகிறோம். கொடும்பாளூரை ஆண்ட குறுநில மன்னர் இடங்கழி நாயனாரும் ஒரு களப்பிரரே.[12] தஞ்சையை ஆண்ட களப்பிரர் முதலில் பல்லவப் பேரரசிற்கும், பின்னர்ப் பாண்டியர்க்கும் அடங்கியிருந்தனர். சோழநாட்டைக் களப்பிரரிடமிருந்து கைப்பற்றிய பல்லவர், தமிழகத்தின் கீழ்ப்பகுதியில் ஆட்சி செய்தனர். அப்போது உரிமையிழந்த சோழர்கள் பல்லவர்கட்குத் திறை செலுத்தும் குறுநில மன்னர்களாய் இருந்தனர். தஞ்சைக்கடுத்த செந்திலை (சந்திரலேகை) என்ற ஊரின் கண்ணுள்ள கோவில் மண்டபத் தூண்களில் முத்தரையர் பரம்பரைக் குறிப்புக் காணப்படுகிறது.[13] சேர, சோழ, பாண்டிய மூவேந்தரை வென்ற காரணத்தால் முத்தரையர் (மூன்று - தரையர்) என்ற பெயர் பூண்டனர். முத்துடைய பாண்டிநாட்டிற்கு மன்னர் (முத்து + அரையர்) எனவும் முத்தரையர் பட்டத்திற்குப் பொருள்கூறுவர் ஆராய்ச்சியாளர்.

கி.பி.850ல் பல்லவர்க்கு அடங்கியிருந்த உறையூர் வீரன் விசயாலயன், புதுக்கோட்டை முத்தரையரிடமிருந்து தஞ்சையை மீட்டுச்சோழப் பேரரசிற்கு அடிகோலினான். 'நாலடியார்' என்னும் நீதிநூலின் செய்யுட்கள் முத்தரையரைப் பாராட்டி, அவர்கள் சமணத்தைச் சீராட்டி வளத்தமையைத் தெரிவிக்கின்றன.

பாண்டிய நாட்டிலும் களப்பிரர் புகுந்து ஆட்சி செய்யத் தொடங்கினார்கள். பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதிக்குப் பின்னர், பாண்டிநாட்டை 'அளவரிய அதிராசரை அகல நீக்கி அகலிடத்தைக் களப்ரனென்னும் கலியரசன் கைக்கொண்டான்'

---

10. தமிழ்நாவலர் சரிதை - 154 - 157.
11. 'கோதை நெடுவேல் களப்பாளன் ஆகிய கூற்றுவனே' நம்பியாண்டார் நம்பி.
12. K.A.N.Sastri : Cholas Vot I, P 150 Foot Note.
13. செந்தமிழ் - தொகுதி 6 - பக்.217.

என வேள்விக்குடிப் பட்டயம் பகர்கின்றது. கி.பி.நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழநாட்டை ஆண்ட அச்சுதவிக்கந்தன் பாண்டிய நாட்டையும் அரசுபுரிந்தான். பாண்டியக் கருநட வேந்தர் சமண சமயம் தழுவியவராதலால் தமிழகத்தின் தென்பகுதியில் பௌத்தம் வலிகுன்றிச் சமணம் ஒளிமிக்கு விளங்கிற்று. அக்காலத்தில் மதுரைமாநகரில் பூஜ்ய பாதருடைய மாணவரான வச்சிர நந்தி என்ற சமண முனிவர் கி.பி.470-ஆம் ஆண்டில் 'திராவிட சங்கம்' ஒன்று நிறுவினார். இச்செய்தி 'திகம்பர தரிசனம்' என்னும் சமண நூலால் அறியப்படுகிறது. அத்திராவிட சங்கம், சமணர் அமைத்த தமிழ்ச் சங்கமேயாகும். அச்சங்ககாலத்தில் பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி, நாலடியார் போன்ற சமண சமயத் தொடர்பான நீதிநூல்கள் இயற்றப்பட்டிருக்கலாம்.

தமிழகத்தில் அரசியல் கொந்தளிப்பு:

கி.பி.மூன்றாம் நூற்றாண்டு தமிழகத்திற்குப் பெருந்துன்பத்தையும் பேரிழப்பையும் விளைத்த ஒரு கொடிய நூற்றாண்டு என்று கூறின் தவறாகாது. என்றுமே கண்டறியாதப் பெருந்துன்பத்தைத் தமிழகம் முதன்முதல் இந்நூற்றாண்டில் அடைந்தது. தமிழகம் முதன்முதல் பிறமொழியாளரின் பிடியில் சிக்குண்டு சிதையத் தொடங்கிய காலம் இதுவேயாகும். இந்நூற்றாண்டில் தமிழ்நாடு அயலாரது புதிய அரசியல் முறைக்கு அடிமையானதோடு தனக்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்த கலை, நாகரிகம், பண்பாடு, சமயம், வாழ்க்கைநெறி முதலிய பண்புகளையும் இழந்துவிடும்படி நேர்ந்தமை குறிப்பிடத்தக்கதாம். கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தின் தென்பகுதி, பாண்டியர் ஆட்சியை இழந்து களப்பிரர் ஆட்சிக்குட்பட்டதை முன்னர்க்கண்டோம். அவ்வாறே, தமிழகத்தின் வடபகுதியாகிய தொண்டைநாடும், நடுநாடும் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் செம்பாதியில் களப்பிரர் ஆதிக்கத்திற்குட்பட்டது. பாண்டிநாட்டிற்கும் நடுநாட்டிற்கும் இடைப்பட்ட சோழநாடு களப்பிரர் பிடியினின்று தப்ப முடியாமல் தத்தளித்தது. இவ்வாறு இந்நூற்றாண்டில் தமிழகம் முழுவதும் வேற்றரசர் இருவர் ஆட்சிக்குள்ளாகி அல்லலுற்றது.

பல்லவர் தமிழர் அல்லர்:

இந்நிலையில் பல்லவர்கள் தமிழர் அல்லர் என்பதனை நினைவிலிறுத்த வேண்டும். இந்திய வரலாற்றின் பல புதிர்களில் 'பல்லவர் யார்?' என்பது ஒரு பெரும் புதிராக இருந்து வருகிறது என்பர். "பிராக்ருத மொழியில் வெளியிடப்பட்ட பல்லவர் பட்டயங்களோ, வடமொழியில் எழுதப்பெற்ற பல்லவர் பட்டயங்களோ, பிற கல்வெட்டுக்களோ, 'பல்லவர் - பஹ்லவர் மரபினர்' என்றோ, வேற்றுநாட்டவர் என்றோ, 'திரையர் மரபினர்' என்றோ, 'மணிபல்லவத் தீவினர்' என்றோ குறிக்கவில்லை. சங்ககாலத்தில் தொண்டைமண்டலத்தை ஆண்ட இளங்கிள்ளி, இளந்திரையன் என்பார்க்கும் 'சிவஸ்கந்தவர்மன்', 'புத்தவர்மன்' 'வீரகூர்ச்ச வர்மன்' என்பார்க்கும் தொடர்பு ஏதும் இருந்திருத்தல் இயலாது என்பதைச் சிறிதளவு அறிவுடையாரும் தெளிவுறத் தெளிதல் கூடும் அன்றோ? மேலும் பல்லவர் பட்டயங்கள் அனைத்தும் பிராக்ருத மொழியிலும், பெரும்பாலானவை வடமொழியிலும் இருக்கின்றன. பல்லவர் சோழர் மரபினர் ஆயின் - இளந்திரையன் வழிவந்தவர் ஆயின் தமிழில் எழுதாது, தமிழ் மக்கட்கே புரியாத வடநாட்டு மொழிகளில் எழுதத் துணிந்திருப்பரோ? கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் பிற்பட்ட சோழரோ, பாண்டியரோ வளர்க்காத முறையில் தமிழைப் புறக்கணித்து, வடமொழியைத் தமது ஆட்சியில் வளர்த்திருப்பரோ? பல்லவர்காலத்தில் வடமொழி தொண்டைமண்டலத்தில் பேரரசு செலுத்தியது என்பது மிகையாகாது.

பாரவி, தண்டி முதலிய வடமொழிப் புலவர் பல்லவர் ஆட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது தெரிகிறதேயன்றி, எந்தத் தமிழ்ப்புலவரும் கி.பி.எட்டாம் நூற்றாண்டு வரை பல்லவர் ஆதரவு பெற்றதாகத் தெரியவில்லை. மேலும் பல்லவர் தம்மைப் **'பாரத்துவாச கோத்திரத்தார்'** என்று பட்டயங்களிலும் கல்வெட்டுக்களிலும் கூறிக்கொள்ளுகின்றனர். தமிழ் அரசர்கள் 'இருடிகள் கோத்திரம்' அறியாதவர்கள்; குடிவழி அறிந்தவர்கள்; தமிழர்க்கு இருடிகள் கோத்திரம் ஏது? இன்ன பிற காரணங்களால், பல்லவர் தமிழரின் வேறுபட்டவர் என்பதைத் தெளிவுறக் காணலாம்" என்பர் பேராசிரியர் டாக்டர் மா.இராசமாணிக்கனார்.[14] எனவே கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் தமிழ்நாடு முழுவதும்

14. பல்லவர் வரலாறு - பக்.28-29.

வேற்றரசர் ஆட்சிக்குட்பட்டமை தெளிவாகிறது. அவ்விருவரும் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர் அல்லர். களப்பிரர் ஆட்சிக்காலத்தில் பிராகிருதமே அரசாங்க மொழியாக அமைந்திருந்தது. மேலும் பாலிமொழி அவர்களுடைய பேராதவிற்குரியதாயிருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது. 'ஆகவே, கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட ஏதிலார் ஆட்சி, தமிழ்மக்களின் வீழ்ச்சிக்கு எத்துணையோ வகைகளில் அடிகோலியது எனலாம். எனவே, கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் கி.பி.ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையில் நடைபெற்ற அயலார் ஆட்சியில் தமிழ்மொழி போற்றுவாராற்றுத் தன் வளர்ச்சியும் பெருமையும் இழந்து தாழ்ந்த நிலையை எய்தியிருந்தமை உணரற்பாலதாகும்.'

தமிழகத்தில் பிறமொழி ஆட்சி:

தமிழ்நாட்டில் பல்லவர்கள் காலத்தில் புத்தசமயமும் சமண சமயமும் பரவியிருந்தன. இவற்றுள் புத்தசமயம் சமணசமயத்திற்கு முன்பே தென்னாட்டில் பரவியிருந்ததாகத் தெரிகிறது. பல்லவ மன்னர்களின் செப்பேடுகள் முதலில் பிராகிருத மொழியிலும், இடைக்காலப் பகுதியில் வடமொழியிலும் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகளிலும் வரையப் பெற்றுள்ளன. இதனால் மகேந்திரவர்மன் போன்ற மாமன்னர்கள் தோன்றும்வரை, பல்லவ அரசர்கள் பிராகிருதத்தையே தம் அரசாங்க மொழியாகக் கொண்டு, வடமொழியைப் பெரிதும் ஆதரித்து, அம்மொழி வளர்ச்சியில் தம் கருத்தைச் செலுத்தினர் என்பது புலனாகிறது. அவர்கள் தம் தலைநகராகிய காஞ்சிமாநகரில் வடமொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களையும், சாத்திரங்களையும் வேதங்களையும், கலைகளையும் கலைஞானங்களையும், பல்வகைப்பட்ட சமய நூல்களையும் வடநாட்டவர்களும் விரும்பிவந்து கற்குமாறு ஒரு பெருங் கல்லூரி நிறுவி அதனை நன்கு ஆதரித்துப் போற்றியமை அறியத்தக்கது. நாடாளும் வேந்தர்களின் ஆதரவில் நடைபெற்று வந்த அவ்வடமொழிக் கல்லூரி, அந்நாட்களில் ஒரு மாபெரும் பல்கலைக்கழகம் போன்று விளங்கியமை குறிப்பிடத்தக்கது. அக்கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் உண்டியும் உறையுளும் இலவசமாகப் பெற்றனர். அதனால் எத்தகைய கவலையுமின்றி வடமொழியில் தாம் விரும்பிய கலைநூல்களை ஆர்வமுடன்

கற்றனர். அக்கல்லூரியின் பெருமை வடநாடு முழுவதும் பரவியிருந்தது.

மயூரசர்மன் (கி.பி.345-370) என்னும் கதம்பர்குல இளவரசன் காஞ்சியிலிருந்த வடமொழிக் கல்லூரியில் படிக்கும்பொருட்டுத் தன் ஆசிரியராகிய வீரசர்மரொடு வந்தானென்று தெரிகிறது. ஆசியாவின் மாபெரும் பல்கலைக்கழகமாக அக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய நாலந்தாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும், தலைமைப் பேராசிரியராகவும் விளங்கிய தர்மபாலர் என்பவர் காஞ்சியிலிருந்து சென்ற திக்நாகருடைய மாணவராவார். தர்மபாலர் காஞ்சியிலிருந்த வடமொழிக் கல்லூரியில் முதலில் கல்வி கற்று, பிறகு நாலாந்தாப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று, சில ஆண்டுகள் வரையில் அங்குப் படித்து, பின்னர் அப்பல்கலைக்கழகத்தின் தலைவராயினார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.[15] நந்திவர்மப் பல்லவமல்லனது திருவல்லத்துக் கல்வெட்டினால், தொண்டைநாட்டில் சோழசிங்கபுரத்திற்கு (சோளங்கிபுரம்) அருகிலுள்ள கடிகாசலம், புதுச்சேரியைச் சேர்ந்த வாகூர் ஆகிய ஊர்களில் வடமொழிக் கல்லூரிகள் இருந்தன என்பது தெரியவருகிறது. நிருபதுங்கவர்மனுடைய பாகூர் செப்பேடுகளும் இக் கல்லூரிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அக்கல்லூரிகள் இந்நாட்டில் வடமொழி விரைவில் வளர்ச்சியுற்று சிறந்தநிலை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு பல்லவ மன்னர்களால் அமைக்கப்பட்டன என்பது புலனாகின்றது. வாகூர்க் கல்லூரியில் வடமொழியிலுள்ள பதினான்கு வித்தைகள் கற்பிக்கப்பட்டு வந்தன என்பதும், அக்கல்லூரியின் ஆண்டுச் செலவிற்கே அந்நாட்டில் மூன்றூர்கள் இறையிலியாக (வரியின்றி) வழங்கப்பட்டுள்ளன என்பதும் பாகூர்ச் செப்பேடுகளால் அறியப்படுகிறது. "பல நூற்றாண்டுகள் தமிழ்ச்சங்கம் நிலைபெற்றிருந்ததும் பாண்டிய வேந்தர்களின் தலைநகராக விளங்கியதுமாகிய மதுரையம்பதியைச் சிறிதும் அறிந்துகொள்ளாத வடநாட்டு மக்கள், காஞ்சிமாநகரை மாத்திரம் நன்கு அறிந்துள்ளமைக்கும் அதனைப் பரதகண்டத்திலுள்ள ஏழு புண்ணிய நகரங்களுள் ஒன்றாக ஏற்றுக்கொண்டு பாராட்டியுள்ளமைக்குக் காரணம், அந்நகரில் பல்லவ அரசர்கள் அமைத்திருந்த வடமொழிக் கல்லூரியின் பெருமையும் சிறப்பும்

15. *Dr.Minakshi: Administration and Social life under the Pallavas P.225.*

அக்காலத்தில் வடபுலம் முழுவதும் பரவியிருந்தமையேயாகும்" என்று தென்னாட்டு வரலாற்றுப் பேரறிஞர் திரு தி.வை.சதாசிவ பண்டாரத்தார்[16] மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாம்.

கி.பி.ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சைவசமய குரவராகிய திருநாவுக்கரசர், சைவர், வைணவர், வைதிகர், சமணர், பௌத்தர் ஆகிய பல்வகைச் சமயத்தினரும் காஞ்சியிலிருந்த வடமொழிக் கல்லூரியில் தத்தம் சமய நூல்களையும், அளவை (தருக்க) நூல்களையும், பிற வடமொழி நூல்களையும் நன்கு பயின்று சமயவாதம் புரிவதில் பேராற்றல் உடையவர்களாய் விளங்கியதைக் கண்டு 'கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்' எனப் போற்றுவாராயினர்.

வடமொழிப் பட்டயங்களை வழங்கிய பல்லவ மன்னர் வழியில் வந்த இரண்டாம் சிம்மவர்மன் என்னும் பல்லவ அரசன் காஞ்சியிலிருந்து அரசாண்டபொழுது, அவனது ஆட்சியின் இருபத்திரண்டாம் ஆண்டில் (கி.பி.458ல்) திருப்பாதிரிப்புலியூர் என்று சைவரால் போற்றப்படும் பாடலிபுரத்திலிருந்த ஓர் அமண்பள்ளியில் 'லோக விபாகம்' என்ற திகம்பர சமண சமயத்திற்குரிய நூல்படி எடுக்கப்பெற்றது என்னும் செய்தி அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[17]

திருப்பாதிரிப்புலியூர் சமணர் பள்ளியில் பிராகிருதத்திலும் வடமொழியிலும் பெரும் புலமையுடைய சிம்மசூரிரிஷி, சர்வநந்தி என்ற இரண்டு அறிஞர்கள் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்தனர். அவர்கள் அவ்விரு மொழிகளையும் பலருக்குக் கற்பித்து வந்தனர் என்பர். பாரவி என்னும் வடமொழிப் புலவர் கி.பி.ஆறாம் நூற்றாண்டில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சிம்ம விஷ்ணு என்ற பல்லவ அரசனுடைய அவைக்களப் புலவராக விளங்கினார். அவர் காஞ்சியிலிருந்தபொழுது கிராதார்ச்சுனீயம் போன்ற பல சிறந்த வடமொழி நூல்களை இயற்றித் தன் புகழை நாடெங்கும் பரப்பினார். மேற்கண்ட செய்திகள் யாவும் கி.பி.ஏழாம் நூற்றாண்டுவரைப் பல்லவமன்னர்கள் வடமொழிப் பயிற்சி எங்கும் பரவும்படி செய்து வந்தமையோடு அம்மொழியில் வல்ல புலவர்களைப் போற்றியும் ஆதரித்தும்

16. தமிழ் இலக்கிய வரலாறு - I. பக்.18.
17. Dr.Minakshi - Administration and Social Life under the Pallavas - P.227 - 230.

வந்தனர் என்பதை வலியுறுத்துகின்றன. ஆனால் அதே சமயத்தில் அவ்வரசர்கள் பொதுமக்களின் தாய்மொழியாகிய தமிழ்மொழியின் வளர்ச்சியில் சிறிதும் கருத்தைச் செலுத்தவில்லை என்பது விளக்கமுறுகிறது.

தமிழகத்தின் இருண்டகால வரலாற்றில், பாண்டிநாடும் தன் பழம்பெருமை குன்றி மாற்றாரின் ஆட்சியில் சிக்குண்டு சீர்குலைந்திருந்தது. களப்பிரர்கள் சோழநாட்டைக் கைப்பற்றியபொழுது அவர்கள் பௌத்த சமயத்தை மேற்கொண்டிருந்தனர். அச்சமயத்தைத் தமிழகத்தின் தென்பகுதியில் பரப்புவதற்கு அரும்பாடுபட்டனர். களப்பிரரது ஆதரவில் பௌத்த சமயம் தழைத்துவளரத் தொடங்கியது. பல பௌத்த சமய நூல்கள் தமிழ்நாட்டில் தோன்றலாயின. அந்நூல்கள் தமிழ் மக்களால் பேசவும் எழுதவும்படும் தமிழ்மொழியில் எழுதப்படவில்லை. அதற்கு மாறாகத் தமிழ்நாட்டில் பாலிமொழியில் எழுதப்பட்டன. கி.பி.நான்காம் நூற்றாண்டில் புத்த தத்த மகாதேரர் என்ற ஒரு தமிழன் இருந்தான். அவன் உறையூரில் பிறந்து வளர்ந்தவனாவான். அவன் இருமுறை ஈழநாட்டிற்குச் சென்று பௌத்த சமய நூல்களை நன்கு பயின்று சோழநாட்டிற்குத் திரும்பினான். அவன் காவிரிப்பூம்பட்டினத்தில் தங்கியிருந்த பொழுது அபிதம்மாவதாரம், விநயவிநிச்சயம் என்ற இரு நூல்களையும் பாலிமொழியில் எழுதியுள்ளான். அவற்றுள் அபிதம்மாவதாரம் என்ற நூலை காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள பௌத்தப்பள்ளியில் தங்கியிருந்தபொழுது இயற்றியதாகவும், பூதமங்கலம் என்ற ஊரில் பள்ளியில் தங்கியபொழுது விநயவிநிச்சயம் இயற்றப்பட்டதாகவும், அவை 'களப்பிர குல வேந்தனாகிய அச்சுத விக்கந்தன் என்பவன் தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தபொழுது தொடங்கி எழுதி முடிக்கப்பெற்றது' என்றும் அந்நூலின் இறுதியில் குறிப்பிட்டுள்ளான்.

அக்காலத்தில் தமிழகத்தில் பௌத்த சமயப் பெரியார்கள் பதின்மர் பாலிமொழியில் பல நூல்கள் இயற்றியுள்ளனர் என்றும், காஞ்சிமாநகர் ஒன்றில் மட்டும் வேறு பௌத்த ஆசிரியர் இருபதின்மர் பல்வகையான நூல்கள் எழுதியுள்ளனர் என்றும் 'கந்தவம்சம்' என்ற பௌத்த சமய நூலினால் தெரிய வருகிறது.

மேலும் பாலிமொழிக்கு முதன்முதலில் இலக்கணம் வகுத்த 'காச்சாயனரும் தமிழ் நாட்டவரே என்பது அறியத்தக்கது,[18] இவற்றை எல்லாம் கூர்ந்து நோக்குங்கால், கடைச்சங்க காலத்திற்குப் பிறகு கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் இடைக்கால முதல் ஏதிலார் ஆகிய களப்பிரரும் பல்லவரும் நம் தமிழ்நாட்டைக் கைப்பற்றி அரசாண்ட காலத்தில் பாலி, பிராகிருதம், வடமொழி ஆகிய பிறமொழிகளும், பௌத்தம், சமணம் ஆகிய புறச் சமயங்களும் எத்துணை உயர்வெய்திப் பெருமையுற்றன என்பது நன்கு விளங்கும். ஆகவே, அயலாரது ஆட்சிக்காலம் முழுவதும் தமிழ்மொழிக்கு ஆதரவும் வளர்ச்சியும் இல்லாமற் போயின எனலாம்! தமிழகத்தில் அன்று தொடங்கிய பிறமொழி ஆதிக்கம் இவ்விருபதாம் நூற்றாண்டின் செம்பாதிவரை அசைக்கமுடியாத நிலையிலிருந்து வந்ததை நினைக்குந்தோறும் நெஞ்சம் குமுறுகிறது.

இருளில் ஒளி:

குமரிமுதல் வேங்கடம்வரை பிறமொழி ஆதிக்கமாகிய இருள் பரவியிருந்த காலத்தில், அக்காரிருளைக் கிழித்துக்கொண்டு ஓரோவழி ஒளிச்சுடர் சில அங்குமிங்கும் தோன்றிக் காண்பார் கண்ணையும் கருத்தையும் கவர்ந்ததுண்டு. அரசாங்கத்தின் ஆதரவே இல்லாத அக்காலத்தில் 'செந்தமிழ்ப் புலமையிற் சிறந்த சிவனடியார் சிலர்' தோன்றியுள்ளனர். சில நீதி நூல்களும் அக்காலத் தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன.

தமிழில் தனி நீதிநூல்கள் தோன்றியமைக்குரிய காரணத்தை ஆராயப்புகுந்த அறிஞர் ஒருவர் 'தமிழ்மக்கள் தம் நாட்டில் வந்து தங்கும் அயல் நாட்டாரோடு அன்புடன் கலந்து பழகும் இயல்பினர் என்பது யாவரும் அறிந்ததொன்று. கடைச்சங்ககாலத்தில் யவனர், வடவாரியர், கடார நாட்டினர், அருமணதேயத்தார், சோனகர் முதலானோர் தமிழகத்திற்கு அடிக்கடி வந்து தங்கியிருந்த செய்தி, சங்கத்துச் சான்றோர் பாடல்களாலும் உரையாசிரியர்களின் குறிப்புக்களாலும் அயல்நாட்டாருடைய யாத்திரைக் குறிப்புக்களாலும் நன்கறியக் கிடக்கின்றது. அந்நாட்களில் அவ் வயலவரோடு நெருங்கிப் பழகிவந்த தமிழ் மக்களுள் சிலர் தம் நாகரிக நிலையினின்று மாறி ஒழுக்கங்களில் தவறுவர் ஆயினர்; எனவே, அவ்வயலாருடைய தீய இயல்புகளையும் தீயொழுக்கங்களையும் அன்னோர் மேற்கொள்ளத் தொடங்கியமை

18. *Dr.S.K.Aiyangar Commemoration Volume P.245.*

தெள்ளிது. அத்தகையோரைத் திருத்தி நல்வழிப்படுத்துவதும், தமிழருடைய தொன்றுதொட்டுவந்த அறவொழுக்கமும் நாகரிகமும் சிதைந்தொழியாதவாறு காப்பாற்றுவதும், அக்காலத்தில் தூய வாழ்க்கை நடத்தி வந்த தொல்லாணை நல்லாசிரியன்மாரின் மாபெருங்கடமையாகி விட்டமை அறியற்பாலதாம். கடைச்சங்க காலத்தில் நிலவிய பேரறிஞராகிய ஆசிரியர் திருவள்ளுவர் அக்கடமையை நிறைவேற்றும் பொருட்டுத் திருக்குறள் என்ற சிறந்த நீதிநூலொன்று இயற்றி, அதன் மூலமாகத் தமிழ் மக்கட்குப் பல அரிய உண்மைகளை அறிவுறுத்தி, அன்னோர் தம் அறவொழுக்கங்களிலும் நாகரிக நிலையிலும் தவறாதவாறு அரண் செய்வாராயினர்.

கடைச் சங்ககாலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் ஏற்பட்ட அன்னியர் ஆட்சியில் பௌத்தரும் சமணரும் அரசாங்க ஆதரவு பெற்றுப் பெருஞ்செல்வாக்கு எய்தியிருந்ததைக் கண்டோம். அந்நாட்களில் தமிழ்மக்களுட் சிலர் பௌத்த சமண சமயங்களில் பெரிதும் ஈடுபட்டு அவற்றைச் சார்ந்தொழுகத் தலைப்பட்டனர். அதனால் தம் ஒழுக்க வழக்கங்களையும் கைவிடத் தொடங்கினர். அந்நிகழ்ச்சிகளை நன்குணர்ந்த சைவ வைணவப் புலவருட்சிலர், தமிழர்களுடைய வழக்கவொழுக்கங்களும் நாகரிகமும் இழுக்குறா வண்ணம் சிறு நீதிநூல்கள் இயற்றி மக்களிடையே பரப்புவாராயினர்" என்னும் முடிவிற்கு வந்துள்ளார்.

இதனால் அறத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்த பண்டைத் தமிழனின் அரசியல் வீழ்ச்சி, அவனுடைய வாழ்வு, மொழி, நாகரிகம், கலை ஆகியவற்றின் வீழ்ச்சியாக விளங்குவதைக் காண்கிறோம். தமிழன் கண்ட அறவாழ்வு அன்னியரின் பண்பாட்டுத் தாக்குதலால் தளர்ச்சியுற்றதோடு அமையாமல், எதிர்த்துநின்று இறுதிவரைப் போராட இயலாது வீழ்ச்சியுற்றதெனவே தோன்றுகிறது. அறப்போராட்டத்தில் வீழ்ச்சியுற்ற தமிழனின் உள்ளப் புண்ணும் உடற்புண்ணும் ஆறி, உரம்பெற்று மீண்டும் எழுந்தான். அதன் விளைவாக நாட்டில் ஒரு மாபெரும் புரட்சி உண்டாயிற்று. அப்புரட்சி தமிழ்மக்களின் சமுதாய வாழ்வையும், அரசியல் வாழ்வையும் பெரிதும் மாற்றி அமைத்தது. ஆனால் அப்புரட்சி தமிழன் கண்ட 'அறத்தின் வீழ்ச்சியை'த் தனக்குச் சிறந்ததொரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டதோடு அமையாது, மீண்டும் 'அறத்தின் எழுச்சியை'த் தமிழர் வாழ்வில் 'சமயத்தின் மலர்ச்சியாக' மாற்றியதைக் காண்போம்.

2. அன்பின் ஒளி

சமய மலர்ச்சி:

சங்ககாலத்தின் இறுதிப்பகுதியில் சமணமும் பௌத்தமும் தமிழகத்தில் நுழைந்தன. அவை ஒரோவழி தமிழ்மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. ஆயினும் அன்றைய அரசு சமயச்சார்பற்றதாகவே இருந்து வந்தமை நினைவு கூறத்தக்கது. பல்வகைக் கோட்பாடுகளைக் கொண்டிருந்த அக்கால மக்கள், 'ஒன்று பரம்பொருள், நாமதன் மக்கள்' என்ற உயர்ந்த நோக்கத்தோடு, கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடுக்கும் பெருந்தன்மை வாய்ந்தவர்களாக வாழ்ந்தனர். கடவுள் நெறியால் வேறுபட்டவர்களாயினும், பேசும் மொழியால் எல்லோரும் ஓரினம் என்று கருதினர். அன்றைய தமிழ்மக்கள் இவ்வாறு வாழ்ந்ததனால்தான் சிந்தைக்கினிய சிலப்பதிகாரத்தைக் காணமுடிந்தது; மாண்புமிக்க மணிமேகலையைப் பெற முடிந்தது; தெய்வத்திருக்குறளை அடைய முடிந்தது.

களப்பிரர் ஆட்சியால் உண்டான குழப்பத்தினால் அரசியலில் சமயவெறி (சமண சமயம்) தலை தூக்கியதனால் - தமிழ் மக்களிடையே ஓர் விழிப்புணர்ச்சி உண்டாயிற்று. அதன் பயனாக அவர்கள் குமுறும் எரிமலைகளாயினர். நாளடைவில் தமிழகத்தில் ஏதிலார் சமயத்தை எதிர்த்துப் 'புரட்சி' ஏற்பட்டது. இப்புரட்சி இட்ட வித்துத்தான் அரசியலில் சமயத்திற்குச் சிறப்பிடத்தைத் தேடிக் கொடுத்தது.

சமயம் ஒன்றே. முறைகள் பல. முறைகளில் சிற்சில வேளைகளில் மாசுபடிவதுண்டு. அம்மாசைப் போக்கப் பெரியோர்கள் தோன்றுவது வழக்கம். நமது நாட்டிலும், சமயம் என்னும் உண்மை நெறிக்குரிய முறைகளில் திரிபுநேரும் போதெல்லாம், பெரியோர்கள் தோன்றித் திரிபைப் போக்கி முறைகளைச் செம்மை செய்துள்ளனர்.

கி.பி.மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழகத்தில் வடக்கே இருந்துவந்த சமண பௌத்த சமயங்களுள் போலிக் கொள்கைகளும்,

சடங்குகளும் பெருகின. மொழிவெறியும், அரசியலைக் கைப்பற்றவேண்டும் என்ற ஆதிக்கக் கோட்பாடும் மக்களையும், மன்னர்களையும் சமயவெறி பிடித்த 'இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கர்'களாக்கிவிட்டது. அறத்தையே அடிப்படையாகக் கொண்டு தோன்றிய பௌத்த சமயமும், அருளுணர்வையும், ஒழுக்கத்தையும் தம் இரு கண்களெனப் போற்றிய சமண சமயமும் தமிழ் மண்ணில் வேரூன்றத் தொடங்கிய காலத்தில் அவற்றின் உயிராற்றல் குறைந்து, உண்மைமொழியினின்று மாறுபட்டு, அன்பை மறந்து, அறத்தைப் புறக்கணித்து, ஒழுக்கத்தைக் கைவிட்டுத் தன்னலக்காரர்களின் தலைமுறைகள் பல இன்பமாகப் பிழைப்பதற்குரிய வழிகளையே உண்மைநெறியெனப் போற்றும் அவலநிலையை அடைந்தன.

மேலும் அவை பன்னெடுங்காலமாகத் தமிழ்மக்களின் உள்ளத்தே வேரூன்றியிருந்த கடவுள் நெறிக்கோட்பாடுகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் மாறுபட்ட கருத்துக்களைத் தமிழகத்தில் பரப்பத் தொடங்கின. 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக' வாழ்ந்த தமிழ்மக்களிடையே, 'பெண்பிறவி பாவத்தின் நிலைக்களன்; பெண்களுக்கு வீடுபேறு கிடையாது' என்று சமண சமயத்தார் செய்த பிரசாரம் தமிழ்மக்களின் உள்ளத்தையும், உணர்வையும் புண்படுத்தின. சங்ககாலந்தொட்டு நமது தமிழ்மொழி ஏழிசைச் சூழலில் தவழ்ந்து விளையாடும் 'முத்தமிழ்'க் குழவியாய் வளர்ந்து வருவதை அறியாத சமணர்களும் பௌத்தர்களும், "பாட்டு காமத்தை விளைவிக்கும்; பாட்டும் கூத்தும் காமத்திற்குத் தீபனம்" என்று இழித்தும், பழித்தும், புறக்கணித்தும் வந்தனர். பண்டைத்தமிழர் 'சமணம்' என்பது தனிமனிதன் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகும் மெய்யுணர்வு நெறியாகக் கருதினர். அவரவர் தத்தமக்குச் சிறந்தது என்று தோன்றிய - தாங்கள் வாழும் நிலத்தின் இயற்கை அமைப்பினையொட்டி புறச்சூழலுக்கு ஏற்ப அமைந்த - கடவுள் நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவதே கடமையென்று போற்றி வாழ்ந்த தமிழ்மக்களுக்கு, வேலையும் வாளையும் காட்டி அச்சுறுத்தி, நாட்டுமக்களிடையே சமயத்தைப் பரப்பும் கொடிய செயல் அச்சத்தையும் அதிர்ச்சியையும் உண்டாக்கிற்று. இவை எல்லாவற்றையும் விட நாட்டுமக்களின் நலன் கருதாதவர்களும், தமிழகத்தில் மூவேந்தரின் ஆட்சியை ஒழித்தவர்களுமான பிறமொழியாளர்கள், தமிழகத்திற்குப் புறத்தே இருந்துவந்த

புறச்சமயங்களைப் போற்றி நாடாள்வதை வெளிப்படையாகவே தமிழ்மக்கள் வெறுக்கத் தொடங்கினர். வெறுப்புக்கொண்ட மக்கள் தமிழகத்தில் தொன்றுதொட்டு நிலவிவரும் கடவுட்கொள்கையின் அடிப்படையில் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ்நாகரிகத்தையும் அழிந்தொழியாது காப்பதற்கும், வேற்றரசை மாய்த்துத் தமிழரசைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்துவதற்கும் முயன்றனர். அம்முயற்சியின் பயனாகத் தமிழகத்தில் தமிழருடைய சமயங்களான சைவமும் வைணவமும் மலர்ச்சியுற்றன.

அறிவும் பண்பாடும் வளர்ச்சியுற்ற அக்காலத்திய மக்களின் மனநிலைக்கேற்ப, கடவுட் கொள்கைக்குப் புதுமெருகுகொடுத்து 'சமயம்' எனும் பெயரால் புதுமையைப் புகுத்த முயன்ற - முன்வந்த அறிஞர்களை - அருளாளர்களை - பழமையிலே ஊறித் திளைத்திருந்த தன்னலமிக்க பழமைப்பற்றாளர்கள் எதிர்க்கலாயினர். அதனால் நாடு முழுவதும் சமயக்கிளர்ச்சி உண்டாயிற்று.

பிறப்பால் உயர்வும் தாழ்வும் கருதாதவன் தமிழன். அவனிடையே பிறப்பினால் உயர்வும் தாழ்வும் கற்பிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட சாதிமுறை புகுத்தப்பட்டதோடு, ஒன்றுபட்ட தமிழினத்தைப் பலவகைச் சாதிகளாய்ப் பிரித்து, அவர்களுக்கிடையே பகையை வளர்த்து வந்தனர் பிறமொழியாளர்கள். 'தீண்டாமை' எனும் சூறாவளி தமிழகத்தில் வீசத் தொடங்கித் தன் அழிவு வேலையில் முனைந்து நின்றது. கணவன் மனைவியரிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டது. ஆணுக்குப் பெண் அடிமை என்பதை வலியுறுத்தவே 'பெண்ணிற்கு வீடு பேறில்லை' என்று சமணர்கள் பறைசாற்றினர். இக்காரணத்தினால்தான் சோழர் தம் குலக்கொடியாகிய மங்கையர்க்கரசி தன் கணவனான நின்றசீர் நெடுமாறன் (கூண்பாண்டியன்) சமணசமயத்தைத் தழுவியபொழுதும், தான் பண்டைத் தமிழரின் கடவுள் நெறியாகிய சிவ வழிபாட்டையே மேற்கொண்டு ஒழுகியதோடு, நாட்டில் பழந்தமிழரின் கடவுட்கொள்கை சிறப்புற்று விளங்குவதற்கு ஆவன செய்யவேண்டும் என்ற பேரவாவுடன் பன்னெடுங்காலம் தக்கதொரு சமயத்தை எதிர்பார்த்து வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில்தான் புறச்சமயத்தை எதிர்த்தும், அச்சமயத்தைப் பின்பற்றும் மன்னர்களின் ஆட்சியை எதிர்த்தும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் புரட்சி செய்யத் தொடங்கினர். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சமயத்தில் முளைத்த பூண்டுகளைக் களைந்தெறியவும்,

அயலாரது கொள்கைகள் நாட்டில் செல்வாக்குப் பெறுவதைத் தடுக்கவும் 'தமிழ் மன்னர்கள்தான் தமிழ் நாட்டை ஆளவேண்டும்' என்பதை வலியுறுத்தவும் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் சமயத்தின் போர்வையில் சமயப் புரட்சியை - சமுதாய புரட்சியை - அரசியல் புரட்சியைத் தொண்டைநாட்டில் தொடங்கிப் பாண்டியநாட்டில் வெற்றிக்கொடியை நாட்டினர்.

சமயப்புரட்சி அரசியல் புரட்சியாக மாறி வெற்றி பெற்றதன் பயனாகப் பல்லவ வேந்தன் தன்னைத் தமிழ்மக்களின் அரசன் என்பதை உணர்ந்தான்; தமிழ்மக்கள் போற்றும் மொழியாகிய தமிழினை வடமொழியோடு ஒப்பவைத்து ஆதரிக்கும் மனப்பண்பைப் பெற்றான். தமிழின்பத்தைத் துய்த்தான். தன் உயிரையும் தமிழின்பத்தை நுகர்வதற்குப் பரிசாகக்கொடுத்து மாண்டான் ஒரு பல்லவ மன்னன் என்பதைத் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் வரலாற்றால் அறிகிறோம். பாண்டிய நாட்டிலே 'தென்னாட்டுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!' என்று அடியார்களின் அன்புள்ளத்தே எழுந்த வாழ்த்தொலி விந்தியத்தின் விளிம்பில், இமயத்தின் கொடுமுடியில் சென்று எதிரொலித்தது.

இவ்வாறு, தொல்பழங்காலத்தில் தமிழ் மக்களிடையே அரும்பிய கடவுட்கொள்கை, கடைச்சங்ககாலத்தில் போதாகி, கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சைவ, வைணவ சமயங்களாக மலர்ந்து மணம் வீசியது.

அன்பின் ஒளி:

களப்பிரர் கால முதல் தமிழ்நாட்டிலே உண்டான போரும் பூசலும் மக்களிடையே அச்சத்தையும், வாழ்க்கையில் நம்பிக்கையின்மையையும் வளர்த்து வந்தன. வாழ்க்கையில் அமைதியையும், இன்பத்தையும் காண இயலாது மக்கள் மனங்கலங்கி அல்லலுற்றனர். வாழ்க்கையில் எழும் சிக்கல்களைப் பற்றித் தெளிவான உணர்வின்றித் திகைத்தனர். அவர்கள் உள்ளம் ஆடிக்காற்றில் சிக்கிய கொழு கொம்பற்ற கொடிபோன்று ஆடியலைந்தது. அந்நிலையில் எதையாகிலும் தாவிப் பற்றிக்கொள்ள நினைத்தது. புறச்சமயங்களான சமணமும், பௌத்தமும் அவர்கள் உள்ளத்தெழுந்த வேட்கையினைத் தணிக்கும் வகையில் அமையவில்லை. எனவே, அச்சமயங்களைத் தழுவிய ஒரு சிலரும் மன அமைதியின்றி 'எதையோ' நாடி அலைந்தனர்.

இந்நிலையில்தான் தமிழகத்தில் சைவ வைணவ சமயங்கள் மலர்ச்சியுற்றன என்பதைக் கண்டோம். சைவ வைண சமயங்கள் 'அன்பின் வழியது உயிர் நிலை; அஃதிலார்க்கு, என்புதோல் போர்த்த உடம்பு' என்னும் பண்டைத் தமிழன் பண்பாட்டை அடியொற்றி, மக்கள் உள்ளத்தே அன்பு ஊற்றெடுக்கும் வண்ணம் தெய்வநலஞ் சிறந்த இன்தமிழ்ப் பாக்களால் இறை அன்பை (பத்தி - பக்தி) ஊட்டத் தொடங்கின. அன்பே வடிவாக, அருளே உருவாக விளங்கும் இறைவனை நினைந்து, காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி 'அழுதால்' அவன் அருளைப் பெறலாம்; அதன் பயனாக நிலையான இன்பத்தில் இனிது வாழலாம் என்னும் அரிய கருத்துக்களை அருளாளர்களாக விளங்கிய ஆழ்வார்களும், நாயன்மார்களும் மக்களிடையே நாளும் இன்னிசைப் பாக்கள் மூலம் பரப்பி வந்தனர்.

"இறைவன் அன்பு மயமாக இருக்கிறான். அவனுடைய அன்புதான் பேரண்டம் (Universe) முழுவதையும் உண்டாக்கியது. அதே அன்புதான் அவ்வண்டத்தில் உள்ள உயிர்க்கூட்டங்களை வாழவைத்துக் காப்பாற்றுகிறது. உயிர்கள் ஒவ்வொன்றையும் தன்னோடு சேர்த்துக்கொள்வதும் அதே அன்புதான்.

உயிர்களிடத்திலும் அன்பு நிறைந்து இருக்கிறது. இதயக் கிண்ணம் வழிய வழிய இறைவனால் கொடுத்து அனுப்பப்பட்டது அந்த அன்பு. அத்தகைய அன்பு, 'உண்மையைக்' காணமாட்டாமல் வீணே கொட்டப்படுகிறது. அன்பைப் பாழாக்கிவிடாமல் பேணி வளர்ப்பவர்கள் அன்பு மயமாய், தெய்வமாய் ஆகிவிடுகிறார்கள்"[1] என்று இறைவன் இயல்பினை மக்களிடையே எடுத்தியம்பி வந்தனர்.

அத்தகைய இறைவனை வழிபடுவதற்குரியநெறிகள் இரண்டாக வகுத்தனர். ஒன்று திருக்கோயில் வழிபாடு; மற்றொன்று உயிர் (ஆன்ம) வழிபாடு. மக்கள் உடலைத் திருக்கோயிலாகவும், உள்ளத்தைச் சிவலிங்கமாகவும் போற்றி வழிபடும் வழக்கம் சிறப்புற்றிருந்தது.

"மனிதனின் ஊனால் போர்த்தப்பட்ட 'உடம்பே' திருக்கோயில்; அதனுள்ளே இருக்கும் 'உள்ளமே' மூலத்தானமாகும். அருள் மயமான இறைவனது கோயிலுக்குள்ளே போவதற்குரிய கோபுரவாசல் மனிதனுடைய 'வாயா'கும்; தெளிந்த மெய்யுணர்வு பெற்ற மக்களுக்கு, உள்ளத்தே உறையும் ஆன்மாவாகிய சீவனே

சிவலிங்கம்; வஞ்சனையே வடிவமான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து புலன்களும் இறைவனருகே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் அழகுமிக்க நந்தா விளக்குகளாகும்"[1] என்பதே ஆன்றோர் கண்ட நெறி.

இந்நெறியைத் திருநாவுக்கரசர்,

"காயமே கோயிலாகக், கடிமனம் அடிமையாக,
வாய்மையே தூய்மையாக, மனமணி இலிங்கமாக,
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையஆட்டிப்
பூசனையீச னார்க்குப் போற்றவிக் காட்டினோமே!"

திரு.தேவாரம் – 76:4.

என்று இனிய தமிழ்ப்பாடலின் மூலம் விளக்கியுள்ளார்.

உள்ளத்தே உறையும் இறைவனை இவ்வாறு வழிபடுவதே சிறந்தநெறி என்பதை ஆழ்வார்களும்[2] நாயன்மார்களும் தெளிவாக மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

திருக்கோயில் வழிபாடும், ஆன்ம (உயிர்) வழிபாடும் முறையே படமாடும் கோயில், நடமாடும் கோயில் வழிபாடுகளெனப் போற்றப்பட்டன. நடமாடும் கோயில்களான உயிர்களுக்குச் செய்யும் தொண்டே, அழகிய சிற்பமும் சித்திரமும் நிறைந்து விளங்கும் கோபுரங்களையுடைய கோயிலில் உள்ள இறைவனுக்கு உகந்ததொண்டு என்னும் விழுமிய கருத்தினை மக்கள் உள்ளத்தில் பதியுமாறு திருமூலர்

"படம்ஆடும் கோயில் பகவற்(கு)ஒன் றீயின்
நடம்ஆடும் கோயில் நம்பர்க்கங்(கு) ஆகா
நடம்ஆடும் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படம்ஆடும் கோயில் பகவற்க(து) ஆமே" – திருமந்திரம் – 1821.

என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

உயிர்களை வழிபடும்பொழுது சாதி வேறுபாடு முதலியன பாராட்டலாகாது என்பதை அச்சான்றோர்கள் பலவாறாக எடுத்தியம்பியுள்ளனர்.

---

1. திருமந்திரம் - 1792.
2. 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக' எனும் பூதத்தாழ்வார் பாடலை நோக்குக.

“சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
... ...
கோதிலமுது ஆனானைக் குலாவுதில்லை கண்டேனே”;
– மாணிக்கவாசகர்.

“சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்? – திருநாவுக்கரசர்.

“அங்கம்எலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராயின்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே!” – திருநாவுக்கரசர்.

“குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிருந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாளர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்குஆளென்றுஉள்
கலந்தார், அடியார் தம்மடி யார்எம் அடிகளே!” – நம்மாழ்வார்.

இவ்வாறு சாதிவேறுபாடற்ற நல்லதொரு சமுதாயத்தைக் காண்பதற்குச் சமயக்குரவர்கள் அக்காலத்திலேயே அரும்பாடு பட்டுள்ளனர். ‘எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைவன் சிவனென்று உணர்ந்து, எவ்வுயிர்க்கும் அன்பாயிரு’ என்று மக்களுடைய உள்ளத்தை இருளடைந்த குகைகளாக்கிவிட்ட சாதிவேற்றுமை, தீண்டாமை ஆகிய காரிருளை அகற்றும் இணையற்ற விளக்காக ‘அன்பின் ஒளி’யை அகிலமெங்கும் பரவுமாறு செய்தனர். இவ்வாறு மக்களுக்குத் தொண்டு செய்வதையே தங்கள் கடமையாகக் கொண்டு ஒழுகினர். தான் செல்லும் திருக்கோவில்களில் எல்லாம் உழவாரப் படைகொண்டு புல்லைச்செதுக்கிச் செம்மைப்படுத்திச் சிறந்த தொண்டாற்றியவர் திருநாவுக்கரசர். ‘என்கடன் பணிசெய்து கிடைப்பதே’ என்னும் விழுமிய குறிக்கோளோடு மன்னுயிரைத் தன்னுயிராகப் போற்றி வாழ்ந்த அவர் தமிழகத்தின் இரண்டாவது சமுதாயத் தொண்டராவார்.

3. பல்லவர்காலத் தமிழகம்

கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் பல்லவர் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டைநாட்டை ஆளத் தொடங்கினர். பல்லவர்களின் ஆட்சி சற்றேறக்குறைய ஆறு நூற்றாண்டுகள் தமிழகத்தில் தென்வெள்ளாறு வரையிலும், தக்கணத்தில் கோதாவரி ஆற்றங்கரை வகையிலும் பரவியிருந்தது. இந்த ஆறு நூற்றாண்டுகளிலும் பல்லவப் பேரரசு பாண்டிய, சாளுக்கிய, கங்க, இராட்டிரகூட அரசுகளுடன் நெடுங்காலம் போராடி, ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வீழ்ச்சியுற்றது.

பல்லவர் ஆட்சி சீரும் சிறப்புமுற்றது கி.பி.ஏழாம் நூற்றாண்டில்தான். இந்நூற்றாண்டில் பல்லவர் ஆட்சி பலதுறைகளிலும் சிறந்து விளங்கியது. சிம்ம விஷ்ணுவின் வழிவந்த பல்லவப் பேரரசர்கள் ஆண்ட காலம் இது. தமிழ்ப் பண்பாடும் ஆரியப் பண்பாடும் இரண்டறக் கலந்த புதியதொரு நாகரிகத்தினைத் தோற்றுவித்த காலம் பல்லவப் பேரரசர்கள் காலம். கங்கையும் யமுனையும் இரண்டற்று ஒன்றிக்கலந்து ஓடுவதுபோலத் திராவிடர் நாகரிகமும் ஆரியர் நாகரிகமும் ஒன்றுபட்டு தமிழகத்தில் ஓடத் தொடங்கியது இக்காலத்தில்தான். பல்லவ வேந்தர்களின் எழுச்சிக்காலத்தில் தமிழகம் வட இந்தியாவுடன் நேரடியான நெருங்கிய தொடர்பு கொண்டது. அதன் பயனாக இருவகை நாகரிகமும் 'கலப்புற்ற ஒரு கலவை நாகரிக' வாழ்வைத் தமிழகம் பெற்றது. இந்நாகரிகக் கலப்பால் தமிழ்ப் பண்பாடு ஓரளவு மாண்புற்றது என்றாலும் தமிழ்ப்பண்பாடும், நாகரிகமும், வாழ்க்கைநெறியும், கடவுட்கொள்கையும், தமிழ்மொழியும் தம்தூய்மை கெட்டு, சிறப்பிழந்து, அடிமை நிலையை அடைந்தமை மறக்க முடியாத, மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மையாகும். அன்று தமிழிற்கும் தமிழ்ப்பண்பாட்டிற்கும் உண்டான நலிவு - வீழ்ச்சி - இன்றுவரை ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக இருந்து வருவதைத் தமிழினம் என்றும் மறக்க முடியாது.

'இப்படியன், இந்நிறத்தன் இவ்வண்ணத்தன், இவன் இறைவன்' என்று போற்றிய தமிழ் மக்களிடையே, 'ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!' என்ற எண்ணம் தோன்றிய நாளிலேயே பிறமொழியாளருக்கு அடிமைகளாகிவிட்டனர் தமிழர்கள்.

அரசு:

அரசனைத் தலைவனாகக் கொண்ட அரசியல் அமைப்பே பல்லவர் காலத்தில் சிறப்புற்றிருந்தது. ஆட்சிமுறை எளிதில் நடைபெற வேண்டி நாட்டைப் பல கிராமங்களாகவும், கோட்டங்களாகவும், மண்டலங்களாகவும் பிரித்தனர். ஆட்சித்தேர் அரசனாகிய ஒற்றைச் சக்கரத்தினால் உருண்டோட இயலாது என்பதை அறிந்த மன்னர்கள், தங்களுக்கு உறுதுணையாக அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த சான்றோர்களைக் கொண்ட அமைச்சரவையின் அறிவுரையை அவ்வப்போது கேட்டு, அதற்கேற்ப ஆட்சி நடத்தினார். நாட்டின் பெரும் பிரிவுகளான மண்டலங்களில் அரசமரபைச் சார்ந்த ஆற்றல் மிக்க ஆடவர்கள் 'மண்டலாதிபதி'களாக அமர்த்தப்பட்டனர். அவர்கள் அரசனுடைய 'பிரதிநிதிகளாக' இருந்து நாட்டினை ஆளுவதில் வல்லவர்களாக விளங்கினர். அரசனுக்கு நிலவரியின்மூலம் கிடைக்கும் வருவாயோடு, பல்வகைப் பொருள்கள்மீது விதிக்கப்பட்ட வரிகளாலும், சுங்க வரிகளாலும் பெரும்பொருள் ஆண்டுதோறும் கிடைத்தது. அக்காலத்தில் நிலங்கள் யாவும் நன்கு அளக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருந்தமை பாகூர், உருவபள்ளி பட்டயங்களால் தெரியவருகிறது.

ஊராட்சிமுறை சிறந்து விளங்கியது. ஊரில் இருந்த அறிஞர்கள் ஊராட்சிக்கு உறுதுணையாக இருந்தனர். அவர்கள் **'ஊரார்'** என்று அழைக்கப் பெற்றனர். அவர்கள் மேலதிகாரிகளிடமிருந்து வரும் ஆணைகள் அடங்கிய ஓலைகளை ஊர்ப் பொதுமன்றத்தில் படித்து அதனை மக்களுக்குத் தெரிவித்தனர். ஊரினை ஆள்வதற்கு உரியவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரை **'ஆள்வார்'** என்று குறிப்பிடும் வழக்கமும் அக்காலத்தில் இருந்தது. ஊர் அவையைச் சேர்ந்தவர்கள் **'பெருமக்கள்'** எனப்பட்டனர். இவர்கள் ஊரின் பொதுநலனைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வந்தனர். இப்பெரு மக்கள் உழவுத்தொழில், திருக்கோயிற்பணி, வழக்குகளைத் தீர்த்து அறங்கூறல் முதலிய பணிகளில்

ஈடுபட்டிருந்தனர். ஊர் அவை பல உட்பிரிவுகளாகப் பிரிந்து பணியாற்றியது. ஒவ்வொரு பிரிவும் **'வாரியம்'** (குழு) எனப்பட்டது. **'ஏரி வாரியப் பெருமக்கள்', 'தோட்டவாரியப் பெருமக்கள்'** எனப் பல குழுக்களைக் கொண்ட முழு அவையே 'ஊரவை'யாக விளங்கியது. இத்தகைய ஊர் அவைகள் இருபதிற்கு மேலாக அக்காலத்தில் இருந்ததெனத் தெரிகிறது. இத்தகைய ஊர் அவைகள் சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தில் திருவெண்ணெய் நல்லூரிலும், திருநீலகண்ட நாயனார் காலத்தில் சிதம்பரத்தில் இருந்தமையும் பெரியபுராணத்தால் புலனாகின்றது.

சிற்றூர்களை அரசனின் நேர் பிரதிநிதியாக பொறுப்பேற்று ஆண்டவர்கள் **'ஆளுங்கணத்தர்'** எனப்பட்டனர். இவர் ஊரவைப் பெருமக்களின் வேறானவராவர். இக்கால ஊராட்சிமன்ற உறுப்பினர்களைப் போன்றவர், ஊரவைப் பெருமக்களாவர். இக்காலச் செயல்துறை அதிகாரிகளை (Executive officers)ப் போன்றவர் ஆளுங்கணத்தவராவர். திருக்கோயில் தொடர்பான பலவகை வேலைகளையும் தவறாது கவனித்துக் கோயிலைச் செம்மையாக ஆட்சிபுரிந்து வந்த கூட்டத்தார் **'அமிர்த கணத்தார்'** எனப்பட்டனர். இந்த அமிர்த கணத்தார் ஆட்சி இருந்தமையால்தான் அப்பர், சம்பந்தர், சுந்தரர் காலங்களில் கோவில்கள் உயர்நிலையில் இருந்தன. நாயன்மார்க்கு நல்வரவேற்புக் கிடைத்தது. அக்காலத்தில் கோயில்களில் ஆடல், பாடல்கள், விழாக்கள் முதலியன குறைவின்றி நடைபெற்றன. சைவ சமயம் இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலியன கொண்டு நன்கு வளர்ந்தது. இவ்வாறே வைணவமும் நன்கு வளர்ந்தது.[1]

பல்லவர் காலத்தில் பல சிற்றூர்கள் வேதம் ஓதுபவர்கள் வாழ்வதற்கென்றே புதிதாக உண்டாக்கப்பட்டன. அவை 'பிரமதேயச் சிற்றூர்கள்' எனப்பட்டன. இச்சிற்றூர்களுக்கு எத்தகைய வரியும் அரசினரால் விதிக்கப்படவில்லை. எனவே எத்தகைய கவலையுமின்றி இச்சிற்றூர்கள் நன்முறையில் வளர்ச்சியுற்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன பட்டத்தாள்மங்கலம், தயாமுக மங்கலம், உதயசந்திர மங்கலம் என்பனவாகும்.

வேறு சில ஊர்கள் கோயில்களுக்குரியனவாகப் பல்லவ மன்னர்களால் விடப்பட்டன. 'தேவதானச் சிற்றூர்கள்' என்று

---

1. டாக்டர் மா.இராசமாணிக்கனார் - பல்லவர் வரலாறு - பக்.229-30.

அவை பெயரிடப்பட்டன. அச்சிற்றூர்களின் வருவாய் முழுவதும் அவ்வூர்களில் உள்ள திருக்கோயில்களின் பணிக்கே செலவிடப்பட்டன. பல்லவ மன்னர்கள் தமிழகத்தில் செங்கற்களால் சிறப்புற்ற கோயில்களைக் கண்டனர். அவற்றைப் பெருங்கற்கோயில்களாக மாற்றியமைத்த பெருமை பல்லவரையே சாரும். அவர்கள் நாடு முழுவதும் பல்வகையான கற்கோயில்களைக் கட்டியதோடு அமையாது, அக்கோயில்களுக்குப் பல சிற்றூர்களைத் தானமாக அளித்து, நாள்வழிபாடும், வேறுபல சிறப்புக்களும் குறைவற நடைபெறப் பேணிக் காத்தனர். அவ்வாறே சமணபள்ளிகளின் பராமரிப்பிற்காக வரியின்றி நிலங்கள் பல விட்டுள்ளனர். அவை **'பள்ளிச்சந்தம்'** என்று வழங்கப் பெற்றன.

சமய நிலை:

பல்லவப் பேரரசர்காலத்தில்தான் தமிழகத்தில் சைவ வைணவ சமயங்கள் மலர்ச்சியுற்றன என்பதைக் கண்டோம். பக்திநெறியின் இரு கிளைகளான சைவ, வைணவ சமயங்கள் இக்காலத்தில் நன்கு உருவம் பெற்று வளர்ந்தன. வேங்கட முதல் குமரிவரை ஆழ்வார்களும் நாயன்மார்களும் கால்நடையாகச் சென்று மக்களுடைய உள்ளங்களிலே பத்தி வெள்ளம் பெருக்கெடுத்துப் பொங்கி வழியுமாறு நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் பெருந்தொண்டாற்றினர். இது முதல் வழிபடு கடவுளைத் தவிர மற்றைய பொருள்களைப் பாடுவது தமிழ்நாட்டில் தழைக்கவில்லை. இது முதல் மூன்று நூற்றாண்டுகள் வரையில் அகப்பொருள், இயற்கைப் பொருள், போர், அரசரது மாட்சி, முதலிய பொருள்களைப் பற்றிப் பாடும் புலவர்களே தோன்றவில்லை எனலாம்.

ஆகமங்களில் சொல்லப்படும் பாடவல்லார் நெறி (சரியை), ஆடவல்லார் நெறி (கிரியை), நாடவல்லார் நெறி (யோகம்), தேடவல்லார் நெறி (ஞானம்) என்ற நான்கு நெறிகளுள்[1] முதலிரண்டும் தொண்டுநெறி (கரும மார்க்கம்) நிறைந்தும், மற்றிரண்டும் அறிவு நெறி (ஞானமார்க்கம்) நிறைந்தும் உள்ளனவாகும். நாடுதலும் தேடுதலுமாகிய அறிவுநெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவது மக்கள் பலருக்கு அரிய செயலாகும். பாடலும் ஆடலுமாகிய, ஒழுக்கமும் நோன்புமாகிய தொண்டுநெறி

---

2. திருமந்திரம் - 128.

யாவரும் எளிதில் கடைப்பிடித்து ஒழுகுவதற்குரியதாக ஆழ்வார்களும் நாயன்மார்களும் கருதினர்.

"வேதம் ஓதுவதனால் பயனில்லை; சாத்திரங்களின் உட்பொருளைப் பிறரிடம் கேட்டறிவதனால் உண்டாகும் பயன் ஒன்றும் இல்லை; பல அறிய அறநூல்களை நாளும் ஓயாது பயிலுவதனால் பயன் விளையாது. வேதத்தின் ஆறு அங்கங்களைக் கற்று அதன் பொருளினை உணர்வதனாலும் பயனில்லை. ஈசனை உள்ளத்தால் நினைந்து, மனத்தினால் சிந்தித்து, வாயினால் வாழ்த்த வல்லார்க்கே வீடுபேறு கிடைக்கும்"[3] என்று அழுத்தம் திருத்தமாகத் திருநாவுக்கரசர் கூறியுள்ளமை ஈண்டு நினைவுகூரத்தக்கது.

மேலும்,

"... ... எம்பிரானுடைய கோவில்புக்கு
புலவர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டு, கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றிஎன்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதியென்றும்
ஆரூரா என்று அன்றே அலராநில்லே" – திருநா.தே.245:3.

"தொழுது **மலர்தூவித் துதித்து** நின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே" – திருநா.தே.135:8.

"பூக்கைக் கொண்டுஅரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டுஅரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரைதேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே" – திருநா.தே.204:5

என்று நாவுக்கரசர், நாட்டுமக்களை விளித்துப்பாடியுள்ள பாடல்களின் உட்பொருளாய் ஒளிர்வது தொண்டு செய்து வாழும் தூய வாழ்க்கையாகிய பத்திநெறியேயாகும்.

---

3. திருநாவுக்கரசர் தேவாரம் - 213:4.

"புண்ணியம் செய்து நல்ல புனலொடு மலர்கள்தூவி
எண்ணுமின் எந்தைநாமம் இப்பிறப்பறுக்கும்..."
திண்ணநாம் அறியச் சொன்னோம் செறிபொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம் அணுகுவார் அமரராவார்" – திரு.4.6

என்று நம்மாழ்வாரும் நாட்டு மக்களை நோக்கிக் கூறியுள்ளமை பத்திநெறியின் சிறப்பினை எடுத்துரைப்பனவாகும்.

தமிழில் இறைவழிபாட்டைக் குறிக்கும் 'பூசை' என்னும் சொல்லைப்பற்றி டாக்டர் சுன்னித் குமார சாட்டர்ஜி[4] என்னும் அறிஞர், பூசை என்னும் சொல் 'பூசெய்' என்பதன் திரிபு என்பர். 'பூசெய்' என்பது 'பூவினால் செய்யப்படும் இறைவழிபாட்டைக்' குறிப்பது என்றும், 'பூசை' என்பது கன்னித்தமிழ்ச் சொல் என்றும் பலகாரணங்கள் காட்டி விளக்கியுள்ளார். அவர் மேலும் கூறுவதாவது: "இந்தியாவில் இறைவழிபாட்டுமுறை இரண்டு வகையாகத் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. பூக்களைத் தூவி - பூப்பலிசெய்து - வழிபடும் வழிபாட்டுநெறி ஆரியர்கள் அறியாத ஒன்று. வேதகால முதற்கொண்டு ஆரியர் முத்தீ வளர்த்து வழிபாடு செய்யும் தீ வழிபாட்டையே செய்து வருகின்றனர். முத்தீ வழிபாட்டில் தாங்கள் வழிபட்ட இயற்கைச் சக்திகளான நெருப்பு, காற்று, கதிரவன், வருணன், இடி, மழை, நிலம், நீர் முதலியவற்றிற்குச் சினம் உண்டாகாமல் தடுப்பதற்காகத், தங்களிடம் உள்ள பொருள்களான ஆடு, மாடு, பார்லி, பால், வெண்ணெய், சோமபானம் போன்ற பொருள்களை வேள்வித்தீயில் இட்டு இவ்வியற்கைச் சக்திகளின் அருளை வேண்டி வணங்கினர். இத்தகைய வழிபாடு மிக எளிமையானது; நாகரிகத்தின் தொடக்ககாலத்தில் மக்கள் மேற்கொண்டு ஒழுகியதுமாகும்.

பூவினைக் கொண்டு செய்யப்படும் வழிபாடு வேறுவகையானது. அது சிறந்ததொரு அடிப்படையில் எழுந்த வழிபாட்டு முறையாகும். இப்பேரண்டம் முழுவதும் ஒரு தெய்வீக ஆற்றல் நிறைந்திருப்பதை உணர்ந்து, அம் மாபெரும் தெய்வீக ஆற்றலோடு மனிதன் தான் ஒன்றுபட - கலந்து இன்புற விரும்பும் நோக்கத்தோடு செய்யப்படும் வழிபாடே 'பூசை'யாகும். இறைவன் இருப்பில் சிறிதும் ஐயுறாத மக்கள், எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைத் தத்தம் வழிபடு தெய்வ

4. *The History and culture of the Indian People. Vol I. ch.VIII.P.160.*

உருவங்களாக அமைத்து, அவற்றைத் 'தொழுது மலர் தூவித் துதித்து' வழிபடுகின்றனர். எனவே 'பூஜை என்ற வடசொல், 'பூசெய்' என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபாக வடமொழியில் இடம்பெற்றது'' என்பர்.

'பூக்கைக் கொண்டு' இறைவன் 'பொன்னடி போற்றும்' இவ்வழிபாட்டு நெறித் தொல்பழங்காலமுதல் தமிழரிடையே இருந்து வருவதாகும். பத்தி வெள்ளம் தமிழகத்தில் பெருக்கெடுத்துப் பாய்ந்தோடிய பொழுதும், இவ்வழிபாட்டு நெறியையே ஆழ்வார்களும் நாயன்மார்களும் சிறந்ததாகப் போற்றினர். நாட்டுமக்களை, 'அன்புள் உருகி அழுது அரற்றி என்பும் உருக இராப்பகல்' இறைவனைச் 'சலம்பூவொடு' போற்றி வழிபடுமாறு வேண்டினர்.

திருமால் அடியாரான பொய்கை ஆழ்வாரும்

"தொழுது மலர்கொண்டு தூபம் கையேந்தி
எழுதும் எழுவாழி நெஞ்சே – பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான்
அந்தரம் ஒன்றில்லை அடை"

என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இவ்வாறு அன்பினால் ஆண்டவனைப் போற்றி வழிபட்ட காலத்து நாடெங்கும் பல கோயில்கள் கட்டப்பட்டன. காஞ்சிமா நகரத்தில் மட்டும் நாற்பதுக்கு மேற்பட்ட கோயில்கள் அக்காலத்தில் எழுந்தன. சைவமும் வைணவமும் தமக்குள்ளே பிணக்குப் பூசலிடாது இருந்தமை அக்காலத்தின் சிறப்பியல்பாகும். பல்லவ மன்னர்களுள் பெரும்பாலும் (மகேந்திரவர்மன் திருநாவுக்கரசரால் சைவனாக்கப்படுவதற்கு முன்பு சமண் சமயம் அல்லாத பிற சமயங்களைப் போற்றவில்லை. பிற்காலத்தில் திருந்திவிட்டான்) சமயப்பொறை உடையவர்களாகவே இருந்தனர்.

பல்லவப் பேரரசர்கள் காலத்தில் கட்டடக் கலையும், சிற்பக்கலையும் சிறப்புற்றோங்கியது. இந்தியச் சிற்பக்கலை, கட்டடக்கலைக் கோட்பாடுகளுள் பல்லவர் காலத்திய சிற்ப, கட்டடக்கலைக் கோட்பாடுகள் நிகரற்று விளங்குகின்றன. தென்னிந்தியாவின் கட்டடக்கலையே பல்லவர் காலத்தில்தான் தொடங்கியது. கருங்கல் கட்டடக்கலை இதற்கு முன்பு தமிழகத்தில் இருந்திருந்தாலும், பல்லவர்கள்தான் கருங்கல்லையே

முழுவதும் தாராளமாகப் பயன்படுத்திப் பெருங்கோயில்களைக் கட்டினர். மாமல்லபுரமும், காஞ்சிமாநகரும் பல்லவர்காலத்திய சிற்பங்கள் நிறைந்த கட்டடக்கலைக் கருவூலங்களாகக் காட்சி தருகின்றன. சிற்றண்ணல் வாசலின் சிதையா வண்ண ஓவியங்கள், பிற்கால ஓவியக்கலையின் வளர்ச்சிக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. புதுக்கோட்டை மாநிலத்திலுள்ள குடுமியான்மலை இசைக் கல்வெட்டும், சிற்றண்ணல் வாசல் ஓவியங்களும், காஞ்சிமா நகரில் காணப்படும் ஓவியங்களும், இசை, நாட்டியம், ஓவியம் போன்ற இன்கலைகள் இனிது பல்லவ மன்னர்களால் போற்றப்பட்டு வளர்க்கப்பட்டமைக்குச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன. சைவ பத்தி இயக்கத்தை வளர்த்த நாயன்மார்களாலும், வைணவ பத்தி இயக்கத்தை வளர்த்த ஆழ்வார்களாலும் தமிழ் இலக்கியத்தில் சங்ககாலத்தையடுத்துத் தளர்வுற்று நலிந்த இசையிலக்கியம் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது. கடல் கடந்த கிழக்காசிய நாடுகளில் தமிழ்நாட்டுப் பண்பாடும் நாகரிகமும் பல்லவர்காலத்தில் சென்று பரவத் தொடங்கின.

பல்லவப் பேரரசர் காலத்தில் சிறந்த தமிழ் இலக்கியங்கள் பல தோன்றவில்லை. எனினும், தமிழ் இலக்கியத்தைச் சிறப்புறச் செய்த பத்தி இலக்கியமாகிய திருமூலர் திருமந்திரம், காரைக்கால் அம்மையார் பாடிய பதிகங்கள், மூவர் தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆகிய தெய்வத் தமிழ் நூல்கள் பல தோன்றியமை குறிப்பிடத்தக்கது. அவற்றோடு இருண்ட காலப் பகுதியில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை இக்காலத்திற்குரிய இலக்கியங்களோடு இணைத்துச் சொல்லப்படுகின்றன. இலக்கியச் சுவைமிக்க முத்தொள்ளாயிரம் இக்காலத்திற்கு உரியதே. பெருங்கதை, நாலடியார் போன்ற நூல்களும் பல்லவர்கள் காலத்தில் தோன்றிய தமிழ்நூல்களேயாகும். நந்திக்கலம்பகம் பல்லவப் பேரரசின் இறுதிக்காலத்தில் தோன்றியதாகும். இதே காலத்தில் பாரதம், வெண்பா யாப்பினால் பெருந்தேவனாரால் பாடப்பெற்றது. சேரமான் பெருமாள் நாயனார் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலா, பொன்வண்ணந்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை

முதலியன குறிப்பிடத்தக்கன. இவை அல்லாமல் பல யாப்பு இலக்கண நூல்கள் இக்காலத்தில் தோன்றியனவாகக் கருதப்படுகின்றன.

இவற்றைவிட மிகுதியாக வடமொழி நூல்களும், பாலிமொழி நூல்களும் பல்லவப் பேரரசர்களின் ஆதரவில் இயற்றப்பட்டதை முன்பு கண்டோம்.

பல்லவர் காலத்திய தமிழகம், தனிச்சிறப்பு வாய்ந்ததன் நாகரிகத்தினை இழந்து, பழமையும் புதுமையும் கலந்த வேற்றுமொழியாளர் பண்பாட்டில் ஊறித் திளைக்கத் தொடங்கியது. அதன் பயனாகக் 'குலம்பேசி குணம்பேசி' மணம் முடிக்கும் பழக்கமும், பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டும் வழக்கமும் குடி புகுந்தன. அமைதியற்ற உள்ளத்தோடு துன்புற்ற மக்களுக்கு 'அன்பில் இவ் வையகம் தழைக்கும்' என்பதில் நம்பிக்கை ஊட்டிய அருளாளர்களின் உள்ளத்தே பொங்கி எழுந்த உணர்வால் கனிந்த அருட்பாடல்கள் உலக இலக்கியத்தில் இணையற்ற இடத்தைப் பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். தேவாரம், திருவாசகம், திருமந்திரம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம் ஆகியவை பத்திநெறியை இசைத்தமிழின் வாயிலாக நாடெங்கும் பரப்பின. இப்பத்தி இயக்கத்தைச் சார்ந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும், நீலகண்டர், சங்கரர், இராமானுசர் ஆகிய வடமொழிவாணர்களுக்கு வழிவகுத்துத் தந்தனர் என்று கூறின் மிகையாகாது. இரசபுதனத்தில் மீராவும், வங்கத்தில் சைதன்யரும், இராமானுசரைப் பின்பற்றித் தோன்றிய மத்வாச்சாரியரின் அடியொற்றி அன்புநெறியை வடநாட்டில் வளர்த்தவராவர். தமிழகத்தில் அன்புநெறியாக அரும்பிய பத்தி இயக்கம், வடநாட்டில் பந்தர்ப்பூர் பத்திநெறியாகவும், கபீர், துளசிதாசர், சைதன்யர் ஆகியோர் போற்றிவளர்த்த புனிதமிக்க பத்தி நெறியாகவும் வடநாட்டு மக்களுடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்டது.

4. சோழர்காலத் தமிழகம்

கி.பி.எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் களப்பிரர்களின் கொடுஞ்செயல்களால் அழிந்துபோன சோழப் பேரரசு மீண்டும் தளிர்த்துத் தழைத்தோங்கத் தலைப்பட்டது. பல்லவரின் ஆட்சிக்கடங்கிக் குறுநில மன்னனாக இருந்த சோழ மரபைச் சார்ந்த விசயாலயன் என்பவன் கி.பி.850ல் பல்லவர்களையும், பாண்டியர்களையும் எதிர்த்துப் போரிட்டு வாகை சூடினான். அதன் பயனாகத் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சிறந்ததொரு சோழப் பேரரசினை நிறுவ கால்கோள் விழா நடத்தினான். அவனுக்குப் பிறகு வந்த மன்னர்கள் பல்லவரையும், பாண்டியரையும், சேரரையும் தோற்கடித்து வேங்கடம் முதல் குமரிவரை ஒருமொழி வைத்து நாடாண்டனர். பண்டை உலகில் மாபெரும் மன்னனாகவும், ஒப்பற்ற வீரனாகவும் விளங்கியவன் அலெக்சாண்டர். அவனுடைய தகப்பன் பிலிப்ஸ் ஆட்சிக்கு வந்தவுடன், சிதறிக்கிடந்த கிரேக்க நாடுகள் அனைத்தையும் தன்னுடைய ஆட்சியின் கீழ்க்கொண்டுவந்து ஒன்றுபட்ட கிரேக்க நாடாக ஆக்கினான். தகப்பன் அமைத்த அடித்தளத்தின்மேல் அலெக்சாண்டர் ஒரு பெரும் பேரரசை நிறுவினான். அவர்களைப்போல நமது இராசராசன் முதலில் தென்னாட்டினை ஒன்று படுத்தினான். அவன் மகன் இராசேந்திரன் அலெக்சாண்டரைப் போல் அயல்நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று 'கங்கைகொண்ட சோழன்' 'கடாரம் கொண்ட சோழன்' என்று பேரும் புகழும் பெற்றான். தக்கணத்தில் இராட்டிர கூடர்களையும், கீழைச்சாளுக்கியர்களையும் எதிர்த்துப் போரிட்டு நெல்லூர் வரையில் சோழப் பேரரசைப் பரப்பினர். இந்நிலையில் சோழர் மரபில் இருபெரும் மன்னர்கள் தோன்றினர். சிறப்புமிக்க இராசராசன் காலம் முதல், ஒரு நூற்றாண்டுவரை சோழப்பேரரசு இந்திய மண்ணிலே ஈடும் இணையுமற்ற ஒரு பெரும் பேரரசாகப் பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்தது. அக்காலத்தில் வடமேற்கு இந்தியாவின் மீது முகமதுகசனி பலமுறை படையெடுத்துச் சூறையாடிக்கொண்டு இருந்தான் என்பது இங்கு நினைவுகூர்தல் வேண்டும். இராசராசன் பட்டமெய்தியதும் சேரர்களையும்,

பாண்டியர்களையும், கங்கர்களையும், சாளுக்கியர்களையும் வென்று துங்கபத்திரை ஆறு முதல் இலங்கையின் வடபகுதிவரை தன் பேரரசை நிறுவினான். இராசராசன் மாபெரும் வீரனாகவும், படைத்தலைவனாகவும் விளங்கியதோடு அல்லாமல், சிறந்த ஆட்சியாளனாகவும் விளங்கினான். அவனுடைய ஆட்சி மேலைக் கடற்கரையில் உள்ள இலட்சத் தீவுகளிலும் சென்றுலாவியது.

இராசராசனுடைய மகன் இராசேந்திரன் தகப்பனோடு இளமையிலேயே பல போர்க்களங்களைக் கண்டான்; ஆட்சிப் பொறுப்பில் பங்கு ஏற்று நாடாளும் பயிற்சி பெற்றான். தந்தைக்குப்பின் இராசேந்திரன் அரசெய்தினான். அவனுடைய வாழ்நாளின் பெரும்பகுதி போர் புரிவதிலும், நாடுகளைக் கைப்பற்றுவதிலுமே கழிந்தது. இலங்கை முழுவதையும் தன் ஆட்சிக்குக் கீழ்க்கொண்டு வந்ததோடு, வடக்கே கங்கைக் கரையிலே மகிபாலன், கோவிந்த் சந்திரன் ஆகிய வடநாட்டு மன்னர்களை வென்று வாகை சூடினான். அவ்வெற்றியின் நினைவாகக் 'கங்கைகொண்டான்' என்ற பட்டப்பெயர் புனைந்தான்; சோழநாட்டிலே 'கங்கைகொண்ட சோழபுரம்' எனும் புதியதோர் நகரை அமைத்து, அதைத் தன்னுடைய தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யத் தொடங்கினான். இராசேந்திரனுடைய மாபெரும் சாதனைகளுள் சிறப்பிடம் பெற்றது அவனுடைய கடற்போரேயாகும். அவன் தென்கிழக்கு ஆசியநாடுகளான ஜாவா, சுமத்திரா, பர்மா போன்ற நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று மாபெரும் வெற்றி பெற்றதோடு, அந்நாடுகளைத் தனது பேரரசில் இணைத்து நெடுங்காலம் ஆண்டுவந்தான்.

தனது வாழ்நாளின் இறுதிப்பகுதியில் மாண்புமிக்க சோழப் பேரரசின் மக்கள் எல்லாம் வளமாகவும் நலமாகவும் வாழ்வதற்குரிய செயல்களிலே ஈடுபட்டான். நாட்டிலே இயற்கை வளம் கொழிக்கவும், செல்வம் செழிக்கவும், மக்கள் கவலையற்ற அமைதியான இன்ப வாழ்வு வாழவும் அரும்பாடுபட்டான். தகப்பனைப்போல் சைவ சமயத்தைப் போற்றினான்; தகப்பன் தொடங்கிய கோயில் திருப்பணியை - தஞ்சைப் பெரிய கோயிலைப்போன்ற சிறப்புமிக்க கோயில் ஒன்றைக் கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டினான். அது இயற்கைச் சக்திகளால் அழிக்கப்பட்டும் அழியாது பெருமிதத்தோடு இன்றும் காட்சியளிக்கிறது.

இராசேந்திரனுக்குப் பிறகு அவன் கால்வழியினர் போராலும் நோயாலும் மாண்டதனால், அவன் பெண்வயிற்றுப் பேரனும், கீழைச் சாளுக்கிய நாட்டு இளவரசனுமான இராசேந்திரன் 'குலோத்துங்கன்' என்ற சிறப்புப் பெயருடன் சோழநாட்டின் அரசனானான். இவனும், இவனுக்குப் பின்வந்த அரசர்களும் சோழப்பேரரசைக் கட்டிக் காக்க இயலாது கவலையுற்றனர். பன்னிரண்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் பாண்டிய மன்னர்களை எதிர்த்துப் போரிட்டு வெற்றிகாண இயலாத காரணத்தினால் சோழப் பேரரசு வீழ்ச்சியுற்றது. நான்கு நூற்றாண்டுகள் உலகப்புகழ் பெற்று, ஆசியாவின் பெரும் பேரரசாக விளங்கிய சோழப் பேரரசின் வீழ்ச்சி, பாண்டியப் பேரரசின் எழுச்சிக்கு ஏற்ற அடிப்படையாக அமைந்தது.

ஆட்சி முறை:

பேரளவில் நமக்குக் கிடைத்திருக்கும் சோழர்காலத்திய கல்வெட்டுக்களிலிருந்தும், செப்பேடுகளிலிருந்தும் சோழர் ஆட்சி அமைப்பு சிறந்த முறைகளை அடிப்படையாகக் கொண்டு, நல்ல வகையில் திறமை வாய்ந்ததாய் விளங்கியதை அறிகிறோம். நாட்டின் தலைவனாகிய மன்னன் சிறப்புரிமைகள் உடைய ஆட்சித்தலைவனாய் இருந்ததோடு, நாடாளும் மன்னனாகவும் மாண்புற்று விளங்கினான். ஆட்சி அமைப்பாகிய தேரினைத் தன் ஆற்றலுக்குட்படுத்தியிருந்தான். நேர்முகமாக நாட்டாட்சியின் நிலையினை அறிவதற்குப் பலமுறை நாடு முழுவதும் பயணம் செய்தான்.

சோழப்பேரரசின் ஆட்சி உரிமைகள் அனைத்தும் மத்திய அரசாங்கத்திடமே குவிந்திருந்தன. நாட்டாட்சியில் பல்வகைத் துறைகளின் தலைவர்களைக் கொண்ட ஓர் **'அமைச்சர் குழு'** அரசனுக்கு அவ்வப்போது அறிவுரை கூறி வந்தது. அக்குழுவிற்கு, **'உடன்கூட்டம்'** என்பது பெயர். ஆட்சித்துறைகளில் பல நிலைகளைச் சார்ந்த எண்ணற்ற அதிகாரிகள் இருந்தனர். அதிகாரிகள் சமுதாயத்தில் தனிப்பட்டதோர் பிரிவாகவே வாழ்ந்தனர். **பெருந்தனம், சிறுதனம்** என்னும் இரண்டு பிரிவுகள் அவர்களிடையே இருந்தன. அதிகாரிகள் மக்களின் அன்றாட வாழ்வில் தலையிட்டுத் தொல்லை விளைவிக்காமல் கண்காணிக்கப்பட்டனர். மத்திய அரசாங்கம் அயல்நாட்டுப் படையெடுப்புக்களிலிருந்து நாட்டைக் காப்பதற்குரிய தற்காப்பைக்

கவனித்தது. நாட்டிலே அமைதியையும், சட்ட ஒழுங்குமுறையையும் நிலைநாட்டி, நாட்டு மக்களின் பொதுநல வாழ்வினைச் சீர்குலையாதவாறு காத்து வந்தது. ஆட்சிமுறையின் பெருங்கடமைகள் எல்லாம் மாவட்ட, மாநில ஆட்சி அமைப்புக்களையே சார்ந்தனவாக இருந்தன.

'ஊர்' நாட்டின் அடிப்படை ஆட்சி உறுப்பாக விளங்கியது. பல ஊர்கள் சேர்ந்த ஆட்சிக்குரிய அமைப்பு **கூற்றம்** என்றும், பல கூற்றங்கள் சேர்ந்தது **நாடு** அல்லது கோட்டம் என்றும் வழங்கப்பெற்றது. பல நாடுகள், அல்லது கோட்டங்கள் சேர்ந்து 'வளநாடாக'த் திகழ்ந்தன **வளநாடுகள்** பலவற்றைத் தன்னகத்தே கொண்டது **'மண்டலம்'** எனப்பட்டது. ஒவ்வொரு மண்டலமும் கைப்பற்றப்பட்ட பிறநாட்டின் பரப்பைக் குறிப்பதாக அமைந்தன. அம்மண்டலங்களின் தலைவர்களும் அந்நாட்டின் பண்டை அரசர் குடியைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். மண்டலாதிபதிகள் பலவகைப்பட்ட அதிகாரிகளின் உதவியைக்கொண்டு நாட்டினைச் செம்மையாக ஆண்டனர்.

சோழர் ஆட்சிமுறையின் சிறப்பியல்பாக விளங்குவது அவர்களுடைய ஊராட்சிமுறையேயாகும். ஊர்களிலும் நகரங்களிலும் மக்களாட்சி பண்பின் அடிப்படையில் அமைந்த ஊராட்சி மன்றங்களும், பெரும் நகரங்களில் பிரதிநிதிகளடங்கிய 'நகரமும்' நாட்டாட்சியை நன்முறையில் நடத்தின என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவையல்லாமல், நாட்டில் சமயக்குழுக்கள், சமுதாய அடிப்படையில் அமைந்த சாதிக்குழுக்கள், பொருளியல் அடிப்படையில் அமைந்த வாணிகக்குழுக்கள் பல இருந்தன. அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட அமைப்புக்களை அல்லது கடமைகளைக் கவனித்து வந்தன.

ஊராட்சி மன்றங்கள் மக்களிடையே குழு மனப்பான்மையை வளர்த்து, கூட்டு முயற்சியில் ஈடுபடுத்திய முறை நம்முடைய கருத்தைக் கவருவதாகும். ஊராட்சி மன்றங்கள் இருவகைச் சிறப்புடையன. **'ஊர்' மன்றம்** பொதுவாக எல்லா ஊர்களிலும் காணப்பட்டதால், **'சபை'** என்பது பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட மங்கலங்களுள் இருந்த ஊர் ஆட்சி அமைப்பாகும். அக்காலத்தில் ஊராட்சி மன்றங்களில் உறுப்பினராவதற்குரிய தகுதிகள் பற்றியும், தேர்தல்முறையைப் பற்றியும் விளக்கமாக உத்திரமேரூர் கல்வெட்டினால் அறிகிறோம். ஊரினை ஆளும்

பொறுப்பு, மன்றத்தின் உறுப்பினர்களாக ஒவ்வொரு குடும்பிலி (Ward) ருந்தும் ஊர் மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றவரைக்கொண்டு அமைக்கப்பட்ட பல்வகைக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஊரிலும் ஐந்து குழுக்கள் (வாரியங்கள்) இருந்தன. அவை ஒவ்வொன்றும் தத்தம் கடமைகளைச் செம்மையாகச் செய்வதில் கருத்தாக இருந்து வந்தன. அவை ஊரில் நிலங்கள் அனைத்தையும் விற்கவும் வாங்கவும் உரிமை வாய்ந்தனவாக இருந்தன. ஊரில் உள்ள நிலங்களுக்குரிய வரிகளைத் திரட்டின; வரிகொடாத உழவர்களின் நில உரிமையைப் பறிமுதல் செய்தன; தருமத்திற்கு விடப்படும் நிலங்களையும், வழங்கப்படும் பொன்னையும் பொருளையும் சேமித்துக் காக்கும் அறநிலையக் காப்பாகவும் அவை விளங்கின.

ஊராட்சிமன்றங்கள் வழக்குகளை விசாரித்துத், தீர்ப்பு வழங்கும் உரிமையும் பெற்றிருந்தன. திரட்டிய வரிகளை கணக்குப் புத்தகத்தில் பதிவு செய்துவைத்தன. அரசனின் ஆணைபெற்ற அதிகாரிகள் ஆண்டிற்கு ஒருமுறையாகிலும் அப் புத்தகங்களில் எழுதப்பட்ட கணக்குகள் சரியாக இருக்கிறதா என்று பார்த்துத் தணிக்கை செய்தனர். நாட்டாட்சியின் அடிப்படையில் அமைந்த இச்சிறு 'குடியரசுகள்' மக்களிடையே கூடி வாழும் மனப்பான்மையை ஊக்குவித்தன; நாட்டாட்சியில் குடிமக்களுக்குரிய கடமையுணர்வை வளர்த்தன; உரிமை வாழ்வில் மக்களுக்கு ஆர்வத்தை ஊட்டின; திறமையும் தூய்மையும் பொருந்திய சிறந்த ஆட்சிமுறை நாட்டிலே வேரூன்றி விளங்குமாறு செய்தன.

மக்கள் வாழ்க்கை:

சோழப் பேரரசர் காலம் 'தமிழகத்தின் இரண்டாவது பொற்காலம்' எனப் போற்றும் அளவிற்கு ஒப்புயர்வற்று விளங்கியது. அவர்கள் காலத்தில் என்றும் அடையமுடியாத உயர்நிலையைத் தமிழகம் அடைந்தது; உலகம் போற்ற வாழ்ந்தது. நாட்டிலே வீரமும், செல்வமும் சிறந்து விளங்கியதன் பயனாக மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி பூத்தது. அப்புத்துணர்ச்சி, கம்பனின் மாபெரும் காப்பியமான இராமகாதையாகவும், என்றும் காண்போர் வியக்கத்தக்க வகையில் விண்ணைத் தீண்டித்தழுவும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலாகவும் நாட்டிலே மலர்ந்து மணம் பரப்பியது. சோழர்கள் காலத்தில் கோயில்கள் சமுதாய அமைப்புக்களாய் விளங்கின. கடவுளை வழிபடும் நிலையங்களாக

மட்டும் விளங்காமல், பொதுமக்களின் அன்றாட வாழ்வில் நெருங்கிய தொடர்புகொண்ட மக்கள் நிலையங்களாகத் திகழ்ந்தன. 'அவை நடமாடும் கோயில்கள் வாழ எழுந்த படமாடுங்கோயில்கள்' என்று போற்றப்பட்டன. மக்களின் மனவெழுச்சிக்கு ஏற்ப காவியமும் ஓவியமும், கற்சிலையும் பொற்சிலையும், ஆடலும் பாடலும், அழகும் அறிவும், அன்பும் இன்பமுமாய்க் கோவில்கள் நாடெங்கும் வானளாவ ஓங்கி வளர்ந்தன.

இவ்வாறு தமிழ்நாடு பொலிவுற்ற காலத்தில்தான், நாட்டில் வாழ்ந்த மக்களிடையே நால்வகைச் சாதி நாலாயிரம் சாதிகளாய்ப் பெருக்கமுற்றது. உரிமையும் கடமையும் உடைய தொழிற் குழுக்களாக அரும்பிய தொழில் வேறுபாடு, இக்காலத்தில் சாதிவேறுபாடாக நாட்டில் நன்கு நிலைபெற்றுவிட்டது. மக்களிடையே உயர்வு தாழ்வு மனப்பான்மை வளர்ந்ததன் பயனாக வலங்கை, இடங்கை எனப்பட்ட இருவகைக் கூட்டங்களாக நாட்டுமக்கள் - சிறப்பாகத் தொழிலாளிகள் - பிரிந்து நின்று போரும் பூசலுமிட்டனர். சோழப் பேரரசின் இறுதிக்காலத்தில் தொடங்கிய இப்போராட்டம் வெள்ளையரின் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்காலம் வரை 'இரத்தவெறி' பிடித்த விலங்குகளாக மக்களை மாற்றியது என்பது கருதத்தக்கது.

திறமை வாய்ந்த சிறந்ததொரு ஆட்சி அமைப்பு நாட்டில் இருந்தமையால் மக்கள் ஓரளவிற்கு வேறுபாட்டை மறந்து வாழ்ந்தனர். சமுதாயத்தில் ஒவ்வொரு பிரிவினரும் அவரவர் விருப்பப்படி வாழ உரிமை இருந்தது. அக்காலத்திய திருமண முறைக்கும் இக்கால வைதிக திருமண முறைக்கும் அதிக வேறுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. மக்கள் வாழ்க்கைத்தரமும் அவரவர் நிலைக்கேற்ப அன்றும் இன்றும் ஒரே வகையாக இருந்து வருகிறது. சங்ககாலச் சமுதாய நிலைக்கும் சோழர் காலச் சமுதாய நிலைக்கும் உள்ள வேறுபாடு அளவிட்டுரைத்தற்கு அரியது. சங்ககாலத்தைக் காட்டிலும் மக்கள் பெருக்கம் மிகுந்திருந்ததற்கேற்ப கம்பன் காலத்தமிழ்ச் சமுதாயம் சிக்கலும், பிணக்கும் நிறைந்ததாய் இருந்தது எனலாம். நாட்டின் பொதுநலனுக்குரிய செயல்களில் ஈடுபடும்பொழுது, மக்கள் ஓரளவிற்குச் சாதிவெறியற்றவர்களாக விளங்கினர். போரற்ற அமைதியான காலத்தில் நாட்டின் எப்பகுதியிலாகிலும் சாதிப் பிணக்கால் உண்டான குழப்பம் இருந்துகொண்டே இருந்தது. முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்தில் 'வலங்கை, இடங்கை' சாதியாருக்கிடையே

உண்டான பூசலால், 'இராசமசேந்திர சதுர்வேதிமங்கலம்' தீக்கிரையானதோடு, கோயிலின் பண்டாரம் கொள்ளையடிக்கவும் பெற்றது. காஞ்சிமாநகரில், மேற்கண்ட இரு பிரிவினரும் தனித்தனியே கோயிலில் கடவுளை வழிபட்டதோடு, தங்குவதற்குத் தனிமண்டபமும் கட்டிக்கொண்டனர். மேலும் திருக்கோயிலுக்குத் தொண்டு செய்யும் தேவதாசிகள்கூட இருவகைப் பிரிவினருக்கும் உரியவர்களாகத் தனித்தனியே அமர்த்தப்பட்டிருந்தனர் என்பதைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

பெண்கள் நிலை:

பெண்கள் வாழ்க்கையில் ஆண்களுக்கு அடிமைகளாக வாழவேண்டும் என்ற நியதி சோழர்கள் காலத்தில் தோன்றவில்லை. அக்காலத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட்டது. நாணமும் கற்பும் பெண்களின் அணிகலன்களாகத் திகழ்ந்தன. அக்காலத்தில் ஆண்மகன் தனக்குரிய கற்பைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மன்னர்களும் செல்வந்தர்களும் பல மனைவியரையுடையவர்களாக வாழ்ந்தபோதிலும், 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற அடிப்படையில் அமைந்த குடும்பங்களே மிகப் பலவாக இருந்தன. கணவன் இறந்தவுடன் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கம் அருகிய வழக்காக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆடல் மகளிர்:

ஆடல் மகளிர் சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தனர். பொதுவாழ்வில் சமயத்தோடு தொடர்புடைய விழாக்களிலேயே ஆடல் மகளிர் ஆடியும் பாடியும் மக்களை மகிழ்வித்தனர். இயல்பாகவே ஆடலிலும் பாடலிலும் அம்மகளிர் சிறந்து விளங்கினர். ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் பழகக்கூடிய வாய்ப்பை ஆடல் மகளிர் பெற்றிருந்தனர். அக்கால ஆடல் மகளிருள் சிலர் திருமணம் செய்துகொண்டு கணவனோடு குடும்பமாக வாழ்க்கை நடத்தியதாகவும் கல்வெட்டுக்களால் தெரியவருகிறது.

அடிமைகள்:

ஒரு நாடு சிறந்து விளங்க வேண்டுமென்றால் அந்நாட்டில் உழைப்பதற்கென்று ஒரு தனிக்கூட்டம் இருந்தாக வேண்டும் என்று கிரேக்க நாட்டு அறிஞர்களுள் புகழ்மிக்க பிளேட்டோ

அன்று கூறினான். அவன் உரிமை அற்ற அடிமைகள் நாட்டில் இருப்பது நாட்டிற்கு நன்மை பயக்கும் என்று கருதினான். அவன் கூறியது உண்மை என்பதைக் கிரேக்க, உரோமப் பேரரசுகள் காலத்திய வரலாற்றால் அறிகிறோம். உரோமப் பேரரசு இங்கிலாந்து முதல் எகிப்து வரை பரவியிருந்த காலத்தில் உரோமாபுரியில் அடிமைகள் இல்லாத வீடே கிடையாது. அதைப்போன்று தமிழகத்தில் தோன்றிய சோழப்பேரரசு கடல் கடந்த நாடுகளில் எல்லாம் கொடிகட்டி ஆட்சி செய்த காலத்தில் 'அடிமைகள்' இங்கும் பேரளவில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டு அடிமைகள் இருவகைப்படுவர். தங்களைத் தாங்களே கோயில் பணிக்காக விற்றுக்கொள்ளுவதனால் அடிமைகளாக மாறியவர் ஒரு பிரிவினர். இன்னொருசாரார் செல்வர் குடிகளில் தலைமுறை தலைமுறையாக அடிமைத்திறம் பூண்டு வாழ்ந்தவராவர். செல்வர் குடியில் தோன்றிய மகளுக்குத் திருமணம் ஆகின்றபொழுது, அவளுக்கும் அவள் கணவனுக்கும் தனித்தனியே இத்துணை அடிமைகள் சீதனமாகக் கொடுக்கப்பட்டனர் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. இத்தகைய அடிமைகள் சந்தைகளில் விலைகூறியும் விற்கப்பட்டனராம்.

நிலவுடைமை:

சோழர்கள், விளை நிலத்தில் வரிகள் வாங்கினார்கள். இதில், ஒருமுறை இருத்தல் வேண்டி, இராசராசன் வயல்களை அளந்து தீர்வைத் திட்டத்தினை ஒழுங்குபடுத்தினான். அவனுக்குப் பிறகு முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இங்கிலாந்து நாட்டில் 'நிலவரையறைக் கணக்கு' *(Domesday Survey)* எடுக்கப்பட்ட கி.பி.*1088*-ஆம் ஆண்டில் சோழநாட்டிலும் நிலவரையறை நடைபெற்றது.

அக்காலத்தில் நிலத்தை உழுதுண்ணும் வேளாளர் குறைவாகவே இருந்தனர். நிலத்திற்கு உரிமையுடைய நிலக்கிழார்களே மிகப்பலராக இருந்தனர். கூலிக்காக வேலை செய்யும் தொழிலாளிகளே நிலத்தை உழுது பயிரிட்டனர். 'உழுபவனுக்கே நிலம்' என்ற பழங்காலக் கோட்பாடு மாற்றமடைந்த காலம் இது. நிலம் தனிமனிதனின் உடைமையாகவே கருதப்பட்டது. பிரமதேயங்களான ஊர்களில் உள்ள நிலங்கள் முழுவதும் அவ்வூரிலிருந்த பார்ப்பனச் சமுதாயத்திற்குரியதாக இருந்து வந்தது.

மேலும் அக்காலத்தில் நிலங்களை 'வாரத்திற்குப்' பயிரிடும் முறை சிறிது சிறிதாகப் பெருகி வந்தது.

வாணிகம்:

நிலவரியே அரசின் தலையாய வரியாக இருந்தது. எனினும், பற்பல தொழில் செய்வாரும் உரிமைக்கட்டணங்கள் கட்டி வந்தனர். வாணிகம் செய்வாரும் விற்பனைவரி செலுத்தி வந்தனர். வாணிகம் நன்கு நடைபெறுவதற்காக **மரக்கால், நிறைகள்** முதலியன நாடு முழுவதும் ஒரே அளவாக இருக்கவும், வாணிகத்தில் இலஞ்ச ஊழல் நேராதபடி இக்காலத்தில் காக்கப் பெறுவதுபோல், அக்காலத்திலும் வரையறை செய்யப்பட்டிருந்தன. வணிகர் கூட்டத்தினர் ஆயிரம் பேர் **'மணிக்கிராமத்'தார்** முதலிய கூட்டங்களாகப் பிற நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தனர். வாணிகத்தால் நாடு வளம் பல பெற்றுச் சிறப்புற்றோங்கியது.

சமய நிலை:

பல்லவர் காலத்தில் மலர்ச்சியுற்ற சைவ, வைணவ சமயங்கள் சோழப் பேரரசர் காலத்தில் தேனொழுகும் நறுமலராய் நாற்றிசையும் புகழ் மணக்க சிறப்புற்றன. சமய வளர்ச்சியில் கோயில்களோடு புதிதாகத் தோன்றிய மடங்களும் பெரும் பங்கு கொண்டன. நாயன்மார்கள் ஆழ்வார்கள் ஆகியோர் காலத்தில் உணர்வு நெறியாக விளங்கிய பத்திநெறி, இக்காலத்தில் அறிவு நெறியினைத் (சித்தாந்தம்) துணையாகக் கொண்டு வளர்ந்தது.

திருமுறை வகுப்பு:

பன்னிரு திருமுறைகள் எனப்படும் சைவ சமயத்திருமுறை நூல்களான தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு போன்ற நூல்கள் நம்பியாண்டார் நம்பியால் இராசராசன் காலத்தில் தொகுக்கப்பெற்று, முறைப்படுத்திப் பாகுபாடு செய்யப்பெற்றன. இக்காலத்தில் கோயில்களில் தேவாரத் திருப்பதிகங்கள் ஓதும் வழக்கம் உண்டாயிற்று. கோயில்களில் முதன்முதல் பார்ப்பனர்களே திருப்பதிகங்கள் ஓதி வந்தனர். கோயில்களில் தேவாரம் முறையாகத் தவறாது ஓதப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஓர் அதிகாரி இருந்ததாகத் தெரிகிறது. அவர் பெயர் 'தேவார நாயகம்' என்பதாகும். கோயில்களில் திருத்தொண்டர் புராணம் விழாக்காலங்களில் படிக்கப் பெற்றதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

வைணவ சமய ஆசாரியரான நாதமுனிகள் வைணவத்தமிழ் மறையான திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்து முறைப்படுத்தியதும் இக்காலத்திலேயாகும். 'திருவாய்மொழித் தேவர்' என்பது, உக்கலில் கோயில் கொண்டு எழுந்தருளிய திருமாலுக்குரிய பெயராக வழங்கியது. உத்திரமேரூர் திருமால் கோயிலில் திருவாய்மொழி ஓதுவாருக்கு நாள்தோறும் உணவு அளிக்கப்பட்டதாகக் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. திருவரங்கம் திருக்கோயிலில் இராசேந்திரன் காலத்தில் அரங்கநாதரின் திருப்பள்ளியெழுச்சியின் போது திருவாய்மொழி ஓதப்பட்டது. இவ்வாறு கோயில்களில் 'தெய்வத் தமிழ்' மறைகள் ஓதப்பட்டதோடு, வேதங்களும் ஓதப்பட்டன.

சைவ நாயன்மார் வரலாறும், வைணவ ஆழ்வார்களின் வரலாறும் மக்களிடையே இக்காலத்தில் பரவி வந்தன. அக்கால மக்கள் அடியார்கள், ஆழ்வார்கள் ஆகியோரின் திருப்பெயர்களைத் தங்கள் குழந்தைகளுக்கு இட்டு மகிழ்ந்தனர். தென்னாட்டுச் சைவ சமயம் வடநாட்டுச் சைவ சமயப் பிரிவுகளோடு தொடர்பு கொள்ளத் தொடங்கியது. முதலாம் இராசேந்திரன் கங்கைக் கரையில் இருந்த சைவப் பார்ப்பனர்களைக் காவிரிக்கரைக்கு இறக்குமதி செய்து நாட்டின் பல பகுதிகளில் அவர்கள் வாழ வசதிசெய்து கொடுத்தான்.

மடங்கள்:

இக்காலத்தில் சைவசமய சாத்திரநூல்கள் பல தோன்றின. அவற்றுள் ஒப்பற்று விளங்குவது மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதம். அது பொதுமை நெறியைக் கடைப்பிடித்து உண்மையை உரைத்துப் போகின்றது. சைவ சமய வளர்ச்சிக்கென்று தோன்றிய மடங்கள் பல. அம்மடங்களின் தலைவர்களாக விளங்கிய சைவப்பெரியார்கள், சைவ சித்தாந்த சாத்திரத்தின் உட்பொருளை மக்கள் எளிதில் அறியுமாறு பல சித்தாந்த நூல்களைச் செய்துள்ளனர்.

குகைகள்:

மடங்களைப் போன்று 'குகைகள்' எனப் பெயர் பெற்ற அமைப்புக்கள் நாட்டில் பல தோன்றின. அவை சைவ சமயத்தை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தன. 'குகைகள்' செய்து வந்த தொண்டுகள் வைதிக பிராமணர்களுக்கு வெறுப்பை

உண்டாக்கிற்று. அதன் பயனாக மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் 'குகைஇடி கலகம்' என்ற கிளர்ச்சி உண்டாயிற்று. பல குகைகள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பெற்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது திருத்துறைப் பூண்டியில் இருந்த குகையாகும்.

சமயப் பொறை:

இவ்வாறு சைவப் பேரரசர்களான சோழ மன்னர்கள் காலத்தில் நாட்டில் சைவ சமயம் தழைத்தோங்கியது. ஆயினும் வைணவ, சமண, பௌத்த சமயங்களும் அரசர்களின் ஆதரவைப் பெற்றன. இரண்டாம் குலோத்துங்கன் என்ற மன்னன் தில்லையில் நடராசப் பெருமான் கோயிலினுள் இருந்த கோவிந்தராசப் பெருமாளை எடுத்துக்கடலில் எறிந்தான் என்றும், அவன் காலத்தில் வாழ்ந்த வைணவப் பெரியாரான இராமானுசர் தமிழகத்தைவிட்டுப் போசளர் நாட்டிற்கு விரட்டப்பட்டார் என்றும் கூறப்படுவதைத் தவிரப் பெரும்பாலும் சோழமன்னர்கள் சமயப்பொறை யுடையவர்களாகவே வாழ்ந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. பல வைணவக்கோயில்கள் சோழர்களால் கட்டப்பட்டன; சமணரும் பாராட்டப்பெற்றனர். வீரசோழியம் என்னும் இலக்கணநூலை எழுதி, வீரராசேந்திரனால் பாராட்டப்பெற்ற புத்தமித்திரனார் ஒரு பௌத்தர் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. இராசராசன், பர்மா அரசருக்கும், ஸ்ரீ விசய அரசருக்கும் நாகப்பட்டினத்தில் பௌத்த 'விகாரத்தைக்' கட்டிக்கொள்ள உரிமை கொடுத்ததோடு, ஆனைமங்கலம் என்ற ஊரினையும் அதற்கு இறையிலியாகக் கொடுத்தான். இதனை அவன் மகன் இராசேந்திரனும் உறுதி செய்தான். சோழர் கல்வெட்டுக்களினால் புத்தர்களும், சமணர்களும், வைணவர்களும் சைவர்களைப் போன்று சிறந்த நிலையில் வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது.

5. கம்பன் கண்ட கனவு

சோழப் பேரரசின் இறுதிக் காலத்தின் தொடக்கத்தில் வாழ்ந்தவன் கம்பன். மன்னர் மன்னர்கள் சிறந்து விளங்கிய காலத்தை அடுத்துக் 'கவிச்சக்கரவர்த்தி' கம்பன் வாழ்ந்தான். நாட்டில் ஒரு பக்கம் இயற்கை வளம் கொழிப்பதையும், இன்னொரு பக்கம் வாணிகத்தால் செல்வம் செழிப்பதையும் கண்டான். நாட்டின் நடுவே சோழ வேந்தர்களின் உள்ளம் போன்று உயர்ந்து ஓங்கிய கோயில்களைக் கண்டான். ஒரு பக்கம் போர் முரசம் முழங்குவதையும், இன்னொரு பக்கம் கொடைமுரசம் முழங்குவதையும் கேட்டான்; மகிழ்ச்சியுற்றான். அவன் சிந்தனை சுழன்றது; பல எண்ணங்கள் எழுந்தன; உள்ளத்தே புயல் வீசத் தொடங்கியது. நாட்டின் உண்மை நிலையை ஆராயத்தொடங்கினான். அன்றைய தமிழகத்திலே நான்கு பெரும்குறைகள் இருப்பதை உணர்ந்தான். போரினால் உண்டாகும் கொடுமையை நினைத்தான்; வறுமையினால் மக்கள் வாடும் கொடுமையை மனக்கண்ணால் கண்டான். செல்வச் செழிப்பினால் சீர்கெட்டழியும் செல்வர்கள் நிலையை நினைத்து வருந்தினான். அறியாமைப் பேய் நாட்டில் தலைவிரித்து ஆடுவதை எண்ணி எண்ணி உள்ளம் உருகினான்.

இந்நான்கு குறைபாடுகளும் அற்ற நல்லதொரு சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் விளங்கினால், தமிழகம் எத்துணைப் பொலிவுடன் திகழும் என்பதைப் பன்முறை கற்பனை செய்து பார்த்தான். அவனுடைய உள்ளம் கலையுள்ளமாக இருந்தமையால் தமிழகத்தில் உள்ள குறைகள் உலகிலேயே இல்லாமல் இருந்தால், உலகம் எவ்வாறு சிறப்புற்று விளங்கும் என்று கருதியது. போரின் கொடுமை, வறுமை, அறியாமை ஆகிய தீமைகளற்ற புதியதொரு உலகினைக் காண விரும்பினான் கம்பன். அவன் உள்ளத்தே கருக்கொண்ட இக்கனவினைத் தான் படைத்த இராம காதையில் அயோத்திமா நகர மக்கள் வாழ்க்கையில் வைத்துக் காட்டிச் சென்றான். தான் காணவிரும்பிய நல்லதொரு நாட்டை - உலகைத் - தனது காப்பியத்தில் நம்மைக் காணுமாறு செய்துள்ளான்.

கம்பன் கண்ட அந்த இலட்சிய உலகில் "வறுமை இல்லாதபடியால், 'வள்ளல்கள் இருக்கிறார்களா? இல்லையா?' என்பதைக் கண்டுகொள்ள இயலவில்லை; எதிர்த்துப் போர் செய்யும் பகைவர் எவரும் இல்லாததால், அவ்வுலக 'மக்களுக்கு வலிமை உண்டா? இல்லையா?' என்று தெளிவாக அறிவதற்கு வாய்ப்பும் இல்லை. பொய்பேசுவோர் இல்லாத காரணத்தினால் அங்கு உண்மை என்று ஒன்று உண்டா என்று ஐயுறுமாறாகிவிட்டது. எல்லோரும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக இருப்பதனால் அவ்வுலகில் பேரறிஞர் என்று எவரையும் பாராட்ட இடமில்லை."

"வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை, ஓர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்;
ஒண்மை இல்லை, பல் கேள்வி ஓங்கலால்." – பாலகாண்டம் – 84.

கம்பன் கண்ட இலட்சிய உலகில் இல்லாருமில்லை (Have nots); உடையாரும் (Haves) இல்லை. 'எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதானப்' பொதுவுடைமைப் பண்பு திகழும் புத்துலகமாகக் காட்சி வழங்குகிறது. மேலும் அப்பொதுவுடைமைப் பண்பு உலகில் நிலைபெற வேண்டுமானால் மக்கள் அறியாமையால் அல்லலுறாது கல்வியறிவில் சிறந்து விளங்கவேண்டும் என்பதையும் கம்பன் கருதியுள்ளான்.

கம்பன் கண்ட புத்துலகில் "கல்வி கற்காதவர்கள் பிறர் ஒருவரும் இலாமையால், கல்வியில் மிகவும் வன்மையுடைய அறிஞர்களும் இல்லை; கல்வி அறிவில்லாதத் தற்குறிகளும் இல்லை; எல்லாரும் எல்லா வகையான பெறுதற்கரிய பெரிய செல்வங்களையும் அடைந்திருப்பதால் அங்கு வறியரும் இல்லை; செல்வரும் இல்லை"

"கல்லாது நிற்பார் பிறர்இன்மையின்
கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர்அல்
லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாச் செல்வமும்
எய்த லாலே
இல்லாரும் இல்லை; உடையார்களும்
இல்லை மாதோ" – பாலகாண்டம் – 166.

கம்பன் கண்ட இக்கனவினை - இலட்சிய உலகினையே இவ்விருபதாம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக் கவிஞர்களும் காண விழைகின்றனர். 'புதியதோர் உலகு செய்வோம், இப்போரிடும் உலகினை வேரொடு சாய்ப்போம்' என்று பரணி பாடுகின்றனர். 'எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இவ்வையம்; கல்லாரைக் காணுங்கால் கல்விநல்காக் கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்!' என்ற புத்துலகைக் காணத் துடிக்கின்றனர்.

எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு கம்பன் காண விரும்பிய 'புதியதோர் உலகை', இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு பிளேட்டோ என்ற உலகப்பேரறிஞன் 'இலட்சிய நாடாக' *(Ideal State)*க் கற்பித்துச் சென்றான். நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்த சர் தாமஸ்மூர் என்பான் 'கற்பனை உலகம்' *(Utopia)* என்னும் பெருங்கதையாக உலகிற்கு அளித்தான். இதனால் கம்பன் கண்ட கனவினைப் போன்று, பிறநாட்டு நல்லறிஞர்களின் கருத்திலும் "புது உலகம்" பூத்துள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும்.

கம்பன் கண்ட இக்கனவு நினைவாகும் நாள் இவ்வுலகிற்கு ஒரு பொன் நாளாகும். அந்நாள் எந்நாளோ?

III. அருள்

1. அடிமை விலங்கு

பாண்டியரின் எழுச்சி

சோழப் பேரரசின் வீழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்ட பாண்டியர், சிறந்ததொரு பேரரசினை நிறுவ முயன்றனர். சோழர்காலத்தில் தமிழ் மக்களிடையே எழுந்த புத்துணர்ச்சி இன்னும் மறையவில்லை. சுந்தரபாண்டியன் என்னும் அரசன் பாண்டியர் புகழை நிலைநாட்ட விரும்பினான். சோழப்பேரரசர்களோடு போர்புரிந்து அவர்களைத் தோற்கடித்தான். நடுநாட்டை ஆண்ட கோப்பெருஞ்சிங்கன் என்னும் சிற்றரசனை அடிபணியச் செய்தான். காஞ்சியை ஆண்ட கண்ட கோபாலனும் பாண்டியருக்குத் தோற்றான். தொண்டை நாடு பாண்டியர் கைக்கு வந்தது. சுந்தரபாண்டியன் தெலுங்கு அரசர்களையும் வென்று நெல்லூர் வரையில் தன் ஆட்சியைப் பரப்பினான். பிறகு அவனுடைய கருத்து இலங்கையின் மீது சென்றது. இலங்கையின் மீது படையெடுத்தான்; வடக்கே திரிகோணமலையில் தன் கயற்கொடியைப் பறக்கவிட்டான்; அம்மலையில் கயற்கொடியைப் பொறித்துப் பெரும் வெற்றியோடு நாடு திரும்பினான்.

இவனுக்குப் பிறகு அரசு கட்டில் ஏறிய மூன்றாம் குலசேகரன் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் நாட்டை அமைதியாக ஆண்டு, பெயரும் புகழும் பெற்றுச் சிறந்து விளங்கினான். இவன் காலத்திலேதான் உலகினைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்ட மார்க்கோபோலோ எனும் வெனிஸ் நகரத்தான் தமிழகத்தைச் சிறந்த முறையில் படம்பிடித்துக் காட்டும் குறிப்புக்கள் பலவற்றை எழுதியுள்ளான். தமிழ்மக்கள் கள்குடிப்போரையும், புலால் உண்ணுவோரையும் பாராட்டுவதில்லை என்று தனது 'உலக அனுபவத்தில்' குறிப்பிட்டுள்ளான். தமிழ் மன்னர்கள் குதிரைகளை ஆண்டுதோறும் ஆயிரக்கணக்காக வாங்கி, அவற்றிற்குச் சரியாக உணவு கொடுத்து வளர்க்கத் தெரியாமல் நூற்றுக்கணக்காக சாகடித்த கதையினையும் எழுதியுள்ளான். தமிழகத்தில் முத்துக்குளிக்கும் முறைகளையும் விளக்கமாக வரைந்துள்ளான்.

மூன்றாம் குலசேகரன் காலத்தில் தமிழகத்தின் வெளிநாட்டு வாணிகம் செழித்தோங்கியது. கிழக்காசியத் தீவுகளுக்கும் சீனாவிற்கும் போய் அங்கிருந்து வரும் கப்பல்களும், மேலைநாடுகளுக்குப் போய் வரும் கப்பல்களும் அவ்வந்நாட்டுப் பொருள்களைக் கொண்டு வந்து பாண்டியரின் தலைசிறந்த துறைமுகமான காயற்பட்டினத்தில் குவித்தன என்று 'வாசப்' என்ற அந்நாளைய வரலாற்றுக் குறிப்புரைகாரர் கூறுகின்றார்.

இலங்கையில் இக்காலத்தில் குழப்பம் உண்டாயிற்று. பாண்டியன் தன் படைகளை அனுப்பி, கலகக்காரர்களை முறியடித்து மீண்டும் தன்னாட்சியை நிலைநிறுத்தினான். தமிழகத்தில் பஞ்சமும் பட்டினியும் மக்களை வாட்டின. சிற்சில சமயங்களில் கலகமும் உண்டாயின. பாண்டியன் படைத்தலைவனாக இலங்கையின் வடபகுதியை ஆண்ட ஆரிய அரசன் தென்பகுதியை ஆண்ட புவனேக பாகுவின்மீது படையெடுத்துச் சென்றான். போரிலே பாண்டியரின் படைத்தலைவன் வென்றான். புனிதமானதாக வைக்கப்பெற்றிருந்த புத்தர் பெருமானின் 'பல்லினைப்' பாண்டிநாட்டிற்கு ஆரிய அரசன் எடுத்து வந்தான். இதனால் இலங்கை மக்கள் பெரும் வருத்தமுற்றனர். பாராக்கிரமபாகு என்ற இலங்கை இளவரசன் பாண்டியனிடம் நிலையாகக் கப்பம் கட்டுவதாக உறுதி கூறிய பின் அவனிடம் இலங்கை அரசையும், புத்தரின் பல்லையும் பாண்டியன் ஒப்படைத்தான். இவ்வாறு குலசேகரன் காலத்தில் பாண்டியப்பேரரசு வீறுடன் விளங்கியது.

வீழ்ச்சியின் வித்து:

அவன் காலத்தை ஒட்டிப் பாண்டியப் பேரரசு வீழ்ச்சியுறத் தொடங்கியதைக் காணுகிறோம். பாண்டிய மன்னரில் ஒருவன் காதலியை அவன் அண்ணன் கொண்டுபோய்விட்டான். அதனைப் பொறுத்துக்கொள்ள இயலாதத் தம்பி, கொதித்து எழுந்தபோதெல்லாம் அவர்களுடைய தாய் அவர்கள் போரிடுவார்களேயானால், தான் தற்கொலை செய்துகொள்வதாக அச்சுறுத்தியதையும், அதற்கஞ்சி தம்பி அடங்கி இருந்ததனையும் மார்க்கோபோலோ சுட்டிக்காட்டியுள்ளான். குலசேகரன் ஒரு சிறுசெயலால் பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்கு வித்திட்டான். அவனுக்குத் தன் பட்டத்தரசியிடம் பிறந்த சுந்தரபாண்டியன் இருக்க, தன்னுடைய வைப்பாட்டியிடம் பிறந்தவர்களுள் மூத்த

மகனான வீரபாண்டியனையே அரசனாக்க விரும்பினான். இதனை அறிந்த பட்டத்திற்குரிய இளவரசனாகிய சுந்தரபாண்டியன் தகப்பனைக் கொன்றான். இவ்வாறு நாட்டிலே காமமும் கொலையும் கூத்தாடின. பேரன்பு கொண்டிருந்த குலசேகரனைக் கொன்ற சுந்தரபாண்டியன் மீது நாட்டு மக்கள் சீறி எழுந்தனர். போரின் இறுதியில் சுந்தரபாண்டியன் தோற்றோடினான். தோல்வியுற்ற அவன் மனம் பொறாமையால் புழுங்கியது.

மாலிக்காபூரின் படையெடுப்பு:

வடநாட்டில் முகமதியர் டில்லியைத் தலைநகராகக் கொண்டு நன்கு ஆளத்தொடங்கிய காலம் இது. அலாவுதீன் கில்ஜி என்ற முகமதிய அரசன் தன்னாட்சியைத் தென்னாட்டில் பரப்பத் திட்டமிட்டான். தன் படைத் தலைவன் மாலிக்காபூரைத் தென்னாட்டிற்குப் பெரும் படையுடன் அனுப்பினான். மாலிக்காபூர் தக்காணத்தைத் தாண்டி தமிழகத்தில் நுழையத் தொடங்கினான். தமிழ்நாட்டின் வடக்கே போசளர் ஆண்டு வந்தனர். மாற்றாரின் படையைத் தமிழகத்தின் எல்லையிலேயே தடுத்து நிறுத்த, வீரபாண்டியன் பாண்டிய நாட்டுப் பெரும் படையை அனுப்பினான். இதைத் தக்க வாய்ப்பாகப் பொறாமை கொண்டிருந்த சுந்தரபாண்டியன் பயன்படுத்திக் கொண்டான். பாண்டியரின் பெரும்படையைச் சந்திக்காமல் பாண்டிய நாட்டிற்குள் நுழைவதற்குரிய உளவினை மாலிக்காபூருக்குத் தெரிவித்தான். முதன்முதலாக முஸ்லீம்கள் படை தமிழக மண்ணில் வெற்றியோடு புகுந்தது. மாலிக்காபூர் மதுரையினுள் நுழைந்தான். எதிர்பாரா வகையில் உண்டான அதிர்ச்சியால் வீரபாண்டியன் பின்வாங்கினான். மதுரைக்குத் தெற்கே இருந்த பாளையப்பட்டுக்களை ஒன்று சேர்த்து, சில மாதங்களில் மதுரையைத் தாக்கினான் வீரபாண்டியன். அந்நிலையில் மாலிக்காபூர் தான் கொள்ளையடித்த பொருள்களை எல்லாம் எடுத்துக்கொண்டு வடநாட்டிற்குத் திரும்பினான். நாடு குழப்பத்தால் சீர் அழிந்தது. பழிவாங்க வேண்டும் என்ற சுந்தரபாண்டியனின் தன்னலமிக்க இழிசெயலால் மாற்றானுக்குத் தாய்நாட்டைக் காட்டிக்கொடுத்தான். அதன் பயனாக நாடே உரிமை இழந்தது.

அடிமை விலங்கு:

ஊர் இரண்டுபட்டுக் குழப்பமடைந்த காலத்தில் சேரவரசன் இரவிவர்மன் குலசேகரன் அதுதான் நல்ல சமயமெனப்

பாண்டியர்களைத் தாக்கினான். வீரபாண்டியனையும், சுந்தரபாண்டியனையும் தனித்தனியே தோற்கடித்துக் காஞ்சிமாநகரில் பட்டம் கட்டிக்கொண்டான். இதனை அடுத்து மதுரையை ஆண்ட தன்னலத்தின் பிண்டமான சுந்தரபாண்டியன் இறந்தான். வீரபாண்டியன் நாட்டைச் செம்மைப்படுத்த அரும்பாடுபட்டான். இந்நிலையில் கி.பி.1319ல் குஸ்ரூகான் எனும் முகமதிய அரசன் தென்னாட்டைக் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு படையெடுத்து வந்தான். தமிழகத்தின் உயிர்நாடியாக - சமுதாய நிலையங்களாக - விளங்கிய கோயில்கள் பல சிதைக்கப்பெற்றன. டில்லியில் 1330ல் அரசு கட்டிலேறிய மகமதுபின் துக்லக்கு என்ற அரசன் தென்னாட்டில் தன் ஆட்சியைப் பரப்ப நினைத்தான். ஜலாலுதீன் அஷன்ஷா என்பவனைப் பெரும் படையுடன் தென்னாட்டின்மீது ஏவினான். அவன் பெரும் வெற்றியோடு மதுரை வந்தடைந்தான். மதுரையில் தன் ஆட்சியை நிறுவினான். தன்னை மதுரையின் சுல்தானென்று அறிவித்துக் கொண்டான்.

இவ்வாறு, தமிழகம் உரிமையோடு மாற்றாரின் ஆதிக்கத்திற்குட்படாது விளங்கிய காலம் கி.பி.பதினான்காம் நூற்றாண்டோடு முடிவடைந்துவிட்டது. தமிழர்கள் உரிமையோடு ஆண்டகாலம் 'பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய்ப்' போய்விட்டது. இந்நிலையில் முஸ்லீம் ஆட்சியைத் தென்னாட்டிலிருந்து விரட்ட இந்துக்கள் ஒன்றுபட்டு ஓர் அரசினை தக்கணத்தில் நிறுவினர். அவ்வரசே விசயநகரப் பேரரசாகச் சிறப்புற்றது. அது மதுரைச்சுல்தான்களை விரட்டியடித்தது. அன்று முதல் விசயநகரப் பேரரசின் ஒரு பகுதியாகத் தமிழகம் விளங்கத் தொடங்கியது. அக்காலத்திலும் தமிழகத்திலிருந்த பல தலைவர்கள் ஒருவரோடு ஒருவர் தீராப் பகைகொண்டு நாட்டினைக் காட்டிக்கொடுத்தனர்.

தலைக்கோட்டைப் போருக்குப் (கி.பி.1565) பிறகு விசயநகரப் பேரரசு வீழ்ச்சியுற்றது. மதுரையை ஆண்ட விசயநகரத் தளபதிகள் தங்கள் உரிமையை நிலைநாட்டி நாயக்க மன்னர்களாக மாண்புற்றனர். தஞ்சையும் செஞ்சியும் பீஜபூர் சுல்தான்களின் ஆட்சிக்குட்பட்டன. சிறிது காலத்திற்கெல்லாம் சுல்தான்கள் ஆட்சி மராட்டிய மன்னர்களால் தமிழகத்தில் ஒரு முடிவிற்கு வந்தன. ஆயினும் கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டில் மீண்டும் முஸ்லீம்கள் ஆட்சிக்குட்பட்டுத் தமிழ்நாடு அல்லலுற்றது.

இந்நிலையில் வாணிகம் செய்யவந்த ஐரோப்பியர்களான பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் தமிழகத்தினை ஆண்ட சந்தாசாகிபு முகம்மதலி போன்றவர்களைத் தங்கள் கைப்பாவைகளாக்கி, தமிழகத்தில் அரசியல் சொக்கட்டான் ஆடத் தொடங்கினர். ஆர்க்காட்டுப் போருக்குப் பிறகு தமிழகம் முழுவதிலும் மெல்ல மெல்ல ஆங்கிலேயர் ஆட்சி பரவியது. மூவாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த ஆங்கிலேயரின் அடிமைகளாகத் தமிழர் மாறினர். தங்களிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தினால் அயலானுக்கு நாட்டை அடகுவைத்து உரிமை இழந்தனர் தமிழ்மக்கள். அசோகனுக்கு அடங்காது உலகெலாம் புகழ்பெற்ற தமிழ் உரிமைத் தமிழரசு - காரவேலன் கண்டு அஞ்சிய தமிழ் அரசு - சமுத்திர குப்தனும் கால் எடுத்து வைக்காத தமிழரசு - இவ்வாறு உரிமை இழந்து மாற்றாரின் அடிமையாயிற்று. அன்று பூட்டப்பெற்ற அடிமை விலங்கினைத் தகர்த்தெறிய இரண்டு நூற்றாண்டுகளாயின.

தமிழகத்தின் வீழ்ச்சி:

'தமிழகத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன?' என்பதை இந்நிலையில் ஆராய்ந்தறிய வேண்டியது நமது கடமையாகும். நினைவுக்கெட்டாத தொல்பழங்கால முதல் மூவேந்தரது ஆட்சியால் தமிழகம் சீரும் சிறப்புமுற்று விளங்கியது அல்லவா? அத்தகைய நாடு ஏன் அயலானுக்கு அடிமையாயிற்று? என்பது நம்மைச் சிந்திக்கத் தூண்டுவதாகும்.

தமிழகம் தொன்றுதொட்டுக் கூட்டு வாழ்க்கையைப் (Corporate Life) போற்றி வந்தது. சோழப் பேரரசர் காலத்தில் கூட்டு வாழ்க்கை முறை கிராமங்களில் ஓரளவிற்குச் சிறந்து விளங்கியது. ஆயினும், அக்கூட்டு வாழ்க்கை சாதியின் அடிப்படையில் செயலாற்றத் தொடங்கியதையும் காணுகிறோம். அதன் பயனாக மக்களிடையே ஒற்றுமை குலைந்தது. நாட்டில் இடங்கை, வலங்கை முதலிய 'பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகையும்' தோன்றியது. மேலும் நகரங்களில் கூட்டு வாழ்க்கைக்கு இருந்த மதிப்பும், செல்வாக்கும் அழிந்தொழிந்தது; தனி வாழ்க்கையே சிறந்ததென்று போற்றப்பட்டது. தனி வாழ்க்கையில் 'சாதிப்' பாகுபாடு சிறப்பிடம் பெற்றது. சமுதாயத்தின் கட்டுக்கோப்பிற்கு இடையூறாக முளைத்து, இன்னல் விளைவிக்கும் களைகளைக் களைந்தெறிய மன்னாதி மன்னர்களும்

முயலாமல் போனது வருந்தத் தக்கதாகும். அதற்கு மாறாக நால்வகைச் சாதியையும் நாட்டிலே போற்றி வளர்த்து நாலாயிரம் உட்பிரிவுகள் உண்டாகுமாறு செய்தனர்.

சாதிப்பேய் நாடெங்கும் தலைவிரித்தாடியது. 'ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்' என்னும் விழுமிய நோக்கத்தோடு வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தில், கி.பி.மூன்றாம் நூற்றாண்டு அளவில் கலக்கப்பட்ட சாதிப் பாகுபாடாகிய நஞ்சு, அதன் அழிவு வேலையை ஆயிரம் ஆண்டுகளுக்குள் செய்து முடித்தது என்று சொல்லலாம். சங்க காலத்திலே காணப்படாத தீண்டாமை, சேக்கிழார் காலத்திலே தமிழ் மண்ணில் தழைத்து வளர்ந்ததை அவரது காப்பியமே சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய அவலநிலை நாட்டிலே உருவாகி வருவதைக் கண்டு அறிஞர்கள் அஞ்சினர். அவர்களுடைய 'சமரச' முயற்சி விழலுக்கு இரைத்த நீராயிற்று.

சமயத்திலே பல உட்பிரிவுகள் தன்னலக்காரர்களின் வளமான வாழ்க்கைக்காகத் தோற்றுவிக்கப்பட்டன. சமய உண்மைகள் மறைக்கப்பட்டுச், சமயச் சடங்குகள் பெருகின. இதனால், இறைவனை அடைவதற்கு வழிகாட்டும் அன்பு நெறியாகத் தோன்றிய சமயம், சாதிச் சண்டைகளிலே, கோத்திரக் குப்பைகளிலே கருத்தைச் செலுத்தி மக்கள் மனத்தைக் குழப்பியது; தேவையற்ற கண்மூடிப் பழக்க வழக்கங்களைப் போற்றி வளர்த்தது; மக்களைச் செம்மறியாட்டு மந்தைகளாக மாறும் வண்ணம் செய்தது.

மக்களினத்தின் மாண்புமிக்க ஒரு பகுதியினராகிய பெண்களைச் சாதியின் பேரால், சமயத்தின் பேரால், கண்மூடிப் பழக்க வழக்கங்களின் பேரால் அடிமைகளாக்கி வைத்தமை தமிழகத்தின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியது எனலாம். உடலின் உறுப்புக்கள் அனைத்தும் ஒரே வகையில் வளர்ச்சியுற்றால்தான், அவ்வுடல் வளமும் நலமும் பெற்று விளங்கமுடியும். அல்லாமல் ஓர் உறுப்பு சூம்பிச் சிறுத்தும், மற்ற உறுப்புக்கள் நன்கு பெருத்தும் வருமானால், அவ்வுடலிற்கு உண்டாகக்கூடிய துன்பத்தை முன்கூட்டியே உய்த்துணரலாம். அதைப்போன்று சமுதாயத்தின் ஈருறுப்புக்களாகிய ஆண், பெண் ஆகிய இரு பாலாரிடையே உண்டான ஏற்றத்தாழ்வு, நாளடைவில் பெண்களை அடிமைகளாக்கியது. அச்செயல் தமிழ்ச்சமுதாயத்தின் நல்வாழ்விற்கு ஊறு விளைத்தது. அடிமை மனப்பான்மையால் பெண்ணினம் சீர் குலைந்ததோடு, சாதிவெறி அவர்கள் வாழ்வைப் பாழாக்கியது.

அதனால் 'சிங்கக்குருளைகளைச் செந்தமிழ்த் தொண்டர்களை' வையகம் போற்றுமாறு பெற்றுத்தர தாய்மார்களால் முடியவில்லை.

இவற்யெல்லாம்விடத் தமிழரிடை ஒரு மாபெரும் குறைபாடு காணப்பட்டது. தன்னலமும் தன்மானமும் தமிழருடைய வாழ்வை அரித்துத் தின்றன. உண்மையான தன்மானம் என்று அதைச் சொல்லுவதற்கில்லை. 'போலித் தன்மானம்' என்றே அதைச் சொல்லவேண்டும். ஏனெனில், உண்மையானத் தன்மானமாக இருந்திருந்தால், நாட்டின் நலத்தைக் காக்க வேண்டிய நேரத்தில், தங்களுடைய தனிப்பட்ட தன்மானத்தைத் தமிழ் வேந்தர்கள் விட்டுக்கொடுத்திருப்பர். இடைக்காலத் தமிழ் வேந்தர்களிடைத் தாங்கள் அனைவரும் தமிழ்வேந்தர்கள் என்னும் இனப்பற்றும், மொழிப்பற்றும் இல்லாமல் போய்விட்டது. ஒரு குடியில் பிறந்த அண்ணன் தம்பி ஆகிய இருவரிடையே உண்டான பதவிப்போராட்டம் மாற்றானுக்குத் தம் தாயகத்தைக் காட்டிக் கொடுக்குமாறு செய்ததை முன்பு கண்டோம். இவ்வாறு தன்னலமும், போலித்தன்மானமும் தமிழருடைய ஒற்றுமையைக் குலைத்தன. இந்நிலையில் சமயத்தினால் பிணைப்புண்ட ஆற்றல்மிக்க இசுலாமியர்கள் தமிழகத்தின் மீது படையெடுத்தனர். எதிர்பாராத அப்படையெடுப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏற்ற ஆற்றலும், உள்ள உரமும் தமிழ்வேந்தர்களிடை இல்லாமற் போனதற்குக் காரணம் அவர்களிடையே ஒற்றுமை இன்மையேயாகும்.

தமிழகத்தைப் போன்று பெருமையடைவதற்குரிய சிறந்த பண்பாடுடைய நாடு இன்றைய உலகில் இல்லை எனலாம். ஆயினும், பெருமிதம் வாய்ந்த மக்களினங்களைக் கொண்ட நாடுகளெல்லாம், அதே சமயத்தில் தங்களுடைய குறைபாடுகளை நன்குணர்ந்தனவாக இருந்ததோடு, அவற்றை அகற்றுவதிலே கருத்துடன் இருந்தன. இத்தகைய முயற்சி தேவைப்படுகின்ற நாடுகளில் அதன் மேன்மையும் சிறப்புந்தொடர்ந்து நெடுங்காலம் நிலைத்திருப்பது அரிது. தமிழகத்திலும் இத்தகைய குறைபாடுகள் இருந்து வந்தன என்பதை நாம் நினைவுகூர்தல் வேண்டும். அன்றைய தமிழர்கள் அக்குறைபாடுகளைப் போக்க முயலாமையால் தமிழகம் வீழ்ச்சியுற்றது. இனியாகிலும், அக்குறைபாடுகளைப் போக்க நாம் முயல வேண்டும்.

2. உலைக்கூடம்

தமிழர் நாகரிகத்தின் வரலாறு ஒரு தொடர்கதையாகும். தமிழகம் முரண்பட்ட பல கொள்கைகளையும், கோட்பாடுகளையும் ஒன்று சேர்த்துத் தன்வயப்படுத்திச் சிறப்புடைய நாகரிக நறுமலரை உலகிற்கு அளித்தது. இம்முறை இசுலாம் சமயத்தின் தாக்குதலையும், கிறித்துவ சமயத்தின் நெருக்குதலையும் கண்டு அஞ்சாது, என்றும்போல் தனது பண்பாட்டிற்குகந்த வண்ணம் அவற்றை மாற்றியும் திருத்தியும் இயன்றவரை தன்வயப்படுத்தத் தொடங்கியது. அவற்றிற்கு இடையே உண்டான மோதுதல் ஓரளவிற்குத் தமிழரை விழிப்புறச் செய்தது. "வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்" என்ற போலிச் சமயக் கொள்கை தமிழருடைய உள்ளங்களை அரித்துக் கொண்டிருந்த காலத்தில், இத் தாக்குதல் அவர்கள் உள்ளத்தை ஒரு கலக்கு கலக்கியது.

இவ்வுலக வாழ்க்கையைப் பற்றித் தமிழர்களைச் சிந்திக்கத் தூண்டியது. 'தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்?' என்று ஏங்கிய நிலை மறைந்து, 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்று மக்கட் சமுதாயம் அனைத்தும் கடைத்தேறுவதற்குரிய வழிவகைகளை நாடுமாறு செய்தது. இசுலாமியர்களின் 'மனித சகோதரத்துவ' மனப்பான்மை (Brother hood of Man) யும், கிறித்தவர்களின் அன்பு நெறியும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உலகச் சகோதரத்துவத்தை மறந்து போயிருந்த தமிழர்களுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டியது.

ஐரோப்பியர் வருகையால் தமிழகத்தின் 'சிற்றூர்' நாகரிகம் பையப் பைய நகர நாகரிகமாக மாறத் தொடங்கியது. சாதிப்பேயின் ஆற்றல் ஒடுங்கத் தொடங்கியது. 'கண்மூடிப் பழக்க வழக்கங்கள் எல்லாம் மண்மூடிப் போகவேண்டும்' என்று சான்றோர்கள்

மக்களுக்கு எடுத்துரைக்கும் நிலை உண்டாயிற்று. தனி மனிதனின் குடும்ப வாழ்விற்கு இருந்து வந்த செல்வாக்குக் குறையலாயிற்று; சமுதாய வாழ்வு வளம்பெறத் தொடங்கியது. சிதறுண்டு கிடந்த தமிழகத்தின் பல பகுதிகள் அறிவியல் கண்டுபிடிப்புக்களால் ஒன்றாக இணைக்கப்பட்டன. நிலவியல் அடிப்படையிலும், பண்பாட்டு அடிப்படையிலும் தமிழ்மொழி பேசும் மக்கள் அனைவரும் 'ஓரினம்' என்ற ஒற்றுமை உண்டாயிற்று. இவ்வாறு தமிழகத்தின் பழைய சமுதாய அமைப்பும், பழக்கவழக்கமும், பொருளியல் வாழ்வும், அரசியல் நெறியும் முற்றிலும் மாறிவிட்டன. ஆயினும் புதிதாகத் தமிழர் தம் உள்ளத்தைக் கவர்ந்த எண்ணங்களும், வாழ்க்கை முறைகளும், பழக்க வழக்கங்களும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்றவகையில் முழு வடிவம் பெறாது காலமெனும் உலைக்கூடத்தில் இன்னும் உருக்கப்படும் நிலையிலேயே உள்ளன. பழமைநெறி மீண்டும் புத்துயிர் பெற வொட்டாமல் அழிக்கப்பட்டுவிட்டது. ஆனால், புதுமைநெறி இன்னும் பூத்துக் குலுங்கவில்லை.

3. வாடிய பயிர்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் புதுமையை எதிர்த்துப் பழமை, இந்திய மண்ணில் 'வாழ்வதா வீழ்வதா?' என்பதை அறிவதற்குப் பெரும் போராட்டம் நடத்தியது. இறுதியில் புதுமை வென்றது; பழமை வீழ்ந்தது. வீழ்ச்சியுற்ற பழமை தமிழகத்தின் தொல்பழங்காலத் தமிழ்ப் பண்பாட்டில் வேரூன்றித் தழைத்து விளங்கிய பழமையன்று. இடைக்காலத்தில் தமிழர் வாழ்வில் புகுந்து இன்னல் விளைத்த 'அயல்நெறி' யாகிய 'பழமை'தான் தோற்றது. பண்டைப் பண்பாட்டுச் சிறப்பு வாய்ந்த பழமை மீண்டும் புத்துயிர் பெற்றது. 'ஒன்று பொருந்தாது' என்று ஆராய்ச்சியால் - அறிவால் - அனுபவத்தால் - உணர்ந்து தெளிந்த தமிழ்மக்கள் அதை விட்டொழிக்க முயல்வது முன்னேற்றத்திற்கு அறிகுறியாகும் என்பதை உணர்ந்தனர்.

தமிழினத்தின் ஆக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த சங்ககாலப் பழமையின் மீது, புதியதொரு தமிழகத்தை அமைக்கத் தமிழர்கள் அரும்பாடுபடத் தொடங்கினர். அவர்களுள்ளே கடந்த நூற்றாண்டில் குறிப்பிடத்தக்கவர். பண்டைத் தமிழகச் சித்தர் மரபிலே வந்த இராமலிங்க அடிகளாவர். பழமைக்கும் புதுமைக்கும் சிறந்ததொரு இணைப்பினைச் சமயத்துறையிலும், சமுதாயத் துறையிலும் அமைத்துத் தந்த பெருமை அடிகளையே சாரும். சமய உண்மையின் மீது படிந்திருந்த மாசினைத் துடைத்து, காலத்திற்கு ஏற்ற கோலத்தில் - மக்களின் தேவைக்கு ஏற்றமுறையில் சமயத்தைத் திருத்தி அமைத்தார். சமுதாயத்தில் முளைத்திருந்த களைகளைக் களைந்தெறிய முயன்றார். இவ்வாறு அடிகள் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய சமுதாய சீர்திருத்தக் காரர்களுக்கு நண்பராய், வழிகாட்டியாய், மெய்யுணர்வு பெற்ற அறிஞராய் விளங்குகிறார்.

இராமலிங்க அடிகள் பண்டைக் கண்மூடிப் பழக்கவழக்கங்களைத் தேவையற்றவை என்று கருதினார். அவற்றை எல்லாம் குழிதோண்டிப் புதைத்தால்தான் மக்களினம் - சிறப்பாகத் தமிழினம் - சீரடைய முடியும் என்பதில் அசைக்க

முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். சாதிப்பூசல், சமயப்பூசல் ஒழிந்தால்தான் மனிதன் மனிதனாக வாழமுடியும் என்பதை உணர்ந்தார். மன்னுயிரைத் தன்னுயிர்போல் போற்றும் அருள்நெறி (சீவகாருணியம்) ஒன்றினால்தான் இவ்வையகம் தழைக்கும் என்ற முடிவிற்கு வந்தார். எனவே தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் 'அருள்நெறியின் ஆட்சி பரவ அரும்பாடுபட்டார். 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல்' கருதி, உள்ளத்தே ஒத்த உரிமையுடையவராய் வாழும் மக்கள் உள்ளத்தில் தான், தூய அறிவு வடிவாய் விளங்கும் இறைவன் களிநடம் புரிகின்றான் என்பதை அடிகள் மக்களுக்கு எடுத்துரைத்தார். அத்தகைய மக்களுக்குத் தொண்டு புரிவதே தூயநெறி, சிறந்தநெறி என்பதைப் பலவாறு விளக்கினார். மக்களை ஒருங்கு திரட்டிச் 'சமரசச் சன்மார்க்க' சங்கத்தை அமைத்தார். அச்சங்கத்தில் சேர்ந்து மக்களுக்குத் தொண்டுபுரிய 'சேரவாரும் செகத்தீரே!' என்று அன்போடு அழைத்தார்.

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலைச் சாதியெலாம் பிள்ளை விளையாட்டே!
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்துபார் என்றெனக்கு விளம்பிய சற்குருவே!"

என்று இறைவனே அவருடைய உறங்கிக் கிடந்த உள்ளத்தைத் தட்டியெழுப்பி, உண்மையை உணருமாறு செய்ததாக மக்கள் மன்றத்தில் எடுத்துரைத்து அவர்கள் மனத்தைத் திருத்தப் பெரிதும் முயன்றார்.

'சத்தாகிய கடவுள் யாண்டும் வீற்றிருத்தலால், எவ்வுயிர்க்கும் மனமொழி மெய்களால் தீங்கு நிகழ்த்தாது, தன்னுயிரைத் தான்பரிந்து ஓம்புமாறு போல், மன்னுயிரையும் ஓம்பி, அவ்வுயிர் நலன் கருதித் தொண்டு' செய்வதற்கு முனைந்து நின்றார்.

இந்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு உளம்நைந்து உருகினார். பெய்யவேண்டிய பருவத்தில் மழைபெய்யாததால், பயிர்கள் வாடி வதங்குவதைக் கண்ட இராமலிங்க அடிகள் உள்ளம் வாடியது. ஓரறிவு உயிர்கள் வாடுவதைக் கண்டு நைந்துருகும் அருள் உள்ளம் வாய்க்கப்பெற்றவராக இருந்தார். புல்பூண்டுகளின் துன்பத்தைக் கண்டு கனிந்துருகும் அடிகள் மக்களாய்ப் பிறந்த பலர் உண்ணும் உணவிற்கு வழியின்றி, பசியால் தங்கள் மானத்தை இழந்து பல

வீடுகளுக்குச் சென்று பிச்சையெடுத்தும் வயிறார உண்ணுவதற்கு உணவின்றி நாளும் அல்லலுறுவதைக் கண்டு உளம் பதைத்தார்; இவ்வாறு மக்கள் பலர் 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டுமா?' என்று உளம் கொதித்தார். நெடுங்காலமாக நோய்வாய்ப்பட்டு வருந்துகின்றவர்களை நேரில் கண்டபோதெல்லாம் துடியாகத் துடித்தார். மானத்தைக் காப்பாற்றி வறுமையால் நாளும் அல்லலுறும் ஆயிரக் கணக்கான மக்களைக் கண்டபோது அடிகள் உள்ளம் குமுறும் எரிமலையாயிற்று. அவர்கள் நிலையை நினைந்து நினைந்து வருந்தினார். அதனால் அவருடல் இளைத்தார்.

இறைவனின் படைப்பில் 'வாடிய பயிராக' வறுமையில் வாடும் மக்களைக் கண்ட அடிகளார், அதற்குரிய காரணத்தை ஒருவாறு உய்த்துணர்ந்தார். பொருளாதாரச் சீர்கேட்டைப் போக்குவதற்குரிய புதுவழியைக் காண இயலாத காரணத்தால், அருளுடையார் அனைவரும் சமரச சன்மார்க்கத்தைச் சார்ந்து மக்களுக்குத் தொண்டு செய்யுமாறு வேண்டினார். அவ்வாறு மக்களுக்குச் செய்யும் தொண்டே 'மகேசுவரனுக்கு' உகந்த தொண்டு என்பதைப் பல்லாற்றானும் எடுத்து விளக்கினார்.

> "மார்க்கமெலாம் ஒன்றாகும் மாநிலத்தீர்! வாய்மையிது!
> தூக்கமெலாம் நீக்கித் துணிந்துளத்தே – ஏக்கம் விட்டுச்
> சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின்! சத்தியநீர்
> நன்மார்க்கம் சேர்வீர் இந்நாள்!" – திருவருட்பா.7:81.

அடிகளாரின் அறைகூவல் வீண்போகவில்லை. தமிழினம் நெடுங்கால உறக்கத்திற்குப் பின்பு விழித்தெழுந்தது. அதன் பயனாகத் தமிழகம் மறுமலர்ச்சியுறத் தொடங்கியது. இவ்வாறு தமிழக 'மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாக'க் காரிருள் சூழ்ந்த தமிழ் வானிலே காட்சி தருகிறார் இராமலிங்க அடிகள். அவர் போற்றிய 'அருள்நெறி' இன்று உலகின் பல பகுதிகளில் போற்றப்படுவதைக் காணுகிறோம். ஐரோப்பிய நாட்டைச் சார்ந்த ஆல்பர்ட் சுவைட்சர் *(Albert Schweitzer)* என்னும் அறிஞர், இன்றைய உலக மக்களை உயிர்களிடத்து அன்பு காட்டுமாறு *(Reverense for life)* வேண்டுவதைக் காணுகிறோம். கடந்த நூற்றாண்டில் உறங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய இராமலிங்க அடிகள் காட்டிய நன்னெறியாகிய அருள்நெறி, இந்நூற்றாண்டில் உலக மக்களின் உள்ளத்தை ஈர்க்கும் வகையில் சிறப்புற்று விளங்குவது கருதத்தக்கது.

4. மனிதம்

வள்ளலார் காட்டிய வழியில் தமிழ்மக்கள் பலர் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே செல்லத் தொடங்கினர். அவ்வழியைக் கடைப்பிடித்து, வாழ்ந்து காட்டியவர்கள் சிலர். அவர்களுள் முதன்மையானவர் திரு.வி.கலியாணசுந்தரனார். தமிழகம் அன்போடு திரு.வி.க எனப்போற்றும் அப்பெருந்தகை, அண்மைக்காலம் வரை நம்மோடு வாழ்ந்தவராவர். அவர் சிறந்த தேசபக்தர். நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு பெருந்தொண்டாற்றிய பெரியார். திலகர் சிறை சென்றார் என்பதைக் கேட்டவுடன், வெள்ளைக்காரன் கம்பெனியில் வேலை செய்வதைவிட்டு விலகினார். 'தேசபக்தன்' எனும் செய்தித்தாளைத் தொடங்கி, நாட்டுப்பற்றைத் தமிழர்களுக்கு ஊட்டினார்; விடுதலை வேட்கையை உண்டாக்கினார். அவருடைய வாழ்க்கையில் தமிழகத்தின் (இருபதாம் நூற்றாண்டின்) வரலாறு இணைந்தும் இழைந்தும் காணப்படுகிறது.

அப்பெரியார் இராமலிங்க அடிகளின் கொள்கைகளையும், கருத்துக்களையும் பொன்னேபோல் போற்றியதோடு அமையாது, தமிழகம் வீழ்ச்சியுற்றதற்குரிய காரணங்களை ஆராய்ந்தார். தமிழகம் "இப்பொழுது எந்நிலையில் இருக்கிறது? அதைச் சொல்ல வேண்டுமா?... இயற்கைச் சன்மார்க்கத்தினின்றும் வழுவிச் செயற்கைத் துன்மார்க்கத்தில் வீழ்ந்து வருகிறது. இது கண்கூடு, இவ்வீழ்ச்சிக்கு அடிப்படையான காரணம் என்னை? மக்கள் அறியாமையால் அரசியலுக்கும், புரோகித்ததுக்கும் அடிமைப்பட்டு இரையாகி வருவதைச் சிறந்த காரணமாகக் குறிக்கலாம்"[1] என்ற முடிவிற்கு வந்தனர்.

'நம்நாட்டவர் பெண்ணுரிமை கடிந்த தீவினையும், பிறப்பால் சாதிவகுத்த தீவினையும், மக்களுள் தீண்டாமை கொண்ட தீவினையும் இப்பொழுது மூண்டெரிந்து நாட்டை அரிக்கின்றன; எரிக்கின்றன' என்பதைச் சுட்டிக்காட்டினார்.

---

1. சமரச தீபம்: முன்னுரை.

நாட்டு மக்கள் பல்வகைப் பிரிவுகளாகப் பிரிந்து போரிடும் காட்சியைக் கண்டு உளம் வருந்தினார். வாழ்க்கையில் உண்மையான இன்பத்தை நுகர வேண்டுமானால் மக்கள் வேற்றுமையிலே ஒற்றுமை காண முயலவேண்டும் என்பதை "உலகையும் உலகிலுள்ள பலபொருள்களையும் உற்று நோக்குழிப் பன்மைவழி ஒருமை நிலவலையே, அவை அறிவுறுத்தல் காணலாம்... வேற்றுமைகளிடையே ஒற்றுமை காணின் இன்பம் நுகரலாம். ஒற்றுமையுணர்வு வேறுபாடுகளால் போரையும் பிணக்கையும் உண்டுபண்ணாது; அவைகளினிடை அன்பும் ஆர்வமும் உண்டு பண்ணும். ஆதலால், வேற்றுமையில் ஒற்றுமை காணவே முயலல் வேண்டும்" என்று வற்புறுத்தினார்.

அறிவியலின் முன்னேற்றத்தால் உண்டான கண்டுபிடிப்புக்கள் மக்களின் புறவாழ்வினைச் செயற்கைச் சாக்கடையில் உழலுமாறு செய்துவிட்டது அதனால் மக்களுக்குண்டாகும் துன்பங்கள் அளவிட்டு உரைப்பதற்கு அரியதாகும். மக்கள் இழந்த 'இன்ப வாழ்வை'ப் பெறவேண்டும் என்றால், அவர்கள் மீண்டும் இயற்கையோடு இயைந்த (Return to Nature) வாழ்வினை நடத்தவேண்டும் என்பதை ஒல்லும் வகையெல்லாம் ஓயாது எடுத்துரைத்ததோடு அமையாது, அவர் அவ்வாறே வாழ்ந்து காட்டினார். 'வெறும் இயற்கை வாழ்வு என்றால் ஒழுங்குமுறை இல்லாததா என்று சிலர் கடவுவர்... வாழ்வு என்பது இரு திறத்தது. ஒன்று உடல் வாழ்வு; மற்றொன்று உயிர் வாழ்வு. உடல்வாழ்வு உலகியலைப் பற்றி நிற்பது; உயிர்வாழ்வு கடவுளைப் பற்றி நிற்பது. இவ்விரண்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. உயிர் வாழ்விற்கென்றே உடல் வாழ்வு ஏற்பட்டது. உடல் வாழ்வின்றி உயிர்வாழ்வு நலம்பெறல் அரிது. எனவே, கடவுள் நெறிக்கு உலகியல் நெறி இன்றியமையாதென்க! உலக வாழ்க்கையில் மக்கள் பற்றுடன் வாழ்வதே சிறப்புடைத்து' என்பதை இவ்வாறு திரு.வி.க.யாவரும் அறிந்து கடைப்பிடித்து ஒழுகும் வண்ணம் தெளிவுபடுத்தினார்.

'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பு' என்பதை நன்குணர்ந்த, திரு.வி.க. 'பெண் ஒரு பாதி; ஆண் மற்றொரு பாதி. இரண்டும் சேர்ந்த ஒன்றே முழுமனிதத்தன்மை. தாய்மைக்குரிய பெண்ணின் சிறுமை நாட்டின் சிறுமையாதல் இயல்பு. ஆதலால், பெண்ணலன் நாடவேண்டுவது நம்பெருங்கடமை' என்றார். பெண்ணினத்தைப்

'பெண்தெய்வம்' எனப் போற்றும் புதியதொரு நெறியினைத் தமிழகத்தில் தோற்றுவித்தார்.

தமிழன் நன்றாக வாழ்ந்தால் - வளமாக வாழ்ந்தால் - தமிழகம் சிறப்புற்று ஓங்கும் என்பது தமிழ் முனிவரின் உள்ளக்கிடக்கையாகும். தமிழன் இன்றுள்ள நிலையை எண்ணிப் பார்த்தார். அவன் முன்னேறுவதற்குரிய வழி என்ன என்பதை ஆராய்ந்தார்.

"எல்லா மனிதர்களிடத்திலும் இறைவன் குடிகொண்டுள்ளார் என்பது மிகச்சிறந்ததொரு உண்மையாகும். அவர்கள் இறைவனின் பலவகை வடிவங்களாகக் காட்சி வழங்குகின்றனர். அவர்களைவிடச் சிறந்ததொரு கடவுளை நாம் தேடி அலையவேண்டிதில்லை.

மனிதனை மனிதனாக்கும் சமயமே நமக்கு வேண்டற்பாலது. ஒவ்வொருவரும் யோகியாக முயல்கிறார். ஒவ்வொருவரும் யோகம் செய்ய எண்ணுகிறார். முடியுமா? முடியாது... இம்மடமைகள் எல்லாம் ஒழிய வேண்டும். அடுத்த ஐம்பதாண்டு காலத்திற்கு, நம்முடைய உள்ளத்தில் வேறு எந்தத் தெய்வங்களுக்கும் இடம்கொடுக்க வேண்டாம்.

வேண்டுவது என்னை? மனத்தூய்மை. முதலாவது நம்மைச் சுற்றிலுமுள்ள தெய்வங்களாகிய மக்களை உயிர்களை வழிபடுவோமாக. நாம் வழிபடவேண்டிய முதற்கடவுள் நம் சொந்த நாட்டவர்களேயாவர். நாம் செய்யவேண்டிய வழிபாடு இதுவே! மற்ற உயிர்களைப் போற்றித் தொண்டு செய்பவனே உண்மையில் இறைவனை வழிபடுபவனாவான்" என்னும் விவேகானந்தரின் பொன்மொழிகள் திரு.வி.க அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. அன்று முதல் அவர் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் விழுமிய நோக்கத்தோடு ஒல்லும் வகையெல்லாம் ஓயாது பணிபுரிந்தார்.

மக்களை வாட்டி வதைக்கும் வறுமைப் பிணியை ஒழிப்பதற்குரிய ஒரே வழி, ஒப்பற்ற வழி மார்க்கசீயத்தைப் பின்பற்றுவதேயாகும். அம்மார்க்கசீய நெறி அறநெறியின் அடிப்படையில் அமையவேண்டும் என்பது அவருடைய அவா. 'மார்க்கசீயத்தின் உயிர்நாடி பொருள்; காந்தியத்தின் உயிர்நாடி அருள். இரண்டும் சேர்ந்த ஒன்று, வருங்காலப் புது உலகத்தை அமைக்கவல்லது' என்பது அவருடைய நம்பிக்கை. அதற்காகத் தொழிலாளர்களோடு தொடர்புகொண்டார். இந்தியாவில்

முதன்முதலில் தொழிற்சங்கத்தைத் திரு.வி.க. அமைத்தார். அதன் மூலம், தொழிலாளர்களின் குறைகளை எடுத்துரைத்து முதலாளிகளின் மனத்தை மாற்ற முயன்றார்; அம்முயற்சியில் வெற்றியும் பெற்றார்.

இவ்வாறு திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் இந்நூற்றாண்டில் தமிழர்களுக்குச் சிறந்ததொரு தொண்டாற்றியுள்ளார். மேலும், எவ்வழியில் தமிழர்கள் வாழ முயன்றால், தாங்கள் இழந்த பண்டைச் - சிறப்பை - மீண்டும் பெறமுடியும் என்பதைப் பல நூல்களின் வாயிலாகத் தெளிவுபடுத்தியுள்ளார். 'அவ்வழி எவ்வழி?' என்ற ஐயம் எழுவது இயல்பு. அதுதான் அவர் காட்டிய வழி. 'மனிதனை மனிதனாகக் கருதிப் போற்றும்' மாண்புமிக்க வழி. இராமலிங்கர் தோற்றுவித்த 'சன்மார்க்க' நெறி. அதனை 'மனிதம்' என்ற பெயரால் சுட்டிக் காட்டியுள்ளார்.

'மனிதம்' என்றால் என்ன? 'மனிதம்' என்பது ஒரு நெறி; அந்நெறியைத் தோற்றுவித்தவர் ஒருவரல்லர். அது ஒரு குறிப்பிட்ட சமயத்தின் கோட்பாடும் அன்று. 'மனிதம்' என்பது மனிதப் பண்பினை அறிந்து போற்றுகின்ற ஒரு நெறி.' தன்னுயிர் மன்னுயிர்; மன்னுயிர் தன்னுயிர்' என்னும் உண்மையை உணர்த்துவது மனிதம். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பது' மனிதம். பிறருக்குத் தொண்டு செய்து, அவர்களின் துன்பத்தைத் துடைப்பது மனிதம். மனிதன் தன்னைச் சிறிதளவாவதுமறந்து, மற்றவர்களுக்காக வாழுமாறு தூண்டும் நெறி மனிதம். மனித இனத்தின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்ட தொண்டு நெறி 'மனிதமாகும்.' இதனை மேனாட்டார் 'யூமனிசம்' *(Humanism)* என்பர்.

மறுமலர்ச்சியுற்றிருக்கும் தமிழகம் மாண்புற்று விளங்கவேண்டுமானால் புதியதொரு சமுதாய அமைப்பினைக் காணவேண்டுமானால், தமிழர்கள் தமிழர்களாக தனிச்சிறப்போடு திகழவேண்டுமானால், 'மனிதத்'தின் உட்பொருளை உணர்ந்து, வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் அவ்வாறு ஒழுகினால் பொதுமை அறம்பூக்கும்; புதுமை இன்பம் பிலிற்றும்; தாழ்ந்த தமிழகம் மீண்டும் உலகிற்கு வழிகாட்டக் கூடிய உயர்நிலையை அடையும்.

நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு

1) தோற்றம் – மறைவு	*20.11.1931 – 05.05.1989*
2) பிறந்த ஊர்	*கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்*
3) கல்வி *பள்ளிக்கல்வி*	*சிந்தாதரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி (1943–1948), சென்னை.*
4) புகுமுக வகுப்பு	*விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை 1949 – 1951*
5) இளங்கலை (ஹானர்ஸ்) தமிழ் பின்னர் முதுகலை தமிழ்	*பச்சையப்பன் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகம், முதல் வகுப்பு, முதல் நிலை (1951 – 1954)*
6) முதுகலை வரலாறு	*சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப் படிப்பு (1956)*
7) முதுகலை இலக்கிய ஆராய்ச்சி	*"பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்" (ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)*
8) மொழியியல் பெருஞ்சான்று	*அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)*

9) முனைவர் பட்டம்		பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1978.
10) ஆசிரியர் பணி	1.	6 ஆண்டுகள், பயிற்சி ஆசிரியர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 – 1959.
	2.	7 ஆண்டுகள், துணைப்பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை, 1962 – 1968
	3.	2 ஆண்டுகள், முதல்வர், மணலித் தமிழ்க் கல்லூரி சென்னை 1968 – 1969
	4)	3 ஆண்டுகள் திருக்குறள் ஆராய்ச்சித்துறைத் தலைவர் சென்னை பல்கலைக்கழகம், 1969 – 1972.
	5)	19 ஆண்டுகள் இணைப்பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியில்) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தெரிந்த பிறமொழிகள்:		சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்
விருதுகள்	1.	பிராங்கிலின் ஜெல் மெடல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ.ஹானர்ஸ் படிப்பில் முதல்நிலை பெற்றமைக்காக (1954)
	2.	சாகித்திய அக்காதெமி விருது (1974) திருக்குறள் நீதி இலக்கியம்
	3.	திரு.வி.க விருது 1965

ஆசிரியரின் நூல்கள்

தமிழ் இணைய கல்விக்கழக மின்நூலகம் –
தமிழினையம் – இணையதளத்தில்

https://www.tamil/digitallibrary.inஇல் புத்தகங்களை
படிக்கலாம் - பதிவிறக்கம் செய்யலாம்

(அ) வரலாற்று நூல்கள்:

1. சிந்துவெளி தரும் ஒளி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் - வாழ்வும் மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு – முதல் பகுதி – "விடி வெள்ளி", தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975.
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1977.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு, சங்க காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.
10. Rajaraja, the Great, Madras publications, 1984.

11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.

12. Chieftains of the Sangam Age, 2001.

13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.

14. தமிழ்நாடு வரலாறு சங்கக் காலம் – வாழ்வியல் (நாகரிகமும். பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.

15. History of Tamilnadu (A Birds Eye View Authors Guild of India, 1986.

(ஆ) ஓரங்க நாடகம்:

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.

17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981

(இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974-இல் பெற்ற நூல்)

19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடகநலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.

20. வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.

21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.

22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.

23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.

24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு) பாரி நிலையம், சென்னை, 1979.

25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.

26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம், 1984.

27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.

28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைக்கழகம், 2001.

29. திரு.பூ.ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

(ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.

33. Historical heritage of the Tamils, Vol.I.international Institute of Tamil Studies, Madras, 1983.

34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-1 (பதினெண்கீழ்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

35. திறனாய்வு அணுகுமுறைகள் (க.த.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(உ) தொகுப்பும் பதிப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1971.

37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1972.

38. *Tributes and Translations of Tirukkural*, 1986.

39. *Historical Heritage of the Tamils Dr. S.V.Subramaniyan & Dr.K.D.Thiruavukkarasu IITS, Tharamani*, 1985

(ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம். சென்னை, 1965.

41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு-3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.

42. இலட்சுமிநாத பெஸ்பரூவா,சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

(எ) இலக்கணம்:

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

★★★

ஆசிரியரின் தமிழ்க் கட்டுரைகள்

1950 – 51

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.
2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

1952 – 53

இலக்கியம் காட்டும் எழிலோவியம்:-

3. முல்லை சிரித்தது
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையான்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952-53.
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

1953 – 1954

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.
15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.
16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954
17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.
18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954
19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

1955 – 56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.
21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955
22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" - ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956
23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.
24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.
26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்று கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.
27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.
28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.
30. தமிழகத்தில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.
31. ரோமானியர் கண்ட தமிழகம்,எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)
32. மருதணாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

1960

38. மனிதன் - அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்க காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத் 1960.

1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியஸ் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963.

(நான்கு கட்டுரைகள்)

1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி -5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.
63. நெடுநல்வாடை - திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.
64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.
65. சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.

1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.
67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞானசபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.
68. இன்பம், கல்வி, சென்னை, 1966.
69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.
70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125ஆவது ஆண்டு விழா மலர், சென்னை, 1966.

1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

    சிந்தாதிரிப்பேட்டை, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.
72. பரணியின் பல்சுவை - இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.
73. மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.

1968

74. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.

75. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

76. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

77. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

78. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

79. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

80. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

81. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

82. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை - 1, 1968.

1969

83. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

84. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

85. தமிழகத்தின் இசைக் கருவிகள்,குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

86. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

87. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னை பல்கலைக்கழகம், சென்னை, 1969.

88. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

89. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

90. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

91. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

92. திருவள்ளுவர்ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.

93. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

94. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)

95. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

96. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

97. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை 1969.

1970

98. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

99. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

100. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர் 1970.

101. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

102. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழக தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

103. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு - திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

104. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

105. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

106. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

107. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

108. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

110. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப்பொன்விழா மலர், கழகம் சென்னை -1, 1970

111. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை -7, 1970.

1971

112. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை 1971.

113. தமிழகத்தின் ஆண்டுக்கணக்குமுறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

114. வரலாற்றின் எச்சரிக்கை விசயநகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

115. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971

116. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

117. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாமி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

118. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

1972

119. வள்ளுவர் கண்ட மனிதன் - 1, தமிழியல் (Jots) சென்னை, 1972.

120. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

121. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

122. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

123. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

124. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.

125. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

126. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.

127. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

128. தமிழர் திருநாள், சமயம், 1972.

1973

129. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

130. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.

131. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

132. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்;க்க சங்கமலர், காஞ்சி 1973.

133. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

134. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973

135. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.

136. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர் நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

137. வள்ளுவர் கண்ட மனிதன் -2, தமிழியல், சென்னை, 1973.

138. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

139. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு - 1973.

140. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு 1973.

1974

141. சும்மா, மலைச்சாரல், சோளிங்கபுரம், ஏப்ரல், 1974.

142. நூறாண்டு வாழ்க - திறணாய்வு, தமிழ்ப்பணி, 1974.

143. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

144. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

145. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.

147. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

148. தாயா? தமக்கையா? ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

149. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

1975

150. எழிலோவியம் காணவாரீர்.

151. தமிழிற்கு ஓர் அரன்

152. அறிஞர் அறவாழி

153. சிலப்பதிகாரத்தின் மாண்பு

154. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை - 18, 1975.

1977

155. டாக்டர். மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை - 30, 1977.

1978

156. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 10, ஜூலை 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பர் 1978

164. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை - 20, 1978.

165. நூல் அறிமுகம் - காளிதாசன் உவமைகள், புலமை தொகுதி -4, பகுதி 3,4, சென்னை -18, 1978.

166. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.

1979

167. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆகஸ்டு 1979.

168. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979

169. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010-ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.

1980

170. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை 12, தொகுதி 1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.

171. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்

172. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை - 17.

173. மறுமலர்ச்சி

174. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.

175. தமிழ் உரைநடை

176. உவமை

177. பொற்காலம்

178. பாவியலில் கற்பனை

179. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.03.1978.

180. கல்லணையைக் கட்டியது யார்?

181. பசி

182. அறிவு என்பது என்ன?

183. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி

184. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

185. முடமோசியார் - யவனரா?

186. பழியும், பாவமும்

187. வினையின் பயன்

188. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி

189. இருட்டறை

190. மதுராந்தகம்

191. குறவஞ்சி

192. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

193. வேளிர்

194. மனம்

195. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

196. தேசீயம்

197. வரலாற்றுக் காலம்

198. வள்ளலார் காட்டிய வழி

199. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

200. வேதங்கள்

201. வீரயுகப் பாடல்கள்

1988

202. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர் 1988

203. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர் 1988

204. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

205. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

206. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும்

206. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

207. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல்1989

208. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

209. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

210. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

211. பகைத் திறந்தெரிதல்

212. நான் கண்ட அடியார்க்கு நல்லார் தி.கி.நாராயணசாமி நாயுடு 80 ஆண்டு நிறைவு விழா மலர் 30.10.1985

213. திருநெறி ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்

214. தமிழரின் கலைக் கோட்பாடு உ.த.ஆ. நிறுவனம் 09.02.1987

215. பழந்தமிழ்க்குடிகள், 'முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

216. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் - வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை-4, நாள் 07.11.71

217. A Tamil Savant From the City of Madras (08.01.1901 to 27.08.1988) (08.01.1901 வழ 27.08.1988)

218. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

219. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் - உ.த.ஆ. நிறுவனம் 08.06.1977 83-ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

220. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுக்கங்களும்

221. படிமங்கள்

❑

நூலாசிரியர், அவர் படைப்புகள் பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க / பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர் படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN: 978-93-48345-97-4

978-93-48345-97-4